
கல்கி
KALKI
26.2.67
40 காசு

கல்கி

பொருளடக்கம்

பராபவ, மாசி 14 :: பிப்ரவரி 26

நினைவுத் திரையில்...

பகுத்தறிவும் இந்தக் காலத்துக் கல்வி அறிவும் பெற்றவர்களுக்கு நமது புராண இதிகாசங்களைப் படிக்கும் போதெல்லாம் சிற்சில சந்தேகங்கள் உண்டாகத்தான் செய்யும். "இராவணனுக்குப் பத்து தலைகள் இருந்தனவா?" என்று கேட்பார்கள். "தாடகை மலையைத் தூக்கி எறிந்திருக்க முடியுமா?" என்று சந்தேகப்படுவார்கள். "சூரபத்மனுக்கு யானை முகத்தோடு ஒரு தம்பியும் சிங்க முகத்தோடு மற்றொரு தம்பியும் இருந்தது உண்மையா?" என்பார்கள்.

சரி, தற்கால இலக்கியங்களுக்கு வருவோம். பகுத்தறிவுக்காகப் பிராணனைக் கொடுத்துப் போராடுவோரின் எழுத்தோவியங்களைப் பார்ப்போம்.

"வங்காளத்தில் பஞ்சப் பேய் கோரதாண்டவம் ஆடுகிறது!" "தோழர் புகழ் புரட்சியோர் சிம்ம கர்ஜனை செய்தார்;" "வைதிகக் குடுக்கைகள் தர்ப்பைப் புல்லை உருவிக் கொண்டு போருக்குக் கிளம்பி விட்டன!" என்றெல்லாம் எழுதுவார்கள்.

'பஞ்சம் என்பது பேயா? அது பரத நாட்டிய சாஸ்திரம் படித்துத் தாண்டவ நர்த்தனம் கற்றுக் கொண்டதா? குடுக்கைகள் போருக்குக் கிளம்புமா?' என்றெல்லாம் கேட்போமானால் இதெல்லாம் விஷயத்தைச் சரியாக விளக்கி மனத்தில் பதியச் செய்வதற்காகத்தான் என்று பதில் சொல்லுவார்கள்.

நமது புராண இதிகாசங்களை எழுதிய பெரியோர்களும் இந்தக் காலத்து ஆசிரியர்களைப்போலவே சிற்சில கருத்துக்களை நன்றாக விளக்குவதற்காகச் சில சிருஷ்டிகளைச் செய்திருக்கக் கூடாதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

["கர்நாடகம்" - "குமார விஜயம்" நாடக விமர்சனத்தில் ஒரு பகுதி] கல்கி, ஆகஸ்டு 31, 1947

இலங்கையில் 40 சதம் - தபால் செலவு தனி

சூரியோதயத்துக்குக் காத்திருக்கிறார்கள் !



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்



மலர் 26 ✻ இதழ் 30

விடுதலைப் பெரும் போர்

இந்த இதழ் வாசகர்கள் கையி லிருக்கும் போது தேசம் முழுவதிலும் வாக்குப் பதிவு முடிந்திருக்கும். வறுமை, விலைவாசி உயர்வு முதலிய பல கொடுமைகள் தலைதூக்கியிருக்கும் சமயம் இது; எழுத்தறிவில்லாதாரைப் பெருமளவில் கொண்டுள்ள நம் நாட்டின் ஐம்பது கோடி மக்கட்தொகையைப் புராதன தருமத்தில் எஞ்சியுள்ள சிறிதளவு அம்சம் மட்டுமே கட்டுப்பாட்டில் வைத்துள்ளது; அவ்வாறிருந்தும், பொதுத் தேர்தல் அமைதிக்குப் பங்கமின்றி இவ்வளவு சீராக நடந்திருப்பது பெருமைக்குரியது. ஆங்காங்கு சில கொலைகள், கல்வீச்சுக்கள், ரகளைகள் நடைபெற்றபோதிலும், வயதுவந்தோர் யாவருக்கும் வாக்குத் தரும் இந்தப் பெரிய தேர்தல் மொத்தத்தில் செவ்வையாகவே நடந்துள்ளது. சச்சரவுகள் ஏற்படினும் சரி, சமாதானமாகவே நடைபெறினும் சரி வாக்குப் பதிவின் போக்கைக் கொண்டு மட்டும் தேர்தல் முடிவை நிர்ணயிக்க முடியாது. சர்க்காரின் கொள்கைகளுக்கும் நடைமுறை வாழ்க்கை நிலைக்குமுள்ள சம்பந்தத்தை அறியாத வாக்காளர் அநேகர். அவர்கள் தேர்தலுக்குத் தொடர்பில்லாத அம்சங்களைக் கொண்டே வாக்களித்திருக்கக் கூடும். எப்படியும் ஏதோ ஒரு சர்க்கார் தேவை; அது ஏற்படவும் செய்யும். வழி தெரியாதவர்கள் குருடர்கள் காட்டும் வழியைப் பின்பற்றிச் செல்லும் முறையில் தேர்தல் அமையாதிருந்தால் அதுவே போதும்.

எந்த சர்க்கார் ஏற்பட்டாலும் மக்கள் கலகம் செய்ய மாட்டார்கள். நம் மக்களின் பண்பே ஒழுங்கினத்தையும் வன்முறையையும் பின்பற்றுதிருப்பது தான். கொடுங்கோல் அரசாட்சி நடந்தாலும் அதற்கு அடிபணிந்து நடக்க வேண்டும் என்பதை நமது மக்கள் ஒரு சம்பிரதாய விதிபோலவே கொண்டுள்ளனர். எனவே, சிலர் சொல்வது போல் புதிய சர்க்கார் அமைக்கப்பட்ட பின் பெரும் கலகம் ஏற்பட ஏதுவில்லை.

புதுச் சர்க்கார் என்பது ஒரு கட்சிச் சார்பற்றதாகவும், திறமைசாலிகளைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்று ராஜாஜி கூறி வருகிறார். 'திறமைசாலிகள்' என்பதைத் திரு சஞ்சீவ ரெட்டி அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டு 'பட்டதாரிகளும், பேராசிரியர்களும்தான் மந்திரிகளாக இருக்க வேண்டும் என்று ராஜாஜி சொல்கிறார்' என்கிறார். ராஜாஜி குறிப்பிடும் திறமை கலாசாலைப் படிப்பால் மட்டும் பெறக் கூடியதல்ல. பொதுவாக நல்ல உலகியல் ஞானமும், பகுத்தறிவும், நிதான புத்தியும், கட்சிச்சார்பின்மையும் படைத்தவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுத் தேச விவகாரங்களைத் தைரியத்துடன் கையாண்டு, அரசாங்க அதிகாரிகளின் விசுவாசத்தையும் பெற முடியுமானால் அதுவே திறமைசாலிகளின் சர்க்கார். நிர்வாகம் சீராக நடக்க வேண்டுவதே இன்று நாட்டின் தலையாய தேவை. அதற்கு அதிகாரிகள் நேர்மையுடனும் திறமையுடனும் செயலாற்ற வேண்டும். மந்திரிகள் அதிகாரிகளுடைய மதிப்பையும் விசுவாசத்தையும் பெறக் கூடியவர்களாக இருந்தால், நிர்வாக இயந்திரம் தானே தூய்மை பெறும். நாட்டின் அத்தியாவசியத் தேவை பூர்த்தி பெறும். இதைத்தான் ராஜாஜி விரும்புகிறார்.

மந்திரிகளுக்கு அநுபவம் வேண்டாமா என்பது ஒரு கேள்வி. தேர்தலுக்கு முந்திய வாரத்தில் கிளர்ந்தெழுந்த பல வாதங்களில் இது ஒன்று. '1937-ல் காங்கிரஸ் மந்திரி சபைகளை அமைத்தபோது அதற்குப் பூர்வ அநுபவம் இருந்ததா?' என்பதை யோசித்தால் இதற்கு விடை கிடைத்து விடும். மேலும், இன்று எதிர்க்கட்சிகளுக்கும் ஒரு விதத்தில் 'அநுபவம்' ஏற்பட்டுள்ளதை ராஜாஜி குறிப்பிடுகிறார். அதாவது அவை ஆட்சியை நடத்தாவிடினும் ஆட்சியாளர்களின் தவறுகளையும் தோல்விகளையும் உன்னிப்பாகக் கவனித்து வந்திருக்கின்றன.

எனவே, இவற்றைத் தவிர்த்து, வேறு விதத்தில் நிர்வாகம் நடத்த வேண்டும் என்ற படிப்பினை பெற்றுள்ளன. 'அநுபவம் வாய்ந்தவர்கள்' என்று சொல்லிக் கொண்டே அந்நியக் கொள்கை, உள்நாட்டுப் பொருளாதாரம் இரண்டிலும் தோல்வி கண்டிருப்பவர்கள் காங்கிரஸார். இவ்வாறு தோல்வியில் அநுபவஸ்தராக விளங்குபவர்கள் மேலும் அதே தோல்விப் பாதையில் பிடிவாதமாகச் செல்ல விருக்கும்போது, அவர்களை விடுத்து, அத் தோல்விகளைத் தவிர்க்கக் கூடியவர்களிடமே ஆட்சிப் பொறுப்பைத் தருவதுதான் யுக்தம். பொதுத்தேர்தல் இதைச் செய்திருந்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

'ஆட்சியை மாற்றக் கூடாது; இருபது வருஷங்கள் உடன் வாழ்ந்த கணவனைக் கைவிடுவது தருமமா?' என்று ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கேட்டிருக்கிறார். ஹிந்து மனப்பான்மையைத் தொட்டு மக்களைக் கவருவதற்காக டி. டி. கே. வெளியிட்ட இக் கருத்து ஜனநாயக சாஸனத்துக்கே விரோதமானது. மக்களின் விருப்பப்படி சர்க்காரை மாற்ற முடிவதுதான் ஜனநாயகத்தின் சாரம். சர்க்காரின் கொள்கைகளையும் சாதனைகளையும் அவற்றின் விளைவுகளையும் ஆலோசித்து அதற்கு ஆதரவாகவோ, எதிர்த்தோ வாக்கைப் பிரயோகிப்பது அல்லவோ ஜனநாயகம்? ஹிந்து விவாக விதிகளை இதில் ஏன் ஸ்ரீ டி. டி. கே. பொருத்துகிறார்?

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி, தானே பதவியில் நீடிப்பதற்கு அநுகூலமாக அது சட்டங்கள் செய்யாமல் கட்டுப்படுத்தக் கூடிய எதிர்க்கட்சியும் ஜனநாயகத்தின் மற்றொரு முக்கியமான அம்சமாகும். முன்பே பலமுறை கூறிய இவ்விஷயங்களைத் தேர்தல் முடிந்து விட்ட போதிலும், இப்போது மீண்டும் நினைவுகூர்வது நலம். ஏனெனில், தற்போது முடிந்தது 1967ம் வருஷத்திய பொதுத் தேர்தல்தான்; மக்களின் விடுதலைக்கான போராட்டம் இன்னும் முடிந்துவிட வில்லை.

1959ம் ஆண்டில் சுதந்திரக் கட்சி என்ற பெயரில் தொடங்கப்பட்ட விடுதலை இயக்கத்தின் போராட்டம் வெற்றி காணும் வரையில் இடையறாமல் நடத்தப் பெற வேண்டியதாகும். மக்கட் சமுதாயத்தின் உயிர் நிரந்தரமானது. அதன் நல்வாழ்வினைச் சுதந்திரத்தின் மூலம் அடைவதற்காக நடைபெறும் யுத்தம் அதன் லட்சியத்தை எய்தும் வரையில் தொடரப்பட வேண்டும். நடுவில் ஏற்படும் தோல்வியோ ஏமாற்றமோ அந்த மகாயுத்தத்தை நிறுத்தி விடாது. தொழிலாக்கத்தின் கழுத்தை நெரிப்பதையும், மக்களின் வாழ்வைச் சர்க்காரின் தயவுக்கு விடுகிற போக்கையும் தடுத்து, மூலசாஸனம் கூறும் மக்கள் உரிமைகளை மீண்டும் நிலைநாட்டுமனவும் போராட்டம் நடைபெற வேண்டும்.

எது குழப்பம்?

அறிவு குழம்பியவர்களுக்குத் தெள்ளத் தெளிந்த உண்மைகளும் கூடக் குழப்பமாகத் தென்படும் போலும். 'எந்தக் கட்சிக்கு வாக்களித்தால் அது ஸ்திரமான சர்க்கார் அமைக்க முடியும் என்பதைப் பற்றி மக்கள் சிந்தித்து அதற்கு அநுசரணையாக வாக்குப் போட வேண்டியதில்லை. அவர்கள் மனச் சாட்சி கூறுவதற்கேற்ப, கொள்கையின் அடிப்படையில்தான் வாக்களிக்க வேண்டும். இதன் பின், மக்கள் சபையில் கட்சிகளின் நிலவரம் எப்படி இருந்தாலும் சர்க்கார் அமைக்கும் பிரச்னையை ராஷ்டிரபதி சமாளித்துவிடுவார்' என்று ராஜாஜி கூறினாரல்லவா? இது தான் அறிவு குழம்பியவர்களுக்குப் புரியவில்லை. 'எந்தக் கட்சியும் மெஜாரிட்டி பெறாவிடில் தேச நிர்வாகமே குழப்பமாகிவிடும். குழப்ப நிலையை உண்டு பண்ணவே ராஜாஜி மக்களைத் தூண்டி விடுகிறார்' என்கிறார்கள்.

பத்துப் பன்னிரண்டு மந்திரிகள் கொண்ட மந்திரி சபை மட்டும் தேச நிர்வாகத்தை நடத்திவிட வில்லை. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி, அல்லது எக்கட்சிச் சார்பு மற்ற தேசிய சர்க்கார் அமைந்தாலும் சரி, அல்லது கேரளத்தில்போல் ராஷ்டிரபதியின் ஆட்சி நடைபெற்றாலும் சரி அன்றாட நிர்வாகத்தை அதிகாரிகளும் மற்ற அரசாங்கச் சிப்பந்திகளும் தடையுறாது நடத்தி வருவார்கள். காங்கிரஸ் கட்சி மெஜாரிட்டி பெறாவிடினும், வேறு கூட்டுச் சர்க்காரோ அல்லது தேசிய சர்க்காரோ அமைக்கப்பட்டாலும் அதன் கொள்கைகளுக்கேற்ப நிர்வாகத்தை அரசாங்க ஊழியர்கள் நடத்தி வருவார்கள். ஒரே கட்சி ராட்சத பலம் பெற்றால்தான் நாட்டின் நிர்வாகம் நடைபெற முடியும் என்கிற நிலையை நமது ஜனநாயக அரசியல் சாஸனம் ஒருகாலும் ஏற்படுத்தாது.

இன்னொரு கேள்வி: 'காங்கிரஸ்தான் மெஜாரிட்டி பெற்று, ஸ்திரமான சர்க்கார் அமைக்க முடியும்; எனவே, அதற்குத்தான் வோட்டுப் போட வேண்டும்' என்றால் தேர்தல் நடத்த வேண்டிய அவசியமேது? கொள்கைகளைச் சீர்தூக்கி, எந்தக் கட்சிக்கு வோட்டுப் போடலாம் என்று வாக்காளர் நிர்ணயிக்கும் போதுதான் பலகட்சிகள் கலந்து கொள்ளும் தேர்தல் முறை அவசியம். கொள்கைகளைப் பற்றிக் கவலைப்படாமல், 'மெஜாரிட்டி இன்ன கட்சிக்குத்தான் வரும்' என்று முன்னதாகவே தீர்மானித்துக் கொண்டு அதற்கே வாக்களிக்க வேண்டுமெனில், கோடாநு கோடி ரூபாய் செலவழித்துத் தேர்தல் நடத்துவானேன்?

நாட்டில் உள்ள தொகுதிகள் அனைத்தும் எப்படி வோட்டுச் செய்யும் என்ற அநுமானத்தின் மீதே ஒவ்வொரு தொகுதியும் வோட்டுச் செய்ய வேண்டும் என்பது அபத்தம். இதைச் சர்க்காரே ஒரு விதத்தில் ஒப்புக் கொண்டிருப்பதையும் இங்கு

கவனிக்க வேண்டும். 'எல்லா இடங்களிலும் தேர்தல்கள் முடிந்தபின்தான் வாக்குகளை எண்ண வேண்டும்; அவ்வாறின்றி அவ்வப்போது தேர்தல்கள் முடிந்த இடங்களில் வாக்குகள் எண்ணப்பட்டால், இதனாலேயே தேர்தல் நடைபெறாத மற்றத் தொகுதி வாக்காளர்களின் மனப்போக்கு பாதிக்கப்படலாம்' என்ற கருத்தின் மீதே சர்க்கார் பிப்ரவரி 21ந் தேதிக்குப் பிறகு வாக்குகளை எண்ண ஏற்பாடு செய்திருக்கிறது. அதாவது அந்தந்தத் தொகுதிக்காரர்களும், தாங்கள் விரும்பும் கட்சிக்கு அல்லது வேட்பாளருக்கு மனச்சாட்சிப்படி வோட்டளிப்பதே நியாயம் என்பதையும், மற்றத் தொகுதிகள் என்ன செய்துள்ளன என்று பார்த்து அதை ஒட்டி வாக்களிக்கக் கூடாது என்பதையும் அரசாங்கமே ஒப்புக் கொண்டிருக்கிறது. இதன் விளைவாக மக்கள்சபைப் பிரதிநிதித்துவம் எப்படி அமைந்தாலும் அதை ராஷ்டிரபதி சமாளிப்பார் என்பதுதான் உட்கிடை. மெஜாரிட்டி கிடைக்கக்கூடிய கட்சி என்பதற்காக ஒன்றை ஆதரிக்கச் சொல்வது, தனித் தனித் தொகுதிகளுக்குரிய இந்தச் சுய உரிமையை மறுப்பதேயாகும்.

மற்றொரு விஷயம்: காங்கிரஸ் இன்று மக்கள் சபையில்தான் பெரும்பான்மை பலம் பெற்றுள்ளது; மக்களிடையே பெரும்பான்மை ஆதரவு பெறவில்லை என்பதை அது சென்ற தேர்தலில் மொத்த வாக்கில் 45 சத விகிதமே பெற்றது நிரூபிக்கிறது. மீதமுள்ள 55 சதம் காங்கிரஸுக்கு எதிராகப் பல கட்சிகளிடையே பிரிந்தது. மீண்டும் காங்கிரஸ், மக்கள் சபையில் மெஜாரிட்டி பெற்றால், பல்லாண்டுகளாகக் காங்கிரஸாட்சியில் அவதியுற்ற மக்களில் மெஜாரிட்டியான காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள் இனியும் பொறுமையாக இருப்பார்களா என்பது கேள்வி. ராஜாஜியின் கருத்துப்படி நம் மக்கள் பெரிய புரட்சியோ, கலகமோ செய்ய மாட்டார்கள். எனினும், சமீப காலமாகப் பெருகி வரும் சில்லறை உபத்திரவங்களான வேலை நிறுத்தம், 'பந்த்', தீ வைப்பு, மாணவர் கிளர்ச்சி . முதலியன மேலும் அதிகரித்தாலும் ஆச்சரியமில்லை. அதாவது எதிர்க்கட்சிகளின் சர்க்காரோ அல்லது தேசிய சர்க்காரோ அமையாமல், காங்கிரஸ் சர்க்கார் ஏற்பட்டால்தான் தேசத்தில் குழப்பம் ஏற்பட ஓரளவு இடமிருக்கிறது.

ம. பொ. சி.யின் வெற்றி!

திரு ம. பொ. சி. அவர்களின் முப்பதாண்டு கால இலக்கியப் பணிக்கு வெற்றி கிடைத்துவிட்டது. அதுவும் அவர் தேர்தல் களத்தில் மும்முரமாக ஈடுபட்டுத் தேர்தல் நாள் நெருங்கிக் கொண்டிருக்கையில் இந்திய சாகித்திய அகாதமியார், அவர் எழுதியுள்ள ''வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு'' என்ற நூலைப் பரிசுக்குரிய நூலாக அறிவித்தது. தமிழ் இலக்கிய அன்பர்களின் உள்ளங்களையெல்லாம் — சமயத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் மனங்களையெல்லாம் — நிறைவு கொள்ளச் செய்தது.

எழுத்துக் கோப்பாளராக வாழ்க்கை தொடங்கிய திரு ம. பொ. சி. எழுத்துக்களுக்குப் பின்னிருந்த பொருளிலும் இயல்பாக ஈடுபாடு கொண்டதால் காந்திய இயக்கத்தில் ஈடுபட்டு, அரசியல்வாதியானார். அரசியல் அவரைச் சில காலம் சிறையில் வாழ வைத்தது; சில காலம் அஞ்ஞாத வாசம் செய்யவும் வைத்தது. இச்சமயங்கள் வள்ளுவருடனும், கம்பருடனும் அவரைத் தொடர்பு கொள்ளச் செய்தன. ஆகவே, அவர் அரசியல் மேடைகளை இலக்கிய மணம்கமழும் இலக்கிய அரங்குகளாகச் செய்தார். அதே போல் இலக்கிய மேடைகளில் அரசியல் தத்துவங்களை ஆங்காங்கே கோடி காட்டிக் கொண்டே போவார்.

ஆங்கிலக் கல்வி பயிலாதபோதிலும் திரு ம. பொ. சி. பட்டதாரிகளும் வியக்கும் வண்ணம் பேசவும் எழுதவும் கூடிய ஆற்றல் பெற்றவர். தமிழ் நாட்டு மண்ணின் செழுமைக்கு ஓர் அரிய எடுத்துக்காட்டாக விளங்கி வருபவர். அவருக்குப் பரிசு கொடுத்ததால் சாகித்திய அகாதெமி நடுநிலையில் நின்று பணியாற்றுகிறது என்ற நற்பெயரைத் தட்டிக் கொண்டு விட்டது!

அரசியல் வாழ்க்கைக்குப் பின்னே தொடங்கிய இலக்கியப் பணிக்குப் பரிசும் பாராட்டும் கிடைத்துவிட்டது சுபசூசகம். அவரது அரசியல் பணிக்கும் மக்கள் தங்கள் நன்றியைத் தெரிவித்திருப்பார்கள் என்று நம்புவோமாக!

வாழ்க, ம. பொ. சி!





முதலில் நான்காம் திட்டத்தைக் காட்டியே காங்கிரஸ், தனது தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கியது. நடைமுறைக்கு அசாத்திய மான இத்திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று அப்போதிலிருந்தே சுதந்திரக் கட்சியும் அடித்துக் கூறி வந்தது. தேர்தல் பிரசாரத் தின் நடு வழியிலேயே காங்கிரஸும் இத்திட் டத்தைக் கைவிட்டு விட்டது. இதுவே சுதந் திரக் கட்சியின் முதல் வெற்றி ; முக்கியமான வெற்றி. தேர்தலுக்குப் பிறகுதான் நான்காம் திட்டத்தைப் புனராலோசனை செய்யப் போவதாகக் காங்கிரஸ் கூறி விட்டது. அதாவது இப்போது எந்தத் திட்டத்தையும் கொள்கையையும் வாக்காளர் முன் வைக்கா மலே அவர்களின் வாக்கைக் காங்கிரஸ் கேட்கிறது. 'கூட்டணிக்குக் கொள்கையில்லை; திட்டமில்லை' என்கிற காங்கிரஸிடமே கொள் கையோ திட்டமோ இல்லை. பெர்மிட்—லைசென்ஸ் — கோட்டா ஆட்சி மூலமும், கடுமையான வரி, அபரிமிதமான அந்நியக் கடன்கள், பண வீக்கம் இவற்றின் மூலமும் அடையக்கூடிய 'சோஷலிஸம்' என்ற புரி யாத இலட்சியத்தைக் காட்டியே அது இன்ன மும் வாக்குப் பெற முயல்கிறது.

* * *

கடினமான ஒரு பிரச்னையைத் தீர்க்கத் தொடங்கும் போது எந்த இடத்தில் தொடங்குகிறோம் என்பது முக்கியம். முதலில் இந்தியாவும் பாகிஸ்தானும் நட்பை ஏற்படுத்திக் கொண்டு, அதன் பிறகு காச் மீரப் பிரச்னையைக் காச்மீர மக்களின் நல னுக்கேற்ப முடிவு செய்ய வேண்டும் என்பது என் கோரிக்கை. இந்தியா — பாகிஸ்தான் நட்பை ஏற்படுத்திக் கொள்வதற்கே முதல் படியாகக் காச்மீரப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பது தவறான கருத்து. இதை முயன்று பார்த்துப் படு தோல்வியும் அடைந்து விட்டோம் என்பது கண்கூடு. இனி மாற்று வழியைப் பின்பற்று வோம். மேற்கு ஜெர்மனியையும் கிழக்கு ஜெர்மனியையும் ஒன்றாக இணைக்கும் பிரச்னை யைப் பனிப் போர் முடிந்த பிறகு கவனிக்க வேண்டும் என்றும், மாறாக, ஐக்கியம் பெற்ற தற்குப் பிற்பாடே பனிப் போர் முடியும் என்று கருதலாகாது என்றும் வில்லி ப்ராண்ட் அவர்கள் ஐரோப்பிய கவுன்ஸிலில் கூறியுள் ளார். இது நம் பிரச்னைக்கும் பொருந்தும். அறிவின்றி ஆயுதப் போட்டியில் பணத்தை விரயம் செய்வதை நிறுத்தி, மாற்று வழியை முயல்வோம்.

* * *

முஸ்லிம்களின் வோட்டுக்களுக்கு வலைவீச விரும்பி ஸ்ரீ எஸ். கே. பாட்டீல் அவர்கள் ஒரு முஸ்லிமை ராஷ்டிரபதியாக வைத்துக் கொள்ளலாம் என்கிறார். இதற்குப் பத் திரிகைகள் தரும் தலைப்பைப் பார்த்தால் தற்போது உபராஷ்டிரபதியாக உள்ள ஜாகிர் ஹுஸைன் சாகேப் அவர்களையே ராஷ்டிரபதி பதவிக்குப் பாட்டீல் விரும்புவது போல் மக்கள் எண்ணக் கூடும். உண்மையில் ஜாகிர் சாகேப் அவர்களுக்குரிய ஸ்தா னத்தைத் தராமல் ஏமாற்றவே எல்லாம் செய்யப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கூட்டத் துக்குப் பொருந்தாத அளவுக்கு ஜாகிர் சாகேப் விஷய ஞானம் பெற்றவர்; பிறப்பிலேயே கண்ணியமானவர்; மென்மையானவர்.

* * *

'ஸ்திரத் தன்மை' என்ற கந்தல் ஒன் றைக் கொண்டு மட்டுமே இப்போது காங் கிரஸ் தனது அசங்கியக் கோலத்தை மறைத் துக் கொள்ள முயல்கிறது. காங்கிரஸ் ஸ்தாபனமே பல போட்டிகளாலும், பிளவு களாலும் உடைந்து போன பின்பும் மக்களை ஏமாற்ற 'ஸ்திரத் தன்மை' பற்றிப் பேசு கிறார்கள். தேசப் பொருளாதாரத்துக்கு உற் பாதம் நேரவிருக்கும் சமயத்தில் இந்த விரிசல் வீட்டில் தஞ்சம் புகுவார்களா? 'ஸ்திரத் தன்மை' பற்றிப் பேசும் காங்கிரஸுக்குத் தேர்தலுக்குப்பின் தங்கள் மக்கள் சபைத் தலைவர் யார் என்பதே தெரியாது. அவ் வளவு போட்டியும் பொறாமையும் உள்ளன. காங்கிரஸை எதிர்க்கும் நேர்மையான எதிர்க் கட்சிகளின் கூட்டுச் சர்க்கார், உளுத்துப் போன காங்கிரஸ் அமைக்கக் கூடிய அர சாங்கத்தைவிட நிச்சயமாக ஸ்திரமா யிருக் கும். தேச நிருவாகம் எனும் மாளிகையைச் சிதிலம் செய்துள்ள காங்கிரஸிடமே அதைப் புதுப்பிக்கும் பொறுப்பைத் தருவதற்கில்லை. புதுப்பிக்கும் பணி கடினமானது. அதை ஒரு மகத்தான கூட்டுச் சர்க்காரோ, தேசிய முன் னணியோதான் செய்ய வேண்டும்.

* * *

ஆந்திர சுதந்திரக் கட்சித் தலைவர் ஸ்ரீ லட்சன்னா அவர்களின் மனைவி சென்ற காரை ஒரு ரவுடிக் கூட்டம் வழிமறித்து, அவரைக் காரிலிருந்து இழுத்து நையப் புடைத்திருப்பது அதிர்ச்சியூட்டும் சம்பவமாகும். ஸ்ரீ லட்சன்னா சுதந்திரக் கட்சிக்காகச் செய் துள்ள தொண்டு மிகச் சிறப்பானது. அதை அவரது எதிர்ப்பாளரால் அமைதியாகத் தாங்கத்தான் முடியாது. எனவேதான், இத்தகைய காட்டுமிராண்டித்தனம் நடை பெற்றிருக்கிறது. ஸ்ரீ லட்சன்னா குடும்பத் தினருக்கு மனமார்ந்த அனுதாபங்கள்.

* * *

நம்மிடையே சிறந்த அறிவொளி பெற்ற வர்களில் ஸ்ரீ ஸுதீர்கோஷ் ஒருவர். மாரடைப்பு அவரை இவ்வுலகிலிருந்து எடுத் துச் சென்றது மிகவும் துயரகரமாகும். கடின மான சுதந்திரப் போராட்ட காலத்தில்,

கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக அவர் மிகவும் அந்தரங்கசுத்தமாக, சலியா உழைப்பும் கவனமும் படைத்த தொண்டராகப் பணியாற்றினார். சுதந்திரத்தையும் சமாதானத்தையும் விரும்பும் அமெரிக்க — பிரிட்டிஷ் நண்பர்கள் பலரும் ஸ்ரீ கோஷின் மறைவினால் துயரமடைந்திருக்கின்றனர்.

ஃஃஃ

தமிழகம் முழுவதுமுள்ள சர்வகலாசாலை மாணவர்கள் சமீபத்தில் கூடி, ஆங்கிலத்தின் இடத்தில் ஹிந்தியை அமர்த்தக் கூடாது என்று வன்மையாகக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். உலகின் சரித்திரம், பண்பாடு, அறிவு இவற்றை நமக்கு நூறாண்டுகளாக வழங்கி, நாகரிக சமுதாயம் ஒருங்கிணைந்து ஆக்க சக்தியாக முன்னேற உதவியது ஆங்கிலமே. அந்தப் பணியை அது இன்றும் தொடர்ந்து செய்கிறது. இதைத் தடுத்து நிறுத்த முயல்வது மடமையும் வியர்த்தமுமாகும்.

என்ன சேதி?

- வித்வான் பாலகிருஷ்ணய்யர்
- அமெரிக்கா செல்லும் தமிழ் எழுத்தாளர்
- சிவராத்திரி கைங்கரியம்

முதுபெரும் வயலின் வித்வான் சென்னை ஸ்ரீ பாலகிருஷ்ணய்யர், சமீபத்தில் காலமானது இசை உலகுக்கு ஏற்பட்ட மற்றொரு பெரிய நஷ்டம். சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பே முன்னணி வித்வானாக விளங்கி, அக்காலத்தில் வாய்ப்பாட்டு மன்னர்களாகப் புகழ் பெற்ற புஷ்பவனம், பிடாரம் கிருஷ்ணப்பா, கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர் போன்றவர்களுக்குப் பக்க வாத்தியம் வாசித்தவர் ஸ்ரீ பாலகிருஷ்ணய்யர். சங்கீத நாடக அகாடெமியும் சென்னை சங்கீத வித்வத் சபையும் இவரைக் கௌரவித்துள்ளன. அவரது மறைவினால் துயருற்ற அவருடைய குடும்பத்தினருக்கு நம் அனுதாபங்கள்.

அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து ஒரு நாட்டைக் காக்கப் போர்ப் படைகளை அனுப்பும் அமெரிக்கா, சமாதானக் காலத்தில் ஒரு நாட்டின் ஆக்கப் பணிகளில் பங்குபெற அமைதிப் படையையும் அனுப்பி வைக்கிறது. அமெரிக்கக் கலைஞர்கள் பலர் மற்ற நாடுகளுக்குச் சென்று மக்களை மகிழ்விப்பதுடன் அமெரிக்கக் கலாசாரத்தைப் பிற தேசத்தவர் புரிந்து கொள்ளவும் உதவுகிறார்கள். இசைத் தட்டைத் திருப்பிப் போடுவது போல இதன் மறுபக்கத்தையும் அமெரிக்கா கவனிக்கிறது. பிற நாடுகளிலிருந்து கலைஞர்கள் அமெரிக்கா செல்லவும் மாணவர்கள் அங்கு சர்வகலாசாலைகளில் உயர் கல்வி பெறவும் அமெரிக்காவே பொருளுதவி செய்து வரவேற்கிறது. இப்படியாக சர்வதேச நாடுகளிடையே மன ஒற்றுமையும் நட்புணர்ச்சியும் வளரும் விதத்தில் பல கல்வி - கலாசார திட்டங்களை அமெரிக்க அரசாங்கம் நடத்தி வருகிறது.



திரு மணியன்

இத்தகைய திட்டங்களுள் ஒன்றின் கீழ் ஆனந்தவிகடன் துணை ஆசிரியர் ஸ்ரீ மணியன் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் செய்ய அழைக்கப்பட்டுள்ளார் என்பதை அறிந்து மகிழ்கிறோம். ஸ்ரீ மணியன் விகடனில் எழுதிய நாவல்களாலும் கட்டுரைகளாலும் தமிழர்களிடையே பிரபலமாக விளங்குகிறார். இவர் அமெரிக்காவில் இருக்கும் போது பல அமெரிக்கப் பத்திரிகைகள், சஞ்சிகைகளுடன் தொடர்பு கொண்டு அவை உருவாகும் விதத்தை ஆராய்வார்.

மார்ச்சு மாதம் இரண்டாவது வாரம் புறப்படும் ஸ்ரீ மணியனின் சுற்றுப்பயணம் அவருக்கும் தமிழ்ப் பத்திரிகை உலகுக்கும் பயனுள்ளதாக அமைய வாழ்த்துகிறோம்.

சிவராத்திரியை முன்னிட்டுத் தியாகராய நகர் சிவ விஷ்ணு ஆலயத்தில் மார்ச் 9-ந் தேதி தொடங்கி, பத்தாந் தேதி காலை வரையில் இடைவிடாமல் ஸ்ரீ ருத்ர ஜபமும் ஹோமமும் நடைபெறுகின்றன. தற்போது கிரகங்களின் சேர்க்கையால் உலகுக்கு ஏற்படக்கூடிய தீங்குகளைத் தடுத்து நிறுத்தும் உத்தேசமும் இதில் கலந்துள்ளது. சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரவர்கள் முன்னின்று நடத்தி வைக்கிறார். கால் லட்சம் ரூபாய் செலவில் நடைபெறும் இப்புனித கைங்கரியத்துக்குப் பொருளுதவி புரிய விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேணும்: ஸ்ரீ கே. ராமசந்திரய்யர், பொருளாளர், சிவ—விஷ்ணு ஆலயம், தியாகராயநகர், சென்னை—17.

அறிவை உருவாக்க எண்ணை உதவுகிறது.

அச்சுக்கலை அறிவை வளர்க்கவும் பரப்பவும் பெரிதும் உதவுகிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக புராதன எகிப்தியர்கள் விலங்கினங்களின் எலும்பிலிருந்து கிடைத்த கரிப் பொருளுடன் எண்ணையும் சேர்த்து மை தயாரித்தார்கள். இன்றும் அச்சிடும் மை தயாரிப்பில் எண்ணை ஒரு முக்கியமான மூலப் பொருளாகும். ■ இதோ, நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு எழுத்திலும் எண்ணை கண்ணுக்குப் புலப்படாத அம்சமாக இருந்து கொண்டு செய்திகளையும் அறிவையும் பரப்ப உதவுகிறது ■ எண்ணை நமது அன்றாட வாழ்க்கையில் ஒரு பிரதான அங்கம் வகித்து வருகிறது. தொழில், விவசாயம், மற்றும் போக்குவரத்து முதலான பல துறைகளிலும் தேவைப்படும் உயர்தர எண்ணை வகைப் பொருட்களை இண்டியனுயில் வழங்கி வருவதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் சீருடன் இயங்கப் பெரிதும் துணை நிற்கிறது.

— பொருளாதார சுபீட்சத்திற்கான ஒரு தேசிய பொறுப்புறவு

இண்டியன் ஆயில் கார்ப்பொரேஷன் லிமிடெட்



mas IOC 6197 C TAM



அறுவைச்சிகிச்சைக்கு பிளாஸ்டிக் கத்தி

★ டெலிவிஷன் மூலம் மாணவர்களுக்கு இரண சிகிச்சை முறைகளைக் கற்றுத் தரும் டாக்டர்கள் தற்போது பிளாஸ்டிக்கில் செய்யப்பட்ட கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள். எஃகுக் கருவிகளைப் பயன்படுத்தினால், திரையில் அவை பெரிய அளவில் கறுப்பு நிழலாக விழுவதால், உன்னிப்பாகக் கவனித்து அறுவை முறைகளைத் தெரிந்து கொள்வதற்கு இடையூறாக இருக்கிறதென்று மாணவர்கள் புகார் செய்ததன் பேரில் பிளாஸ்டிக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் வழியாக ஒளி ஊடுருவுகிறது. எதுவும் மறைக்கப்படுவதில்லை. அறுவைச் சிகிச்சையை முழுமையாகப் பார்க்கலாம். எனினும், இவை எஃகைப் போல உறுதியானவை. பிளாஸ்டிக்கில் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சைக் கருவிகள் பல, தற்போது பல மருத்துவ மனைகளில் பயன்படுத்தப்படுகின்றன. – யூ. பி. எஸ்.

ஏட்டிக்குப் போட்டி!

★ 'அணு'வின் தந்தை எனப்படும் "ருதர் போர்டு பிரபு"வை ஒரு பத்திரிகையாளர் சந்தித்து அணுவைப் பற்றி ஒரு கட்டுரை எழுத அவரது உதவி வேண்டும் என்று கோரினார். ஆனால் ருதர்போர்டு பிரபுவோ அணுவின் உட்கருத்தை எளிய முறையில் விவரிப்பது கஷ்டம் என்று கூறினார். இதைக் கேட்ட பத்திரிகை நிருபர், "நாம் முயன்று பார்க்காமலே முடியாது என்பானேன்?" என்றார். ருதர்போர்டுக்குக் கோபம் வந்துவிட்டது. அணுவைப் பற்றித் தாம் ஆராய்ச்சி செய்து 'விஞ்ஞான மொழி'யில் எழுதி வைத்திருந்த நோட்டுப் புத்தகத்தை எடுத்து. "அவ்வளவு மேதாவியாக இருந்தால் இதைப் பார்த்து எழுதிக் கொள்ளுங்களேன்" என்று கூறினார். பத்திரிகையாளருக்கு அந்தக் கட்டுரையில் தலைகால் ஒன்றும் புரியவில்லை. அவர் உடனே சாமர்த்தியமாகத் தம் கருக்கெழுத்து நோட்டுப் புத்தகத்தை எடுத்து, "லார்டு ருதர் போர்டு! இந்த நோட்டுப் புத்தகத்திலுள்ளதை முதலில் நீங்கள் மொழிபெயர்த்தால் பிறகு நான் உங்களது 'விஞ்ஞான பாஷை'யை மொழிபெயர்க்கிறேன்" என்று ஒரு போடு போட்டார். ருதர்போர்டால் ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. விளைவு: அணுவைப் பற்றி அனைவருக்கும் புரியக்கூடிய ஒரு நல்ல கட்டுரை பிறந்தது.

ஆதாரம்: "ஸயன்ஸ் டுடே."
தகவல்: வி. சம்பத்குமார்



புதிய தடயம்!

★ கைரேகை, கால் தடம் முதலிய தடயங்களைக் கொண்டு மட்டுமல்ல, பற்களைக் கொண்டும் குற்றவாளியைக் கண்டுபிடிக்கலாம்! சமீபத்தில் பிரான்ஸில் கம்ப்ரோன்ட் என்னுமிடத்தில் உயர்தர ஹோட்டல் ஒன்றில் திருட்டு நடந்துவிட்டது. போலீசுக்கு, குற்றவாளியைப் பிடிக்கத் தடயங்களும் சரியாகக் கிடைக்கவில்லை. கடைசியில் குற்றவாளி பாதி கடித்து விட்டுப் போட்டிருந்த ஆப்பிள் பழத்தில் பதிந்திருந்த பற்களின் அடையாளங்களைக்கொண்டு உண்மைக் குற்றவாளி ஆல்பர்ட் வாலட்டைக் கைது செய்தனர் போலீசார்!

ஆதாரம்: 'டிட்பிட்ஸ்'
தகவல்: ச. ஸ்ரீதரன்



கொயினா மாத்திரை

★ ஸ்பானியர்கள் சிலர் தென் அமெரிக்காவின் காட்டுப்பிரதேசத்தில் சஞ்சாரம் செய்துகொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒருவனை மலேரியா என்னும் குளிர் ஜுரம் பிடித்தது. ஆகவே அவனுடைய சகாக்கள் அவனை ஒரு குட்டையருகில் மர நிழலில் விட்டு விட்டுச் சென்றுவிட்டனர்.

நோயாளிக்குத் தாகம் எடுத்தது. அவன் மெல்ல மெல்ல நகர்ந்து சென்று குட்டையின் நீரைப் பருகினான். அது ஒரே கசப்பாக இருந்தது. அவன் வேறு வழியின்றிச் சில நாட்கள் வரை அதனையே குடித்து வந்தான். அந்த நீரே மருந்தாக இயங்கி அவனை முற்றும் குணப்படுத்தி விட்டது. அந்தக் குட்டை நீர் அவன் மலேரியாவைக் குணப்படுத்தியதற்குக் காரணம் என்ன? குட்டையில் சின்கோனா என்ற மரத்தின் வேர்கள் இறங்கி யிருந்தன. இதன் இலைகள் நீரில் விழுந்து, நாளாவட்டத்தில் அந்நீரில் கசப்பேற்றி யிருந்தன. இந்த நிகழ்ச்சியின் பிறகுதான் மலேரியா கண்டவர்களைக் குணப்படுத்தச் சின்கோனா மரத்திலிருந்து கொயினா எடுக்கலாம் எனக் கண்டறிந்தார்கள். ஆர். பாஸ்கரன்



சமீபத்தில் நமது நாட்டில் நான்காவது பொதுத் தேர்தல் நடந்து முடிந்தது. இந்தச் சமயத்தில் மற்றொரு விந்தையான தேர்தலைப் பற்றி நினைவு கூர்வது சுவாரசியமாயிருக்கும்.



இந்திய தேசிய காங்கிரஸின் இரண்டாவது மகாநாடு 1886ல் நடைபெற்றது. அதற்குத் தாதாபாய் நௌரோஜி தலைமை வகித்தார். இதற்குப் பின்தான் இந்திய மக்களின் ஆசை அபிலாஷைகளையும் ஹோம் ரூல் பற்றிய கருத்துக்களையும் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் எடுத்துரைக்க வேண்டும் என்று அவர் தீர்மானித்திருக்க வேண்டும். எனினும் இது எவ்வளவு சிரம சாத்தியம் என்பதை உணர்ந்திருந்தார். தமது காங்கிரஸ் நண்பர்களைக் கலந்து ஆலோசித்தார். சிலர் ஊக்கம் அளித்தார்கள். ஆனால் பொதுவாகப் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குள் செல்வதில் வெற்றி பெற்றாலும் அங்கு உருப்படியாக ஒன்றும் சாதிக்க முடியாது என்பதுதான் பலர் அபிப்பிராயம்.

இந்தியாவின் நண்பர்களான சர் வில்லியம் வெட்டர்பர்னும் ரிப்பன் பிரபுவும் இத்திட்டத்துக்கு ஆதரவு அளிக்கவில்லை. இப்படிப் பலர் அதைரியப்படுத்தியும் தாதாபாய் நௌரோஜி எப்படியும் ஒரு முறை போட்டியிட்டுப் பார்த்து விடுவது என்று தீர்மானித்தார். பிரிட்டிஷ் லிபரல் கட்சி தலைவர்களுக்குத் தம்மைப் பற்றி அறிமுகப்படுத்தும் கடிதங்களுடன் லண்டனுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார். அந்தத் தலைவர்கள் இவருடைய ஆசையைக் கண்டு வியந்தனர்.

ஒரு பிரபல தேர்தல்



ஒரு பிரிட்டிஷ் நண்பர், நௌரோஜியை பார்ஸி குல்லாவை நீக்கிவிட்டு, 'ஹாட்' போட்டுக் கொள்ளும்படி யோசனை செய்தார். அப்படிச் செய்தால் அவர் இந்தியர் என்பது அவ்வளவு தெளிவாகத் தெரியாமல் இருக்கும் அல்லவா? தேர்தல் நடைபெறுவதற்கு ஒன்பது நாட்களுக்கு முன்புதான் வாக்காளர்களுக்கு லிபரல் கட்சியின் அபேட்சகராகத் தாதாபாய் நௌரோஜி அறிமுகப்படுத்தப்பட்டார். ஒரு பிரபல இந்தியர் என்று அவரை வர்ணித்தது அந்த அறிக்கை!



இந்த ஒன்பது நாட்களில் அவர் செய்த தீவிரப் பிரசாரத்தைப் பற்றி அவரே 'இது ஒன்பது நாள் விந்தை!' என்று குறிப்பிட்டுள்ளார். எனினும் அவர் தோல்வியுற்றார். அவர் அப்போது எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவும் அடுத்த முறை அவர் தேர்தலில் நிற்பதற்குச் செய்து கொண்ட முன்னேற்பாடுகளாகவே அமைந்தன. ஹால்பார்ன் தொகுதியில் சிங்கத்தின் குகைக்குள்ளே புகுவதுபோல் ஓர் இந்தியர் துணிந்து அபேட்சகராய் நின்றது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தப் புதுமையான விஷயத்துக்குப் பத்திரிகைகள் அதிக முக்கியத்துவம் தந்து அவரைப் பிரபலப்படுத்திவிட்டன.

அடுத்த தேர்தல் நடக்க ஆறு ஆண்டுகள் இருந்தன. நௌரோஜி அந்த ஆறு ஆண்டுகளும் தமது அரசியல் பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்துவதில் அதிகப் பணம் செலவாவதைக் கண்டார். வியாபாரத்தில் தமது முழுக் கவனத்தையும் செலுத்தியிருந்தாரானால் பணம் ஒரு பிரச்னையாக இருந்திராது. ஆனால் அரசியல்வாதியாகத் திகழ்ந்தபோது அவரால் அதிகமாகச் சம்பாதிக்க முடியவில்லை. அவருடைய இந்திய நண்பர்கள் அவர் தமது அரசியல் பணியைத் தொடர்ந்து நடத்த நிதி திரட்டித் தருவது என்று ஆரம்பித்தார்கள். இந்த முயற்சியும் நாளடைவில் கைவிடப்பட்டது.

எப்படியோ தொடர்ந்து லண்டனில் தங்கியிருந்து நௌரோஜி தமது அரசியல் பணிகளைச் செய்து வந்தார். இரண்டு ஆண்டுகள் சென்றன. மத்திய "ஃபின்ஸ்பரி" தொகுதியில் லிபரல் கட்சி அபேட்சகராக அவர் நிறுத்தப்படுவார் என்று" செய்தி வந்தது. இன்னும் நான்கு ஆண்டுகளுக்குப் பின் நடக்கவிருந்த பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி அபேட்சகராக நிற்க அத்தொகுதியில் இப்போதே ஒரு நபரைத் தயார் செய்து வந்தனர். அந்த அபேட்சகர் திடீரென்று கட்சியை விட்டே விலகினார். அவருக்குப் பதில் தாதாபாய் நௌரோஜியின் பெயர் அறிவிக்கப்பட்டது. இதற்கு லிபரல் கட்சி அங்கத்தினர்களுக்குள்ளேயே எதிர்ப்பு இருந்தது. இதனால் சென்ற தேர்தலில் இருந்ததுபோலவே இம்முறையும் அக்கட்சியில் ஒரு பிளவு ஏற்பட்டது. அதனால் பொதுத் தேர்தலின்போது நௌரோஜி மீண்டும் தோற்றுப் போய்விடு






★ விளம்பர உலகில் நட்சத்திரங்கள் ★



பத்திரிகை முதல் பட்டுப் புடைவை வரை எல்லாவற்றையும் விற்றுக் கொடுப்பவர்கள் நட்சத்திரங்கள்தான். 'பட்டு மாமிக்குப் பிடித்த பட்டுப் புடவை' என்று சௌகார் ஜானகியும் 'நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்பு' என்று வைஜயந்திமாலாவும் 'ருசியான ஊறுகாய்கள்' என்று ஜெமினி கணேசனும் கூறி விளம்பர உலகுக்குத் துணை செய்கிறார்கள். இதோ சில தயாரிப்புகள்; — இவற்றை எந்த எந்த நட்சத்திரங்களைக் கொண்டு விளம்பரப்படுத்தினால் வியாபாரம் பெருகும் சொல்லுங்கள், பார்க்கலாம்!

(விடை 16-ஆம் பக்கம் பார்க்கவும்)











வாரோ என்ற நிலை. கடைசி நேரத்தில் ரிப்பன் பிரபு தலையிட்டு லிபரல் கட்சியிலிருந்த பிளவைச் சரிப்படுத்தி இந்திய அபேட்சகரான தாதாபாய் நெளரோஜிக்குப் பூரண ஆதரவு கொடுக்க வழி செய்தார். வோட்டுகள் சிதறாமல் நேரடிப் போட்டி ஏற்பட்டது. அவரை எதிர்த்து நின்றவர் கன்சர்வேடிவ் கட்சி அபேட்சகர் காப்டன் பென்டன். ரிப்பன் பிரபு இவ்விதம் தலையிட்டு நிலைமையைச் சரிப்படுத்தியும் கூட தாதாபாய் நெளரோஜி வெற்றி பெறுவார் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாத சூழ்நிலை நிலவியது. ஆனால் பிரிட்டிஷ் பிரதம மந்திரியும் கன்சர்வேடிவ் கட்சித் தலைவருமான லார்ட் ஸாலிஸ்பரி ஒரு பெரும் தவறு செய்தார். அது நெளரோஜிக்குப் பெரிதும் உதவியது. அவர் தமது பிரசாரப் பேச்சுக்களிடையில் 1891, நவம்பர் மாதம் முப்பதாம் தேதி நெளரோஜியைப் பற்றி "அவர் ஒரு கறுப்பர்" என்று குறிப்பிட்டார். அத்துடன் "ஓர் உண்மையான ஆங்கிலேயன் தனது பிரதிநிதியாக ஒரு கறுப்பரைத் தேர்ந்தெடுத்து அனுப்ப மாட்டான்" என்றும் சொல்லி வைத்தார்.

பிரதமர் எதிர்க் கட்சி அபேட்சகரின் இனத்தைப் பற்றியும் மேனி நிறத்தைப் பற்றியும் இழிவாகப் பேசியதைப் பிரிட்டிஷ் மக்களால் பொறுக்க முடியவில்லை. தாதாபாய் நெளரோஜிக்குப் பிரிட்டனின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் கடிதங்கள் வந்து குவிந்தன. தங்கள் பிரதமர் மீது கோபம் தெரிவித்து மக்கள் எழுதியிருந்தனர். பிரபல அரசியல்வாதிகளான க்ளாட்ஸ்டன், மார்லி போன்றோர் பிரிட்டிஷ் பிரதமர், நெளரோஜியிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று அறிக்கை விட்டனர். விக்டோரியா ராணி தமது இந்தியப் பிரஜை ஒருவரைப் பற்றிப் பிரதமர் இப்படிக் கண்ணியக் குறைவாகப் பேசியதைக் கண்டு மிகுந்த அதிருப்தி அடைந்திருக்கிறார் என்ற செய்தி தேசமெங்கும் பரவிவிட்டது. தமது கோடிக் கணக்கான இந்தியப் பிரஜைகள் தமது பிரதம மந்திரி இவ்விதம் கூறியதை ரசிக்க மாட்டார்கள் என்று விக்டோரியா மகாராணி கடிந்துகொண்டதாகச் சொல்லப்பட்டது. இப்படிப் பேசியதற்காகப் பிரதமர் ராணியாரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார் என்றும் கூறப்பட்டது.

இதனாலெல்லாம் தாதாபாய் நெளரோஜி திடீரென்று பிரிட்டனில் மிகவும் மதிப்பு வாய்ந்த இந்தியர் என்ற பெயரெடுத்து விட்டார். அவருக்கு ஆதரவளிப்பதில் உற்சாகம் காட்டாமல் இருந்த சங்கங்கள், கழகங்கள் யாவும் இப்போது மிகுந்த உற்சாகத்துடன் ஆதரவளித்தன. பிரதமர் தம்மை ஒரு

கறுப்பன் என்று குறிப்பிட்டதற்கு நௌரோஜி தக்க பதிலளித்திருக்க முடியும். ஆனால் கண்ணியமான மௌனத்தையே அவர் மேற்கொண்டார்.

தேர்தல் நெருங்க நெருங்க இந்திய வேட்பாளர் பெரும் சோதனைக்கும் உள்ளானர்.

"ஃபின்ஸ்பரி தொகுதியில் அபேட்சகராய் நிற்க ஓர் ஆங்கிலேயரோ அல்லது ஓர் ஐரிஷ்காரனோ லிபரல் கட்சிக்கு அகப்படாமலா போய்விட்டார்கள்? இதற்கு அந்தக் கட்சி அவமானத்தால் தலைகுனிய வேண்டும்" என்று ஒரு பத்திரிகை எழுதியிருந்தது.

அவரை எதிர்த்த கன்ஸர்வேடிவ் கட்சி அபேட்சகர் பெரும் பணக்கார நிலப்பிரபுவாக இருந்ததால் வாக்காளர்களை வோட்டுச் சாவடிக்கு அழைத்துச் செல்வதற்குரிய எல்லா வாகன வசதிகளையும் தம் வசப் படுத்திக் கொண்டு விட்டார். நௌரோஜியோ தேர்தலுக்குச் செலவழிக்கப் போதுமான பணம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். நல்ல வேளையாகப் பரோடா சமஸ்தானத்து மகாராஜா அந்தச் சமயம் இங்கிலாந்தில் இருந்தார். அவர் இந்தத் தேர்தலைக் கூர்ந்து கவனித்து வந்தார். அவர் ஏராளமான வண்டிகளை நௌரோஜிக்கு வாடகைக்கு அமர்த்திக் கொடுத்து எதிராளியின் தந்திரத்தை முறியடித்தார். கடைசியில் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட போது அதிகப்படியாக மூன்று வோட்டுகள் பெற்று தாதாபாய் நௌரோஜி வெற்றி பெற்றிருந்தார். நௌரோஜி 2,959 வோட்டுக்கள் பெற்றிருந்தார். அவருடைய எதிராளி 2,956 வோட்டுக்கள் பெற்றிருந்தார். அவருடைய எதிராளி மீண்டும் வாக்குகள் எண்ணப்பட வேண்டும் என்று கோரினர். பல வழக்குகள் தொடுத்தார். இப்படிப் பல தொல்லைகள் கொடுத்து விட்டு ஆறு மாதங்களுக்குப் பிறகு தமது தோல்வியை ஒப்புக் கொண்டார்.

சாதாரண பிரிட்டிஷ் பிரஜைக்கு நௌரோஜியின் பெயரை உச்சரிப்பது கஷ்டம். அதனால் குறுகிய வோட்டு வித்தியாசத்தில் ஜெயித்த நௌரோஜியை "நேரோ மெஜாரிட்டி" (narrow majority) என்று பத்திரிகைகள் குறிப்பிட்டன. அவர் இந்த ஸ்தானத்தில் நான்கு ஆண்டுகள் இருந்தார். 1895ல் நடந்த பொதுத் தேர்தலில் தோல்வியுற்றார்.

அவர் பார்லிமெண்டில் இருந்த நான்கு ஆண்டுகளில் அன்று இந்திய மக்களின் பிரச்னைகளை ஓர் இந்தியரே எடுத்துக் கூறும் அரிய வாய்ப்புக் கிடைத்தது. இந்தப் பிரபல தேர்தல் நடந்து இன்று எழுபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. அந்தப் பெரியார் இந்திய சுதந்திரத்துக்காக எடுத்துக் கொண்ட முயற்சி இன்று பலனளித்து விட்டது. கடுமையான எதிர்ப்புகளைச் சமாளித்து ஜனநாயக ரீதியில் அன்று அவர் எடுத்துக் கொண்ட முயற்சியைப் பெருமிதத்துடன் இன்று நினைவு கூர்வோமாக. —"சரித்திர மாணவன்"

காதலென்ன, கத்திரிக்காயா?




வெளிப் பார்வைக்கு முரடனாகவும், கேடியாகவும் தோற்றமளிக்கும் ஒருவன் உண்மையில் தூய நல்ல இதயம் படைத்தவனாக விளங்குகிறான். "வாக்கு சுத்தமா யிருந்தால் ஆண்டவனைத் தவிர இந்த உலகத்தில் யாருக்கும் பயப்பட வேண்டியதில்லே. அதோடு மனசும் சுத்தமா யிருந்தால் அந்த ஆண்டவனுக்குக் கூட அஞ்சவேண்டியதில்லே" என்கிறான்.

மற்றொரு கதாபாத்திரம், நாவல்களிலும் சினிமாக்களிலும் காதலர்களைக் கண்டுவிட்டுத் தானும் யாரை யேனும் காதலிக்க வேண்டும் என்று ஆசைப்படும் ஓர் அப்பாவி, வெகுளி.

இப்படி இரண்டு அருமையான கதாபாத்திரங்கள் உள்ளனர் இந்த நாடகத்தில். இருந்தும் நாடகம் என்னவோ எடுபடாமல் போனதற்குக் காரணம், நாடகாசிரியர் 'மௌலி'யின் முதல் முயற்சி இது என்பதாகத்தான் இருக்க வேண்டும். அனுபவஸ்தர்களின் ஆலோசனைகளைச் செவி ஏற்று, நீக்கவேண்டியவற்றை யெல்லாம் சுத்தமாகக் கத்தரித்து விட்டுக் கட்டுக் கோப்பான இரண்டு மணி நேர நாடகமாக அமைத்தால் "காதலென்ன கத்திரிக்காயா?" ஒரு நல்ல நாடகம் என்று பெயரெடுக்க வாய்ப்பு இருக்கிறது.





"நம்பிக்கை" என் பாதை

"பாதை தெரியுது பார்" என்ற திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்த திரு விஜயன் இன்று நடக்கும் பாதைக்கு 'நம்பிக்கை' என்று பெயராம்.

படம்: "தூக்கு தண்டனை"யின் ஒரு காட்சி

அமரர் கல்கி அவர்களின் தத்துவார்த்தம் நிறைந்த 'தூக்கு தண்டனை' என்ற சிறு கதை மேடைக்கேற்ற நாடகமாக மாற்றப்பட்டு நடந்து கொண்டிருக்கிறது. அன்பும் அமைதியும், சாந்தமும் கனிவும் கலந்துவிட்டிருக்கிறதோ என்று வியப்புறும் வண்ணம் ஜட்ஜ் அருணப்பர் வேடம் தாங்கியிருப்பவர் மேடையில் நடித்துக் கொண்டிருக்கிறார். அரங்கத்திலுள்ளோர் கவனமெல்லாம் அவர் மேல் பதிந்திருக்கிறது. ஒரு தந்தை, கண்ணியமான ஒரு நீதிபதி, ஆண்டவனிடம் நம்பிக்கையும் பக்தியும் வைத்திருக்கும் ஓர் ஆத்மா. இத்தியாதி பொறுப்புக்களையும் குணத்தையும் காண்பிக்கும் பொருத்தமான தோற்றம்!

"யாரு சார், இந்த ஜட்ஜ் வேஷம் போட்டிருப்பவர்?" என்று பின்வரிசையிலுள்ள ஒரு ரசிகர் தம் பக்கத்திலிருப்பவரிடம் கேட்கிறார்.

"அதுதான் சார், நம்ப விஜயன்! சஹஸ்ரநாமத்தோட சேவா ஸ்டேஜ் குழுவிலே இருப்பவர்!" என்ற பதில் மேடையிலிருந்து பார்வையை அகற்றாமலே வருகிறது.

அவருடைய பதிலில் வெளியான சில வார்த்தைகளில் 'நம்ப' என்ற ஒரு பதத்தில் பிரத்தியேகக் குழைவும் கர்வமும் கலந்ததாகத் தொனிக்கின்றன. ஒரு ரசிகர், ஒரு நடிகருக்கு அளிக்கும் சிறந்த பாராட்டும் மரியாதையும் அவரை அறியாமலேயே அந்த 'நம்ப' என்ற வார்த்தையை உபயோகிப்பதுதான்.

அதே நேரத்தில் சரியாக நடிக்காத, பொருத்தமில்லாத ஒரு நடிகரைப் பற்றி அவர் தகவல் கொடுக்க வேண்டியிருந்தால், "அதுவா? அந்தக் குப்புசாமி" என்றோ, "அந்தக் கப்புசாமி" என்றோ, அந்த இடத்தில் ஓர் 'அந்த' வார்த்தையைப் போட்டு இடைவெளியை அநாயாசமாக அதிகப்படுத்தியிருப்பார்! இந்த 'நம்ப'வும் 'அந்த'வும் உணர்ச்சி வேகத்தில் வெளியாகும் விமரிசனச் சொடுக்குகள்!

இந்த 'நம்ப' விஜயனை ஒரு நாள் சந்திக்கக் கிளம்பினேன். முதல் முற்றுகையிலேயே ஆசாமி அகப்பட்டு விட்டார்.

பெரிய ரயில் சந்திப்புகளில் வெவ்வேறு வழிகளில் போகப் பிளாட்பாரங்கள் மாறும் பிரயாணிகள் போல, வாழ்க்கை எனும் சந்திப்பில் அசல் ரயிலிலிருந்து இறங்கி, வேறு பிளாட்பாரத்தில் அதிர்ஷ்ட ரயிலுக்காகக் காத்திருக்கும் இளைஞர்தான் விஜயன்! ஆம்! ரயில்வே இலாகாவில் பணி புரிந்த அவர் கலைத் துறையில் நம்பிக்கையையும் ஆர்வத்தையும் பணயமாக வைத்துச் சுதந்திர புருஷராக வெளியே வந்துவிட்டார்! நாடக பிளாட்பாரத்தில் நிற்கிறார்!

"நாடகத் துறையில் வங்காளிகள் செய்திருக்கும் சாதனையைப் பார்க்கும் போது அவர்களை எட்ட நாம் இன்னும் வெகு தூரம் போக வேண்டும் என்றுதான் தோன்றுகிறது. அவர்கள் நாடகக் கலையை வெகு சிரத்தையுடன் வளர்த்து மக்கள் மனத்தில் அதனிடம் ஒருவித நிரந்தர மரியாதையையும் அன்பையும் தோற்றுவித்துவிட்டார்கள். அங்கே ஒரு சினிமா கதாநாயகனுக்கு இருக்கும் மதிப்பைவிட நாடகக் கதாநாயகனுக்கு மதிப்பு அதிகம். திருப்தி மித்ரா என்னும் நாடகக் கலைஞர் சம்பாதித்திருக்கும் மதிப்பு பல சினிமாக் கலைஞர்கள் சம்பாதித்திருக்கும் செல்வத்தைவிடப் பல மடங்கு மேல்" என்கிறார் விஜயன்.

"நாடகம் சினிமாவின் தந்தை, சினிமா நாடகத்தின் பிள்ளை என்று சொல்லிப் பிணைத்துக் குழப்புவது எல்லாம் சரியில்லை. இரண்டுமே வெவ்வேறு கலைகள். மக்களை மகிழ்விக்கும் சாதனங்கள் என்பதில் வேண்டுமானால் இரண்டுக்கும் பொதுத்தன்மை இருக்

களாமே தவிர மற்ற எல்லா அம்சங்களிலுமே இரண்டும் 'வெவ்வேறுதான்'' என்ற சித்தாந்த முடையவர் விஜயன். நாடகத்தோடு சினிமாத் துறையையும் நம்பி விருப்பவர் தான் இவரும் !

சினிமாத் துறையில் இவருக்கு முதன் முதலில் கைகொடுத்த படம் 'பாதை தெரியுது பார்.' அதில் இவர் கதாநாயகன்.

காதல் கட்டம் ஒன்றை வெளிப்புறக் காட்சியாகப் படம் பிடிக்க ஏற்பாடாகி யிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் சேலம் மாவட்டத்திலுள்ள ஏர்க்காடு மலை. படப் பிடிப்பு கோஷ்டியினர் முதல் நாள் மாலையிலேயே அங்கேயுள்ள ஒரு தங்கும் விடுதியில் போய்ச் சேர்ந்தார்கள். இரண்டு காதல் காட்சிகளும் ஒரு பாடலும் மறு நாள் காலை ஏழு மணியிலிருந்து பதிவு செய்யப்பட வேண்டுமென்று ஏற்பாடு.

பிரயாணக் களைப்புத் தீர, விடுதித் தொட்டியில் நிரப்பி வைத்திருந்த குளிர்ந்த நீரில் அது ஐஸ் போல் இருந்த ஆனந்தத் தில், நிறையவே எடுத்து விட்டுக் கொண்டு விஜயன் ஸ்நானத்தை முடித்துக் கொண் டார். மற்றவர்கள் யாரும் இந்தக் குளியல் ஆனந்தத்தைத் தம்முடன் பகிர்ந்து கொள்ள வில்லையே என்ற தாபத்தோடு!

இரவு பத்து மணி சுமாருக்கு விஜயன் உடலுக்குள் ஏதோ புகுந்து விட்டது போன்ற உணர்ச்சி. நல்ல கடுமையான ஜுரம் அடிக்க ஆரம்பித்து விட்டது. முன் னிரவு வேளையில் அந்தக் குளிர்ந்த மலைநீரில் குளிக்கக் கூடாது என்பது அவருக்குத் தெரி யாதே !

ஜுரத்தைவிட அவரை அதிகம் பாதித் தது பயம்! புத்தம் புது நடிகராகிய தம்மால் படப் பிடிப்பு நின்று விட்டால், படத் தயாரிப்பாளர்கள் மனத்தில் தன்னிடம் ஒருவித வெறுப்பும் கோபமும் தோன்றி விடுமோ என்ற பயம் ! காலை நான்கு மணி வரை முக்கி முனகிப் படுத்துக் கொண் டிருந்தவர் எழுந்து மேக்கப்பும் போட்டுக் கொண்டார். படப் பிடிப்புக்கும் தயா ரானார். அவர் மனம் படபடத்ததைவிட, உடம்பு அதிகம் படபடத்தது. ஜுர வேகம்! ஆனால் அதைப் பற்றி அவர் ஒருவரிடமும் மூச்சு விடவில்லை.

மலை வெய்யில் ஏற ஏறக் கனல் பறந்தது. உட்சூடும் வெளிச் சூடும் கலந்து பொறுக்க முடியாத நிலை. ஆனால் பேச வேண்டிய வசனங்களோ நளினம் நிறைந்த காதல் பாஷை ! எப்படியோ தண்ணீருக்குள் மூச் சடக்கி நீந்துபவர்கள் போல், அந்தச் சூட்டில் மூழ்கித் தம் பகுதியை முடித்துக் கொண்டு விடுதியில் வந்து விழுந்தார். அப்புறம்தான் அவர் ஜுரத்தில் தவிக்கிறார் என்று கூட வந்தவர்களுக்குத் தெரிந்தது. ஆனால் படத் தயாரிப்பாளர், நேரம் வீணாகிறதே என்று தவிக்க இடமில்லாமல் தம் பணியைச் செய்து முடித்துவிட்டார் விஜயன்.

அந்தக் காதல் காட்சிகள் அந்தப் படத் தில் நன்றாகவே அமைந்திருந்தன! 'கதாநாயக னுக்கு என்ன காதல் ஜுரமா? ஏன் இப்படி விழிக்கிறார் ?' என்று படம் பார்த்தவர்கள் யாரும் கேட்கவில்லை !

''நன்றாக ஒத்துழைக்கும் சுபாவம் விஜய னுக்கு உண்டு. 'இவர் என்ன பிரமாதமாக எழுதிக் கிழித்து விட்டார் ! நடிகனுடைய வசனம் எழுத்துப் பரிமளிக்கும்?' என்று ஒரு சுத்துக்குட்டி நடிகர்கூட மார் தட்டும் இந்த நாளில் விஜயன் பண்பும் மரியாதையும் உள்ள தனி நபர். அவருக்குத் தேவையான விளக்கங்களை, நிதானமாக அவசரப்படாமல் கேட்டு மனத்தில் வாங்கிக் கொள்வார். அப் புறம் அவர் வேறு, பாத்திரம் வேறு என்ற உணர்ச்சி யாருக்குமே தோன்றாது'' என்றார், தூக்குத் தண்டனை நாடக ஆசிரியர் திரு நாகநந்தி விஜயனைப் பற்றி.

''மிஸ்டர் விஜயன் ! எதிர்காலத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று வினவினேன்.

''இதிலெல்லாம் அபிப்பிராயம் என்னத் தைச் சொல்வது? உழைத்துக் கொண்டே இருப்பது என் கடமை! கலைக்காக மாத்திரம் உழைக்கிறேன் என்று நான் ஜம்பமடித்துக் கொள்ளவில்லை. குடும்பத்துக்காகவும் உழைக் கிறேன். உழைப்புக்கு வெற்றி கிடைக்காமலா போய்விடும்? நான் அவநம்பிக்கைப்படுவதே இல்லை!'' என்றார் விஜயன்.

'ஒரு நல்ல கலைஞனுக்கு முதல் தேவை நம் பிக்கைதான்' என்று ஓர் அறிஞர் கூறியிருப் பது நினைவுக்கு வந்தது.

— கோமதி சுவாமிநாதன்

உயர்ந்தது போதாதா?

இந்தியாவிலேயே மிக உயர மான நபர் மேற்கு வங்காளத் தில் உள்ள மதினப்பூரைச் சேர்ந்த கனிக் பந்தர் தான். பதினெட்டே வயதான இவரது உயரம் 7 அடி 8 அங்குலம்.


உலகிலேயே மிக உயரமான வர்களில் இரண்டாவது ஸ்தா னம் வகிக்கிறார். முதலாமவர் ஓர் அமெரிக்கர். உயரம் 8 அடி. ஆனால் நமது கனிக் எட்டரை அடி வரை வளர்ந்து முதல் ஸ்தானத்தை எட்டிப் பிடிப் பார் என நம்பப்படுகிறது.

கல்லூரியில் பி. எஸ்ஸி. படித்துக்கொண்டிருந்த இவர் வேலை கேட்டு போலீஸ் இலாகாவுக்கு விண்ணப்பித்துக் கொண்டதன் பேரில் கல்கத்தா வில் இவருக்குப் போலீஸ் சார்ஜண்ட் வேலை இப்போது கிடைத்திருக்கிறது. எனவே உலகத்திலேயே அதிக உயர மான போலீஸ்காரர் இவர் தான்.

கட்டுமஸ்தான உடல் கொண்ட இவர், அகில உலக ஆண் அழகன் போட்டிக்குத் தம்மைத் தயார் பண்ணிக் கொண்டிருக்கிறாராம் !

ஆதாரம் : 'சண்டே ஸ்டாண்டர்ட்'

அனுப்பியவர்: 'ஆரார்'





''என்னுடைய ஜுலி டாலி பக்கத்திலிருந் தால்தான் எனக்குச் சாப்பாடு இறங்கும்''
என்கிறார்
பேபி பத்மினி.

★

ஜுலி டாலிகளேயே கேட்டு வாங்குங்கள்

சிறந்த பொம்மைகள்

12ம் பக்கத்தில் உள்ள அந்தப் பொருள் களுக்கு இப்படி விளம்ப ரங்கள் கொடுக் கலாமோ?



எப்போதும் விறுவிறுப்பாய் குதூகலத்துடன் விளங்க ஆசையா?

நாகேஷைப் பின்பற்றுங்கள்

பெப் பிராண்ட் மல்டி வைட்டமின்கள்

ஆரோக்கிய வாழ்வுக்குச் சிறந்த சாதனம்!

இரவில் திருடர்கள் பயமா?
கவலை ஏன்?

டுமீல் மார்க் துப்பாக்கி

ஒன்றை வாங்கி
வைத்துக் கொள்ளுங்கள்



''இதற்கு மேல்செல்வம் தேவை யில்லை'' என்று நினைத்து விட்டீர்களா!

''ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக நான் விடாமல் வாங்கி வருவது கோரஞ்சன் தேஜ் டாலிக்களையே'' என்கிறார்
என். பாலசந்தர்



மறவாதீர்கள்!

கேசம் வளர கேச ரஞ்சன்

நம்பகமானது!

● "நான் என் சரு
● மத்தைப் பளபள
● வென்று வைத்தி
● ருக்க டயமண்ட்
● பிராண்ட் விளக்
● கெண்ணெயே
● பயன்படுத்துகிறேன்"

என்கிறார் ஜெயலலிதா.



ஜெமினி கணேசன் தமது தேயிலைத் தோட்டங்களில் பயன்படுத்துவது

" குரோவெல் "

ரசாயன உரங்களே



வாரம் ஒருமுறை உடலில்

டயமண்ட் பிராண்ட் விளக்கெண்ணெய் தடவி வாருங்கள்!

வைரம்போல் மேனி பளபளக்கும்!

"பருப்பில்லாமல் கல்யாணமா?" என்கிறார் சரோஜா தேவி.


அவர் தம் திருமணத்துக்கு வாங்கப் போகுவது

சந்திரன் மார்க் உளுத்தம்பருப்பே




ஜிம்மி
வால்ட் டிஸ்னி
ம்.. சுகமான இளவெய்யில்
ஓ.. அது என்ன சத்தம்?
ஹப்..
சடையன்..!
டேய் சடையா?
ஹலோ.. ஹப்.. ஜிம்மியா..?
ஹ..ப்.!
பாவம் சடையன்..! திடீருனு அவனுக்கு அதிர்ச்சி உண்டாகும்படி பயமுறுத்தினா விக்கல் நின்னுடும்.
ஹப்

'மாடல்' மங்கை



அழ
வனிதையர்
பலர்
விளம்பரங்களை
அலங்கரிக்க
முன் வருவது
ஏன்?
மாடல் மங்கை
குஸும்
விளக்கம்
தருகிறார்.

'டெரின்' கண்காட்சியில், பூ வேலைப்பாட்டுடன்கூடிய பல சேலைகளுக்கு மத்தியில், பூவுக்குப் பூ சிறகடித்துப் பறக்கும் வண்ணத்துப் பூச்சிகளைப் போல் வளைய வளைய வந்து கொண்டிருந்த பூம்பாவையர் பலர்.

"அதோ...." என்றார் நண்பர். அவர் காட்டிய திசையில் பார்வையை ஓட்டினேன். உடலோடு ஒட்டினாற் போல் அழகாக 'டெரின்' புடவை அணிவிக்கப்பட்டு ஒரு பதுமை நிறுத்தப்பட்டிருந்தது. 'என்ன அழகு! என்ன அழகு!' என்று வியக்கும் வேளையிலே அந்தப் பதுமை மலரடி எடுத்து வைத்து எங்களை நோக்கி வந்தது. அதன் நடையழகை மெச்சி முடிக்கவில்லை; அது வாய் திறந்து, 'என்ன வேண்டும், உங்களுக்கு?' என்று கேட்டது.

'அட, இது நடமாடும் பதுமை மட்டும் அல்ல; பேசும் பொற்சித்திரமும் கூட' — இப்படி எண்ணி அதிசயிக்கத் தொடங்கிய எங்களை, "என்ன, சித்திரப் பதுமையாக நின்று விட்டீர்கள்?" என்று கேட்டு மடக்கியது 'அது'.

சித்திரப் பதுமை முன்னே சிலையாகி நாங்கள் நிற்க இந்தக் கொலுவைக் காணப் பூவார் குழலிகள் பலர் குழுமி விட்டனர்!

"உங்களைத்தான் பேட்டி காண வந்திருக்கிறோம். நீங்கள்தானே........"

"குஸும்."

இப்படித் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட அவர் பலருக்கு மத்தியிலும் புன்முறுவலோடு எங்களுக்குப் பேட்டி கொடுக்கத் தயாராகி விட்டார்.

ஃ ஃ ஃ

"நான் பிறந்து வளர்ந்தது பங்களூரில். படித்துப் பட்டம் பெற்றது சென்னையில். எஸ். ஐ. ஈ. டி. கல்லூரி இருக்கிறது, பாருங்கள்! அதில்தான் குடும்பக் கலையைச் சிறப்புப் பாடமாக எடுத்துக் கொண்டு பி.எஸ்ஸி. பரீட்சையில் தேறினேன்.

"என் தந்தை ஸ்ரீ கெம்ப்ராஜ் தற்பொழுது கட்டடக் கலையில் ஈடுபட்டிருக்கிறார்...."

"ஆரம்பத்தில் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருந்தாரே, அதே கெம்ப்ராஜ் அவர்கள்தானே?"

"ஆமாம், ஆமாம். அவரே தான். என் அக்கை ஆஷாஸ்வரூப், பிராணி இயலைப் பாடமாக ஏற்று பி. எஸ்ஸி. தேறியவர். தங்கை ஹேமா எம்.ஏ.; சைக்காலஜியை விசேஷ பாடமாக ஏற்றுத் தேர்ந்தவர்."

"பேஷ்! உங்கள் குடும்பமே ஒரு கல்லூரிக் குடும்பம் என்று சொல்லுங்கள்!"

"ஆமாம். எங்கள் தாய்மொழி கன்னடம். தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் படிக்கும் வாய்ப்புக் கிட்டியதனால் தமிழும் நன்றாகப் பேச வரும். இரண்டாவது மொழியாக ஹிந்தியை எடுத்துக் கொண்டதும் ஒரு விதத்தில் நல்லதாகி விட்டது. ஏழெட்டு மாதங்களுக்குமுன் எனக்குக் கல்யாணமாகிற்று. என் கணவர் ஸ்ரீவாடி பஞ்சாபியர். இந்தியக் கப்பற் படையில் பணியாற்றி

வருகிறார். தற்சமயம் எங்கள் வாசஸ்தலம் பம்பாய். இப்படியாக இந்திய ஐக்கியத்துக்கும் எங்கள் குடும்பத்துக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டதற்குக் காரணம் எங்கள் தாய் — தந்தையர்தான்.

''அவர்களுக்கு எங்கள் மேல் அபார வாஞ்சை; அளவற்ற நம்பிக்கை. சிறப்போடு வாழ்க்கை நடத்தும் எங்கள் குடும்பத்தில் நாங்கள் பெண்கள் ஓர் உத்தியோகம் பார்க்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஆயினும் நான் வால்டர் தாம்ப்ஸனில் பல கிளைகளுக்கும் இடையில் தொடர்பு கொள்ளும் 'லேஸன் அதிகாரி'யாகப் பணியாற்றினேன். அப்பொழுது விளம்பரங்களுக்கு மாடல் மங்கையாகவும் நின்றிருக்கிறேன்.''

''உங்கள் பெற்றோர் இதற்கு ஆட்சேபணை தெரிவிக்கவில்லையா?''

''எதற்குத் தெரிவிக்க வேண்டும்? என்னிடம் நம்பிக்கை வைத்துப் பூரண சுதந்திரம் தந்திருந்தார்கள். அவர்கள் என்னிடம் வைத்த நம்பிக்கை வீண் போகாமல் அவர்கள் அளித்த சுதந்திரத்தை நான் மதித்துப் போற்றினேன்!''

''ஆமாம், இப்படி மாடல் பெண்ணாக நிற்க உங்களுக்கு எப்படி மனம் போயிற்று?''

''என்ன தவறு? அழகான உடை உடுத்தி நான் விளம்பரப் பெண்ணாக நிற்கிறேன். என் புகைப்படத்தைக் கண்டு உங்களைப் போன்றோர்கள் உங்கள் மனைவிமார்களுக்கு அதாவது என் சகோதரிமார்களுக்கு அழகழகான புடவைகள் வாங்கிக் கொடுத்துக் கண் குளிரக் கண்டு மகிழ்கிறீர்கள். அந்த மகிழ்ச்சி எனக்கும் மகிழ்ச்சி தருகிறது. அழகைக் கலையாகப் போற்றும் மக்கட் சமுதாயத்தை எனக்கு மதிக்கத் தோன்றுகிறதே யொழிய மதிப்புக் குறைவாக எடை போடத் தோன்றவில்லை.''

ஸ்ரீமதி குஸும் வாடியின் பேச்சில்தான் என்ன பெருண்மை! தகர்க்கமுடியாத தர்க்கம்!

பெண்கள் இப்படி மாடலாக நிற்கும் தொழில் நம் நாட்டுக்குப் புதிதாக இன்று தோன்றுகிறதல்லவா? அதனால்தான் அதைச் சட்டென்று ஒரு கலையாக ஒப்புக் கொள்ளத் தயங்குகிறோம். ஆனால் இதே தொழில் கலையாகப் பரிணமித்திருந்த அந்தப் பழங் காலத்தில் எத்தனை சீரும் சிறப்புமாகத் திகழ்ந்திருக்கிறது. இன்னும் அக் கலைச் சிற்பங்கள் அழியாது நின்று சான்று பகருகின்றனவே!

மேலை நாடுகளில் பெரிய பெரிய கடைகளின் ஷோ ரூம்களில் பெண்களையே அலங்கரித்து நிறுத்தி விடுவதுண்டாம். பல மணி நேரங்கள் ஆடாமல், அசையாமல் பொம்மை போல அவர்கள் நிற்க வேண்டி வருமாம். இந்தக் கோடிக்கு அந்தக் கோடி கண் விழிகளை மட்டும் நிதானமாக விசை கொடுத்தாற் போல் சுழற்றிக் கொண்டே இருக்க வேண்டி இருக்குமாம். மேலே ஈ எறும்பு ஏறினால்கூட அதைத் தட்டக் கூடாதாம். இப்படிப் பழகிய பெண்கள் ஏராளமாக வருவாய் பெறுகிறார்களாம்.

''விளம்பரத்துக்காக 'போஸ்' கொடுக்கும் பெண்களின் முகவெட்டு காமிராவுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். ஆடை — அணிகள் புனைந்து எழிலுற நிற்க வேண்டும்.''

இப்படிக் கூறிக் கொண்டே போன ஸ்ரீமதி குஸும் வாடியை மடக்கினேன்: ''பெண்களுக்கு ஆடை அணிகளில் ஆசை அதிகம் என்கிறார்களே, அந்த ஆசையினால்தான் இந்தத் தொழிலில் நீங்கள் ஈடுபாடு காட்டினீர்களோ?''

''ஆள் பாதி, ஆடை பாதி என்பார்கள். ஆனால் எளிய உடையிலும் எழிற் சிறப்புடன் விளங்க முடியும் என்பதே என் அபிப்பிராயம்'' என்று கூறியவர் தம் உடையை ஒரு முறை பார்த்துக் கொண்டார். அவர் அணிந்திருந்த உடை அவர் கூற்றை முற்றிலும் உண்மை என்று ஆமோதித்தது.

''நீங்கள் இந்தத் தொழிலில் மீண்டும் ஈடுபடுவீர்களா?''

''எனக்கு ஆசைதான்; என் கணவருக்கும் ஆட்சேபணை இல்லைதான். ஆனால் அவர் உத்தியோகம் ஒரே ஊரில் நிலைத்திருக்கக் கூடியதல்லவே! இன்று பம்பாய், நாளை கொச்சி. 'மாடல்' தொழிலுக்கோ பம்பாயைக் காட்டிலும் சிறந்த இடம் பாரதத்திலேயே கிடையாது. 'சீதைக்கு ராமன் இருக்கும் இடம் அயோத்தி' என்னும் எனக்கும் அவர் இருக்கும் இடம்தானே உயர்த்தி? எனவே, இதனைத் தொடர்வதற்கில்லை!'' என்று கோடி காட்டி விட்டார் ஸ்ரீமதி குஸும் வாடி. —ரா.வீ.

மலரும் மங்கையும்


• பூக்களை அழகுபட அலங்கரித்து வைப்பது ஓர் அரிய கலை. இந்தப் பூக்கள் அலங்கரிப்பிலே ஜப்பானியர்கள் கைதேர்ந்தவர்கள். இந்த மலர் அலங்கரிப்புத் துறை நிபுணர்களான ஸ்ரீமதி மாட்சு ஆவாஜேவும், மிஸ் குனிகோ வாஸேகோவும் சென்னையிலுள்ள ஹோட்டல் அசோகாவில் இந்த அழகுக் கலையைக் கண்காட்சியாக வைத்து விளக்கிக் காட்டினார்கள். பயிற்சி வகுப்புகளும் நடத்தினார்கள். பூவின் சிறப்பு பூவையருக்குத் தானே தெரியும்! ஏராளமான பெண்மணிகள் இந்தக் கண்காட்சியைக் கண்டு களித்தார்கள்.






பாதுகாப்பு பலே ஜோர்

தொப்பி, மார்புக்கவசம் இரும்பினால், கவசம்
பற்களுக்கும் உண்டு—புளோரைடினால்.
பற்களின் எனாமல் பற்சேதத்தை எதிர்க்க
அதிக பலமடைகிறது. புளோரைட் சேர்ந்தால்.
பற்களுக்கு புளோரைட் பாதுகாப்பு அளியுங்கள்.
பினாகா புளோரைடினால் தினமும்
பல் துலக்குங்கள்.



பற் பாதுகாப்பில் ஒரு
புதிய சாதனை


POST







புடவைத் தேர்தல்!

1941ம் ஆண்டில் இரு விஞ்ஞானிகள் ஜே. ஆர். வின்பீல்டும், ஜே. டி. டிக்ஸனும் சேர்ந்து செய்த ஆராய்ச்சியின் விளைவாக ஆடைகள் தயாரிப்பில் ஒரு புதிய சகாப்தம் உருவாயிற்று. பாலிஸ்டர் பைபர் (Polyester fibre) தோன்றியது. இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகு ஐ. ஸி. ஐ. ஸ்தாபனத்தார் அமெரிக்கா தவிர உலகம் முழுதும் இந்தப் புதிய செயற்கை இழையைத் தயாரிக்கும் பிரத்தியேக உரிமை பெற்றனர். டெரீன் உடை இந்த நவீன விஞ்ஞானத்தின் சாதனையாகும். 1965ம் ஆண்டில் இந்தியாவில் ஆறு கோடி ரூபாய் முதலீடு செய்து, கெமிகல்ஸ் அண்ட் பைபர்ஸ் தொழிற்சாலையினர் 'டிரைன்' என்ற பெயரில் இந்தப் புதிய செயற்கை இழையை உற்பத்தி செய்தனர். இந்தச் செயற்கை இழையைக்கொண்டு நாட்டில் உள்ள பல்வேறு நெசவாலைகளும் தயாரித்த துணி வகைகள் சென்னை மெரீனாவில் உள்ள சர்வ கலாசாலைப் பரீட்சைக் கட்டடத்தில் பெண்களின் பரீட்சார்த்தப் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. பல கல்லூரி மாணவிகள், பெண்மணிகள் இந்தச் செயற்கை இழையில் தயாரிக்கப்பட்ட விதம் விதமான ஆடைகளிலே கண்காட்சியாகத் திகழ்ந்தார்கள். பம்பாயிலுள்ள டாட்டா டெக்ஸ்டைல்ஸ், கடால் மில்ஸ், பாம்பே டையிங், மபத்லால் குரூப், ரேமாண்ட் வுல்லன் மில்ஸ், வெஸ்டர்ன் இந்தியா மில்ஸ், தி ஸிரவுன் ஸ்பின்னிங் அண்ட் மானுபாக்சரிங் மில்ஸ், அகமதாபாத்திலுள்ள காலிகோ மில்ஸ் ஆகிய நிறுவனங்கள் தயாரித்துள்ள புடவைகள், குழந்தைகளுக்கான அணிகள் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன. பெண்மணிகள் ஆடைகளின் தரத்தைத் தொட்டுப் பார்த்து ரசித்து மகிழ ஒவ்வொரு ரகத்துக்கும் சாம்பிள் உடையும் இடம் பெற்றிருந்தது. இந்தச் செயற்கை இழை 'டிரைன்' புடவை தயாரிப்பில் விஞ்ஞானம் தானாகவே யதேச்சையாக ஒரு புதுமையைத் தந்ததை விளக்கினார் கெமிக்கல்ஸ் அண்ட் பைபர்ஸ் தொழிற்சாலை அதிகாரி ஒருவர். பருத்தி நூலும் டிரைன் இழையும் சேர்ந்து தயாரிக்கப்பட்ட புடவை ஒன்றில் சாயமிடப்



டிக்கன்ஸ்

பட்டபோது, அமிலம் பருத்தி இழையை மட்டும் சாப்பிட்டு விட்டதாம். அதனால் ஒரு நெசவாலை டிரைன் தயாரிப்பில் ஒரு புது மோஸ்தரை அறிமுகப்படுத்த முடிந்ததாம்.

பெண்மணிகள் எந்த டிசைனை அதிகம் விரும்புகிறார்கள், எந்த நெசவாலை தயாரித்த புடவைக்கு அதிக மதிப்பு அளிக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளக் கண்காட்சியைப் பார்க்க வரும் நாரீமணிகள் கையில் வோட்டுச் சீட்டைக் கொடுத்திருந்தார்கள். பொதுத் தேர்தலுக்கு முன் இந்தப் புடவைத் தேர்தல் சுவையான நிகழ்ச்சியாக இருந்தது.



டிக்கன்ஸ் விழாவில் பல வேஷங்களில் கிறிஸ்துவக் கல்லூரி மாணவர்

டிக்கன்ஸ் விழா

இந்த பிப்ரவரி முதல் தேதியும் இரண்டாம் தேதியும் சென்னை தாம்பரத்திலுள்ள கிறிஸ்துவக் கல்லூரியில் அடியெடுத்து வைத்தவர்கள், "நாம் பத்தொன்பதாவது நூற்றுண்டைய இங்கிலாந்துக்கு எங்கு வந்து சேர்ந்தோம்" என்று திக்பிரமை அடைந்திருப்பார்கள். அந்நாளைய பிரபல இலக்கிய ஆசிரியரான டிக்கன்ஸ் படைப்புக்களான பாத்திரங்கள் அந்நாளைய உடைகளில் தோன்றி அந்நாளைய பாஷையில் உங்களை வரவேற்று உபசரித்தால் நீங்கள் மகிழ்ச்சி கலந்த ஒரு வியப்பில் ஆழ்வது இயல்பே யல்லவா? இப்படியொரு புது மாதிரியான முறையில் சென்னை கிறிஸ்துவக் கல்லூரி ஆங்கில இலக்கியப் பாடம் எடுத்துக் கொண்ட மாணவர்கள் டிக்கன்ஸுக்கு ஓர் அரிய விழா எடுத்துச் சிறப்பித்தார்கள். அம்மாணவர்களுடன் விஞ்ஞானத் துறை மாணவர்களும் சேர்ந்து ஒத்துழைத்து வெற்றிகரமாகப் பரிமளிக்கச் செய்தார்கள்.

இவ்விரண்டு நாள் விழாவில் சென்னையிலுள்ள க்வீன் மேரீஸ், டபிள்யூ. வி. ஸி., ஸ்டெல்லா மேரீ, லயோலா ஆகிய பல கல்லூரி மாணவ மாணவிகளும் சேர்ந்து, டிக்கன்ஸ் நாவல்களிலிருந்தும் கதைகளிலிருந்தும் சில ரசமான பகுதிகளை நடித்துக் காட்டிப் பாராட்டுப் பெற்றனர்.

இப்படி நடித்துப் புகழ் பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்க ஒரு மந்திரிகூட இல்லையே என்று அவர்கள் மூக்கால் அழவில்லை. டிக்கன்ஸ் இருக்கையில் அவர்கள் ஏன் அழவேண்டும்? வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவார்களா? டிக்கன்ஸ் வேஷம் தரித்த மாணவரே எல்லாருக்கும் பரிசுகளைக் கம்பீரமாக வழங்ினார். அந்த மாணவர் பொல்லாதவர் என்றும் தெரிந்து விட்டது. தாம் டிக்கன்ஸ் வேஷத்தில் ஒளிந்து கொண்டிருப்பதால், அந்த முதுமையையும், கௌரவத்தையும், அக்காலத்து அந்நாட்டைய பழக்கத்தையும் கவனத்தில் கொண்டு, பரிசு பெற வந்த மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கியதோடு கைகுலுக்கி வாழ்த்தியும் அனுப்பினார்! நாணம் கலந்த தைரியத்துடன் அத்தனை பேர் எதிரில் மாணவிகள் கைகுலுக்கிய காட்சி ரஸமாக இருந்தது.

டிக்கன்ஸுக்கு மட்டுமின்றி மற்ற இலக்கிய ஆசிரியர்களுக்கும் இத்தகைய விழாக்களை ஆண்டுக்கொரு முறை நடத்துவது மாணவர்களுக்குப் பல நல்இலக்கியங்களைப் படிக்கவும் அறிமுகம் செய்து கொள்ளவும் வாய்ப்பு அளிப்பதாக அமையும்.

இதைப் போலவே தமிழ்த் துறை மாணவர்களும் தமிழ் இலக்கிய ஆசிரியர்களுக்கு எளிய இனிய முறையில் விழா நடத்தலாமே!


பூப்போன்ற
மென்மைக்கு
பிபின்
சேலைகள்
பிபின் சில்க் மில்ஸ் கோ. பிரைவேட் லிட்
பம்பாய்-28
★ நைலான் ஜார்ஜெட் சேலைகள்
★ "டெரீன்" ஷர்ட்டிங்குகள் & சூட்டிங் துணிகள்
ரோஜா இலைச் சின்னத்தைப் பார்த்து வாங்குங்கள்
ரோஹித் க்ரூப் எண்டர்ப்ரைஸ்

வட்டார நகைச்சுவை

ஒவ்வொரு தேசத்து மக்களுக்கும் இயல்பான குணம் என்று ஒன்று இருக்கிறதல்லவா? ஒரு தேசத்து மக்கள் செலவாளிகளாக இருக்கலாம்; இன்னொரு நாட்டு ஆசாமிகள் தொணதொணப்புப் பேர்வழிகளாக இருக்கலாம்; வேறு சில நாட்டு ஜனங்கள் ஆடம்பரப் பிரியர்களாகவோ அல்லது பழமை மோகம் கொண்டவர்களாகவோ இருக்கலாம். ஸ்காட்லாந்துக்காரர்கள் கஞ்சப் பேர்வழிகள் என்பது உலகப் பிரசித்தம். அவர்களைப் பற்றிய சில நகைச் சுவைத் துணுக்குகளை இங்கே காணலாம்!



ஒரு தந்தை, வெளியூரில் இருக்கும் தம் மகனுக்குக் கடிதம் எழுதினார்:

"நீ ஏன் வர வரக் கடிதமே எழுத மாட்டேனென்கிறாய்?... தபாலாபீசுகளிலும் பாங்கிலும்தான் பேனாக்கள் வைத்திருக்கிறார்களே, அவற்றை உபயோகப்படுத்திக் கடிதம் எழுதுவதுதானே?..."



கடைக்காரப் பையன் முதலாளியிடம் வந்தான்.

"ஸ்காட்லாந்துக்காரர் ஒருத்தருக்கு வாழ்க்கை வெறுத்துப் போய்விட்டதாம்... தற்கொலை செய்துகொள்ளப் போகிறாராம். பத்து செண்ட்டுக்கு விஷம் வேண்டுமாம்... நான் என்ன செய்யட்டும்?" என்றான்.

"விஷத்தின் விலை பதினொரு செண்ட் என்று சொல்லு. பேசாமல் திரும்பிப் போய் விடுவார்!" என்று வழி சொல்லிக் கொடுத்தார் முதலாளி.

நேரம் கழித்து வீடு திரும்பிய பையனை அப்பா கோபித்துக் கொண்டார்: "உன் காதலியுடன் ஊர் சுற்றிவிட்டு மெள்ள வருகிறாயாக்கும்?..."

"ஆமாம்பா...."

"மொத்தம் எவ்வளவு செலவாயிற்று?...சொல்லித் தொலை!"

"அரைக் கிரவுன்.. அவ்வளவுதான்!"

"அவ்வளவுதானா?... அநாவசியமாக இப்படிச் செலவு செய்கிறாயே, வெட்கமில்லை உனக்கு?..."


"கவலைப்படாதீர்கள் அப்பா...செலவழித்தது அவள், நானல்ல!..."



மூப்பது வருடங்களுக்குமுன் அமெரிக்காவுக்கு ஓடிப்போன ஒருவர் ஸ்காட்லாந்துக்குத் திரும்பி வந்தார். அவரை வரவேற்க, ரயில்வே நிலையத்துக்கு வந்திருந்தான் ஸ்காட்லாந்திலிருந்த தம்பி.

தம்பியைத் தழுவிக் கொண்டு நலம் விசாரித்த பிறகு அண்ணன்காரர் கேட்டார்: "ஆமாம், இதென்ன, தாடியும் மீசையுமாக இருக்கிறாயே, உடம்பு சரியில்லையா?"

"நீங்கள்தான் அமெரிக்காவுக்கு ஓடிப் போகும்போது நம் இரண்டு பேருக்கும் சொந்தமான ஸேப்டி ரேஸரைத் தூக்கிக் கொண்டு போய்விட்டீர்களே!..." என்று பதிலளித்தான் இந்தத் தங்கத் தம்பி!



"செருப்புத் திருடியதை நீ ஒப்புக்கொள்கிறாயா?" என்று கேட்டார் நீதிபதி குற்றவாளிக் கூண்டில் நின்றிருந்தவரிடம்.

"நான் திருடவில்லை ஐயா! இந்தச் செருப்பை ஸ்காட்லாந்துக்காரர் ஒருவர் எனக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்..."

"திருடியதற்கு ஒரு பவுனும், கோர்ட்டில் பொய் சொன்னதற்காக ஒரு பவுனும் அபராதம் விதிக்கிறேன்!" என்று உடனடியாகத் தீர்ப்பளித்தார் அந்த நீதிபதி!

'அதிசயம்' என்ற பெயர் கொண்ட சினிமாவுக்கு டிக்கட் வாங்குவதற்குப் பெரிய க்யூ வரிசை நின்று கொண்டிருந்தது. ஸ்காட்லாந்துக்காரர் ஒருவர் ஒன்பது பவுன் கொடுத்து மூன்று டிக்கட்டுகள் வாங்கினார். உடனே அவருக்குப் பின்னால் நின்றிருந்த ஓர் அமெரிக்கர் க்யூவிலிருந்து விலகி நடந்தார்.

''ஏன், நீங்கள் படம் பார்க்கப் போகவில்லையா?...'' என்று கேட்டார் க்யூவில் நின்று கொண்டிருந்த இன்னொருவர்.

''நான்தான் அதிசயத்தைப் பார்த்தாகி விட்டதே!'' என்று பதிலளித்தார் அந்த அமெரிக்கர்.



ஸ்காட்லாந்து ஆசாமிகள் இரண்டு பேர் ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தார்கள். ஹோட்டல் சிப்பந்தி ஒருவன், 'ஓவர்கோட்' ஒன்றைக் கொண்டு வந்து நீட்டியதும், அவனுக்குப் பத்து ஷில்லிங் 'டிப்' கொடுத்தார் ஒருவர்.

''என்ன இருந்தாலும் நீ கொடுத்த பத்து ஷில்லிங் ரொம்ப அதிகம்தான்...'' என்றார் ஒருவர் மற்றவரிடம்.

''நான் என்னவோ வரும்போது கோட்டு போட்டுக் கொண்டு வரவில்லையே! பத்து ஷில்லிங்குக்கு இதைப் போலக் கோட்டு எவன் கொடுக்கிறான்?'' என்றார் மற்றவர் நிதானமாக!



பால்கனியில் உட்கார்ந்து குடும்பத்துடன் சினிமாப் பார்த்துக் கொண்டிருந்தார் ஒருவர். திடீரென்று கீழே எட்டிப் பார்த்த அவருடைய பையன் அப்படியே தலைகுப்புற விழுந்து விட்டான். அவனுடைய தகப்பனார், தியேட்டர் மானேஜரிடம் ஓடினார் குடுகுடு வென்று — பையன் படம் முழுவதும் பார்க்காததால் டிக்கட்டை வாபஸ் வாங்கிக் கொண்டு பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் படி கேட்பதற்காக! — எஸ். தேவகி

ஸ்காட்லாந்துக்காரர்கள் கணிதத் திறமைக்கும் புகழ் பெற்றவர்கள். அவர்களின் கணித வல்லமையை விளக்கும் விதத்தில் இந்தத் துணுக்கைக் கூறுவதுண்டு.



இரயில் வண்டியில் ஒரு ஸ்காட்லாந்துக்காரர் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு எதிரில் இருந்தவர் தூரத்திலிருந்து ஓர் ஆட்டு மந்தையைக் காட்டி, 'அதில் எவ்வளவு ஆடுகள் இருக்கின்றன?' என்று கேட்டார். அதற்கு ஸ்காட்லாந்துக்காரர் சரியாக விடையளித்தார். 'அதற்குள் ஆடுகளின் தலையை எண்ணிவிட்டீர்களா?' என்று கேட்டார் ஆச்சரியமடைந்த சக பிரயாணி. ஸ்காட்லாந்துக்காரர், 'இதற்குப் போய் யாராவது தலைகளை எண்ணிக் கொண்டிருப்பார்களா? கால்களை எண்ணி நான்கால் வகுத்து விட்டேன்' என்றார். — முரளி

ஸ்காட்டிஷ் மக்களின் கணிதத் திறனுக்கும் சிக்கனத்துக்கும் எடுத்துக் காட்டாக மேலே உள்ள துணுக்குகளைப் படித்தீர்கள். அதேபோல் தமிழ் நாட்டிலும் ஒவ்வொரு மாவட்டத்தினருக்கும் ஒரு தனி இயல்பு உண்டு. அப்படி அந்தத் தனி இயல்பு வெளிப்படும் வகையில் துணுக்குகள் எழுதி அனுப்புங்கள். சிறந்த துணுக்கு ரூபாய் இருபத்தைந்து பரிசு பெறும். பிரசுரமாகும் மற்ற துணுக்குகளுக்கு வழக்கம்போல் சன்மானம் அளிக்கப்படும்.

முதலில்: தஞ்சை மாவட்டம்


முடிவுத் தேதி: 11-3-67

உறையின்மேல் ''வட்டார நகைச்சுவை: தஞ்சை'' என்று குறிப்பிட வேண்டும். பிரசுரமாகாத துணுக்குகளைத் திருப்பி அனுப்புவதற்கில்லை. ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.



பிப்ரவரி
24ஊ முதல்
சென்னை
காமதேனு
மற்றும்
தென்னாடெங்கும்
சுதர்சன் பிலிம்ஸ்..
ஸ்ரீ குருவாயூரப்பன்
(தமிழ்)
தயாரிப்பு: வசனம்-பாடல்: டைரக்ஷன்:
K.S. கணபதி • கு-சா-கி • S. ராமனாதன்
ELEGANT

கல்லுக்குள் ஈரம்



ஏழாம் அத்தியாயம்

"சுயேச்சை அச்சகம்"

ரங்கமணியைத் தப்பிக்க வைத்து அழைத்து வந்தவர் இப்போது அவனைப் பார்த்துக் கேட்டார்: ''கை வெடிகுண்டு சத்தம் கேட்டதே, நீதான் எறிந்தாயா?'' ரங்கமணி தலையை அசைத்தான்.

''எங்கிருந்து ஓடி வருகிறாய்?'' என்று கேட்டார். ரங்கமணி பதில் கூறத் தயங்கினான். 'ஒருவேளை அந்த மனிதர், இரகசியப் போலீஸ்காரராயிருந்தால்...?

''என்ன தம்பி, யோசிக்கிறாய்? என்ன பொய் சொல்லலாம் என்று யோசிக்கிறாயா? உண்மையைச் சொல். நான் இரகசியப் போலீஸ் இல்லை'' என்றார் அவர் சிரித்துக் கொண்டே. ரங்கமணி திடுக்கிட்டான்.

ர. சு. நல்லபெருமாள்



வெள்ளிவிழா இரண்டாவது பரிசு நாவல்

'அவருக்குச் சித்து வேலை தெரியுமோ? நாம் நினைத்ததைச் சொல்லி விட்டாரே! விசித்திர மானவர்தாம்...'

''என்ன இவ்வளவு யோசனை?'' என்று கேட்டார் அவர்.

'' கோட்டையிலிருந்து வருகிறேன்....'' என்றான் ரங்கமணி.

''கோட்டை கட்டடத்தில் குண்டு வீசத்தானே போனாய்?''

ரங்கமணி தலையை ஆட்டினான்.

''அப்படித்தான் நினைத்தேன். செம்புதாஸ் கிட்டங்கியின் வெடிகுண்டை வாங்கியபோதே சந்தேகித்தேன். இப்படிச் சிக்கலில் மாட்டிக் கொள்வாய் என்றும் எதிர்பார்த்தேன்....'' என்றார்.

''செம்புதாஸ் கிட்டங்கிக்கு நான் வந்தது உங்களுக்கு..''

''எல்லாம் தெரியும், தம்பி. நானும் அந்தக் கூட்டந்தான். உன்னைத் தொடர்ந்து வந்தேன். கோட்டைக்குள் போவதைப் பார்த்தேன். உனக்கு உதவியாகக் காரைக் கோட்டை வாசலுக்குக் கொண்டு வரலாம் என்று நினைத்த போதுதான் வெடிகுண்டு சத்தம் கேட்டது. பிறகு தூரத்தில் நீ ஓடி வருவதும் தெரிந்தது. நல்ல வேளை! நான் இருந்த திசையில் ஓடி வந்தாய். இல்லை யென்றால், இந்த நேரத்தில் சிறைக் கம்பிகளை எண்ணிக் கொண்டிருப்பாய். உன் திட்டம் நிறைவேற வில்லை; அதற்குள் சிப்பாய்கள் உன்னைத் துரத்த ஆரம்பித்து விட்டார்கள், அப்படித்தானே?''


ரங்கமணி தலையை அசைத்தான்.

''இதெல்லாம் நீ ஒருவனே செய்த வேலையா? அல்லது கூட்டமாகச் சேர்ந்து செய்த சதி வேலையா?'' என்று கேட்டார்.

''நான் மட்டுந்தான்'' என்றான் ரங்கமணி பெருமிதத்துடன். ''உனக்குத் துணிவு இருக்கிறது, துடிப்பு இருக்கிறது! சக்தியும் இருக்கிறது. ஆனால் அறிவு ஒன்றுதான் இல்லை!'' என்று அவர் சொன்னதும் ரங்கமணி திடுக்கிட்டான். அவனுள் கோபம் தலைதூக்கியது. அவரை முறைத்துப் பார்த்தான். அவன் தோள் மீது வாஞ்சையோடு கையைப் போட்டுக் கொண்டு அவர் சொன்னார்:

''தம்பி, இதெல்லாம் தனிமனிதன் செய்யக் கூடாதது. இதில் வெற்றியும் கிட்டாது. இதை யெல்லாம் கூட்டாகச் சேர்ந்து திட்டமிட்டுச் செய்தால்தான் வெற்றி கிடைக்கும். அசட்டுத்தனமாக இப்படி நடந்து கொண்டாயே. அந்த இடத்தில் நான் இல்லையென்றால் இதற்குள் உன் கதி என்னவாகி யிருக்கும்! வெறும் துணிச்சலும், பலமும், தியாக உணர்ச்சியும் இருந்தால் மட்டும் போதாது. உன்னைப் போன்ற





உணர்ச்சி உள்ளவர்களின் கூட்டுறவுடன் செயல்பட்டால்தான் வெள்ளையனை விரட்ட முடியும். இது போன்ற தனிப்பட்ட முயற்சியெல்லாம் வீண்தான்.''

ரங்கமணி வியப்புடன் அவரைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''உன் பெயர் என்ன?''—அவர் கேட்டார்.

''ரங்கமணி.''

''எங்கு தங்கியிருக்கிறாய் ?''

''தம்புச் செட்டித் தெரு காளி கோயிலுக்குப் பக்கத்தில்.''

''தனியாகவா ?''

''உடன் ஒரு பெரியவர் இருக்கிறார்.''

'' யார் ?''

''சங்கரராம தீக்ஷிதர் என்பவர்........''

''ஓ... சங்கரராமனா...?''

''உங்களுக்குத் தெரியுமா?''

''முப்பது வருஷங்களாகத் தெரியும். அவனோடு எப்படிச் சேர்ந்தாய் ? அவன் திசை வேறு, உன் திசை வேறு அல்லவா?''



''கொள்கை வித்தியாசம். அவ்வளவு தான்.''

''உன்னைக் கோழையாக்கி விடாமல் பார்த்துக் கொள்'' என்று கூறிச் சிரித்தார். ரங்கமணியும் சிரித்துக் கொண்டான்.

''வெள்ளையனை அடித்து விரட்ட ஒரு சங்கமே இருக்கிறது. நீ சேரத் தயாரா?'' என்று அவர் கேட்ட போது ரங்கமணி துள்ளி எழுந்தான். ''இப்போதே சேருகிறேன்'' என்றான் பரபரப்புடன். அவர் அன்போடு அவனைத் தழுவிக் கொண்டார்.

''என் பெயர் சர்தார் சொக்கலிங்கம் பிள்ளை. உன்னைப் போன்ற தீரர்களைத்தான் தேடி அலைகிறேன்'' என்றார்.

மறு நாள் காலையில் சர்தார் சொக்கலிங்கம்பிள்ளையைத் தன்னுடைய இருப்பிடத்துக்கு அழைத்துச் சென்றான் ரங்கமணி. சொக்கலிங்கம் பிள்ளையைக் கண்டதும் தீக்ஷிதர் திடுக்கிட்டார்.

''இவனையும் பிடித்து விட்டாயா சொக்கலிங்கம்? கழுகுக்கு மூக்கில் வியர்ப்பது போல் உனக்கு எப்படித்தான் இவன் இருப்பது தெரிந்ததோ!'' என்றார் தீக்ஷிதர் மிகுந்த வருத்தத்துடன்.

''சங்கரராமா, இனம் இனத்தோடு தான்டா சேரும். ஆனால் நீ இவனோடு இருப்பதுதான் அதிசயம்!'' என்று கூறிச் சிரித்தார் சொக்கலிங்கம்.

''சொக்கலிங்கம்! ரங்கமணியை விட்டு விடு. அவன் குழந்தை. உன்னுடைய பாதையில் அவனால் கடைசிவரை வர முடியாது'' என்றார் தீக்ஷிதர்.

''ராட்டினத்தைச் சுற்ற வைத்து ரங்கமணியைச் சோம்பேறியாக்கிவிட முடிவு செய்தாயா? இவனைப் போல் இன்னும் எத்தனையோ பேர் வேண்டுமே என்னுடைய பாகசாலைக்கு'' என்றார் சொக்கலிங்கம் பிள்ளை.

''காந்திஜியின் போராட்டத்துக்கு உன்னைப் போன்றவர்களின் நடவடிக்கைகள் தான் முட்டுக்கட்டையாக இருக்கின்றன'' என்றார் தீக்ஷிதர்.

''காந்திஜி நடத்துவது போராட்டமா? சுத்தப் பைத்தியக்கார விளையாட்டு. உதை கொடுத்தால்தான் வெள்ளைக்காரன் ஓடுவான். உங்களுடைய தத்துவங்களுக்கு அவன் பயப்படப் போவதில்லை'' என்றார் சொக்கலிங்கம் பிள்ளை.

தீக்ஷிதர் எவ்வளவுதான் முயன்றும் சொக்கலிங்கம் பிள்ளையின் தொடர்பிலிருந்து ரங்கமணியைப் பிரிக்க முடியவில்லை.

இரண்டு நாட்களில் ரங்கமணியின் தாத்தாவிடமிருந்து கடிதம் வரவே ரங்கமணி ஊருக்குப் புறப்பட்டு விட்டான். தீக்ஷிதரும் கூடவே புறப்பட்டார். அப்போதுதான் சர்தார் சொக்கலிங்கம்பிள்ளை ரங்கமணிக்குக் கடிதம் கொடுத்துச் சிந்துபூந்துறைக்கு அனுப்பி வைத்தார்.

ஃ ஃ ஃ

சர்தார் சொக்கலிங்கம் பிள்ளையின் வீட்டில் படுத்திருந்த ரங்கமணி பழைய நினைவுகளினால் தூக்கமில்லாமல் புரண்டுகொண்டிருந்தான். சதா சொக்கலிங்கம் பிள்ளையின் நினைவுதான் அவனுடைய உள்ளத்தில்...

அறுபது வயதுக்கு மேல் இவ்வளவு ஆர்வத்துடன் பயங்கர இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறாரே! அறுபதாண்டு வாலிபராக இவர் திரிந்து கொண்டிருக்கும்போது, எத்தனையோ இளைஞர்கள், இருபதாண்டு கிழவர்களாக முடங்கிக் கிடக்கிறார்களே! இவர், இதற்கு முன் எங்கிருந்தார்..? என்ன செய்துகொண்டிருந்தார்....?

ரங்கமணி விடை கிடைக்காமல் தவித்தான். ரயில் வண்டியில் வரும்போது சர்தாரைப் பற்றி தீக்ஷிதரிடம் விசாரித்தான். தீக்ஷிதரோ மௌனம் சாதித்து விட்டார்.

முப்பது ஆண்டுகளாகப் பழகிய தீக்ஷிதருக்குச் சர்தாரைப் பற்றித் தெரியாமலா இருக்கும்? ஏதோ மர்மம் இருக்கிறது. ''தம்பி, சர்தாரைப் பற்றிப் பிறகு சொல்கிறேன். அது பெரிய இரகசியம். இவனுடைய சீடர்களில் இவனும் ஒருவன். கப்பலோட்டிய தியாகி சிதம்பரம் பிள்ளையும் இவனும் நெருங்கிய நண்பர்கள்'' என்று மட்டும் கூறினார் தீக்ஷிதர்.

''அப்படி யென்றால், அப்பாவுக்கு இவரைத் தெரிந்திருக்குமே?'' என்று அவருடன் கேட்டான் ரங்கமணி.

''உன்னுடைய அப்பாவும், சர்தாரும் உயிர்த் தோழர்கள். நீயே சர்தாரிடம் கேள்; சொன்னாலும் சொல்லுவான்'' என்று கூறி விட்டார் தீக்ஷிதர்.



யார் அந்தச் சிறுவன்?

ராஜாஜி அவர்களுக்கு அருகிலே ஸ்ரீமதி நாமகிரியும் பேத்தி இந்திராவும் இருக்கிறார்கள். இன்னொரு சிறுவன் மலர்ந்த முகத்துடன் காட்சி அளிக்கிறானே, அவன் யார் தெரிகிறதா?

தெரியா விட்டால் 40-ம் பக்கம் புரட்டிப் பாருங்கள். யாரென்று புரிந்து விடும்!

சர்தார் சொக்கலிங்கத்தின் கடந்த காலத்துக்குள் பெரிய இரகசியம் மறைந்து கிடக்கிறது என்பதை உணர்ந்ததும் அதைத் தெரிந்து கொள்ளும் ஆவல் அதிகரித்தது.

அவரைப் பற்றிய நினைவிலேயே இரவு வெகு நேரம் வரையில் தூக்கமில்லாமல் கழித்தான் ரங்கமணி.

இவனைப் போலவே திரிவேணியும் பல நினைவுகளால் புரண்டு கொண்டிருந்தாள். ரங்கமணியின் நினைவு இனித்தது.

'இப்படி ஒரு முரட்டுக் குறும்பு ஆசாமியைத் தேடிப் பிடித்திருக்கிறாரே, அப்பா! அவருக்கேற்ற சீடன்தான். பெயரைப் பாரேன், ரங்கமணி.....! இனிமையாகத்தான் இருக்கிறது. ஆனால் குணம் கரடுமுரடாயிருக்கிறதே! அழகும் ஆற்றலும் அமைந்த இடத்தில் கடவுள் இப்படித்தான் எதையாவது பொருத்தமில்லாமல் அமைப்பார் போலிருக்கிறது. ஏன், இதற்கு நல்ல உதாரணம் அப்பாவே இருக்கிறாரே. அவருடைய அன்பும் பண்பும் ஒரு பக்கம் இருக்கும் போதே, கூடவே பயங்கரமும் கொடுமையும் ஒட்டிக் கொண்டிருக்கின்றனவே. நல்ல கூட்டுறவுதான். ரங்கமணியை எப்படித்தான் தேடிப் பிடித்தாரோ? இனம் இனத்தோடு சேர்ந்திருக்கிறது. அப்பாவைப்போல் ரங்கமணி அவ்வளவு கடின சித்தமுள்ளவர் அல்லர். எப்படியும் நம் வழிக்கு அவரைத் திருப்பி விடலாம்.......'

இரவு வெகு நேரம் தூங்காமல் இந்தச் சிந்தனையிலேயே நேரத்தைப் போக்கிவிட்டுக் கடைசியில் தன்னை மறந்து உறங்கிவிட்டாள் திரிவேணி.

அதிகாலையில் ரங்கமணி எழுந்து விட்டான். கட்டிலில் எழுந்து உட்கார்ந்தவனின் கண்களில் முதலில் தென்பட்டது, வாசலில் திரிவேணி கோலமிடும் கோலந்தான். நெற்றியில் கீற்றுப் போல் பளிச்சிட்ட திருநீறும், இரு புருவங்களும் கூடும் இடத்துக்குச் சற்று உயரே சிறிய குங்குமமும், இதழ்களில் சிந்தும் புன்னகையுமாகக் காட்சியளித்தாள் திரிவேணி. குளித்த தலை இன்னும் காயவில்லையாதலால், கூந்தலை நுனியில் முடிந்து பின்னே படர விட்டிருந்தாள். கை பரபரவென்று கோலத்தில் ஈடுபட்டிருந்த பாங்கைச் சன்னல் வழியாக இரு கண்களாலும் சுவைத்துக் கொண்டிருந்தான் ரங்கமணி.

கோலத்தை முடித்து விட்டுத் திரிவேணி ஒரு குழந்தையைப் போல் அப்படியும் இப்படியும் தலையைச் சாய்த்துச் சாய்த்து அதைச் சரிபார்த்து நின்ற நிலையை ரசித்துக் கொண்டிருந்தான். கோலம் நன்றாக அமைந்து விட்டதால் ஏற்பட்ட திருப்தியில் பெருமூச்சு விட்டுக் கொண்டே தலை நிமிர்ந்த திரிவேணியின் பார்வை, சன்னலுக்குள் நுழையவே, ரங்கமணியின் பார்வையோடு மோதியது.

"ஓ.... புரட்சி, தூக்கத்திலிருந்து எழுந்தாகி விட்டதா?" என்று கேட்டுக்கொண்டே அறையின் வாசலுக்கு வந்தாள் திரிவேணி. கதவைத் திறந்து கொண்டு ரங்கமணியும் வாசலுக்கு வந்தான்.

"நல்ல தூக்கந்தானே. சொப்பனத்தில் மகாத்மா வந்து பயமுறுத்தவில்லையே!" — திரிவேணி குறும்பாகக் கேட்டாள்.

"அதற்குப் பயந்துதானே அவரை உன்னோடு அனுப்பி விட்டேன்!"

"வெறும் படத்துக்கே இவ்வளவு பயமிருந்தால், மகாத்மாவை நேரில் கண்டால்?"

"எனக்கு என்னவோ அவருடைய கொள்கையை நினைத்தாலே நெஞ்செல்லாம் கசக்கிறது" என்றான் ரங்கமணி முகத்தைச் சுளித்துக் கொண்டே.

"கொள்கை கசந்தால், அதற்காக ஆளையே வெறுப்பதா?"

"அவரைப் பார்க்கவே கூடாது என்பது தான் என் விருப்பம். அதுவும், விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டிருக்கும் தீவிரவாதிகளின் மீது அவருடைய நிழல்கூடப் பட்டு விடக் கூடாது."

"அடேயப்பா, என்ன தீவிரம்! சரி. இன்று நாம் 'பிக்னிக்' போகிறோம்."

"எங்கே?" என்று ஆவலோடு கேட்டான் ரங்கமணி.

"எங்கள் தோட்டத்துக்கு. சீக்கிரம் புறப்படுங்கள். அத்தை சாப்பாட்டுக்கு வேண்டியதை யெல்லாம் தயார் செய்து விட்டாள். சீக்கிரம் புறப்படுங்கள்!" என்று கூறி விட்டு வீட்டினுள் சென்றாள் திரிவேணி.

காலையில் எட்டு மணிக்கு ஓர் ஒற்றை மாட்டு வண்டியில் அத்தையுடன் ரங்கமணியும், திரிவேணியும் ஏறிக் கொண்டார்கள். வண்டியைக் குமார் ஓட்டினான். வெயில் இல்லை. மேகம் மூடி மந்தாரமாகவே இருந்தது.

திருநெல்வேலியிலிருந்து ஏழு மைல் தொலைவில் உள்ள கிருஷ்ணாபுரம் என்ற கிராமத்துக்குப் பக்கத்தில்தான் தோட்டம் இருந்தது. சிறிது நேரம் தோட்டத்தில் இருந்துவிட்டு எல்லாரும் கிருஷ்ணாபுரம் கோயிலுக்கு வந்தார்கள். ரங்கமணியும் திரிவேணியும் முன்னே விரைவாக நடந்தார்கள். அத்தையும் குமாரும் மெதுவாகப் பின்னே வந்தார்கள். அப்போது ரங்கமணி கேட்டான்:

"உனக்கு எப்படி அத்தை?"

"அப்பாவுக்கு ஒன்றுவிட்ட தங்கை. அத்தையின் கணவர் பெரிய குடிவெறியர். அவருடைய கொடுமை தாளாமல் அத்தை தவித்தாள். ஒரு நாள் திடீரென்று இந்த மாமா எங்கோ போய் விட்டார். அவர் இருப்பிடமே தெரியவில்லை. அத்தையின் பொறுமைக்கும், அடக்கத்துக்கும், தங்கமான குணத்துக்கும் அப்படி ஒருவரைத் துணையாகச் சேர்த்து விட்டார் கடவுள்" என்றாள் திரிவேணி. அத்தையின் வரலாறு ரங்கமணியின் மனத்தைக் கலக்கியது. அவள் மீது அவனுக்குப் பாசம் பெருகியது.

இருவரும் பேசிக் கொண்டே கோயிலுக்குள் நுழைந்தார்கள். முதல் மண்டபத்திலிருந்த சிலைகளைக் கண்டு பிரமித்து நின்றான் ரங்கமணி. கல்லெல்லாம் உயிர் பெற்றிருந்தன. கல்லிலும் உயிர் ஊட்டி விடும் சக்தி அந்தக் காலத்துச் சிற்பிகளிடம் எப்படித்தான் அமைந்ததோ! சிற்பங்களின் அழகை

யும் நுணுக்கங்களையும் கண் கொட்டாமல் பார்த்து நின்றான்.

"வெறும் கல்லில் எவ்வளவு அற்புதத்தை விளைவித்திருக்கிறார்கள்!" என்று வியப்புடன் கூறினான் ரங்கமணி.

"புரட்சியையே நினைத்துக் கல்லாகி விட்டவர்களுக்கு இந்த அற்புதங்களையெல்லாம் ரசிக்க முடியுமா?" என்று கேட்டாள் திரிவேணி.

"ஏன் முடியாது?"

"எனக்கு நம்பிக்கை இல்லை. இந்தக் கல்லை வெள்ளைக்காரன் தலையில் போட்டு உடைக்க வேண்டும் என்று தோன்றலாமே தவிர, கல்லில் நிறைந்திருக்கும் கலையை உணரவா முடியும்?"

"தீவிரவாதிகள் என்றால், காட்டுமிராண்டிகள் என்று நினைத்து விட்டாயா? அவர்களுக்கும் இதயம் உண்டு. மென்மையை உணரும் தன்மை உண்டு. அன்பை ஏற்கும் பண்பு உண்டு. கலையை ரசித்து உணரும் உள்ளமும் உண்டு. இதெல்லாம் அஹிம்சைத் தத்துவத்தால் கோழையானவர்களுக்குத்தான் இருக்கும் என்று வார்தாவிலிருந்து வியாக்கியானம் ஏதாவது வந்ததா?" என்றான் ரங்கமணி கேலியாக.


திரிவேணி அவனையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். "தீவிரவாதிகளிடம் கவிதா சக்தியும் உண்டு போலிருக்கிறதே" என்றாள் திரிவேணி.

"இந்தக் கல்லில் கலை புகுந்த மாதிரி" என்றான் ரங்கமணி.

கோயிலுக்குள்ளிருந்து அத்தை கூப்பிடும் குரல் கேட்கவே, இருவரும் கோயிலுக்குள் நுழைந்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு எல்லோரும் தோட்டத்துக்குத் திரும்பினார்கள். தோட்டத்தில் அமர்ந்து, குமாரி பரிமாற அனைவரும் சாப்பிட்டார்கள். உணவருந்தும்போது திரிவேணி கேட்டாள்.

"உங்களுக்குப் பெற்றோர்கள்...?"

"யாருமில்லை. தாத்தா மாத்திரம் இருக்கிறார். பாவம், என்னால் அவருக்கு நிம்மதியே கிடையாது" என்றான் ரங்கமணி.



வேர்க்கடலை சாப்பிடுவது ஆணா-பெண்ணா?

சென்னை மாம்பலம், உஸ்மான் ரோட்டில் பாரதி பட்டாணிக் கடலைக் கடை வைத்திருக்கும் திரு சுந்தரம், வேர்க்கடலையைப் பற்றிச் சூடாகச் சொன்ன சில சுவையான சம்பவங்கள் இவை:

தஞ்சை ஜில்லா வடசேரியிலிருந்து நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் எங்கள் முன்னோர்கள் சென்னைப் பட்டணத்துக்கு வந்து மணிலாக் கொட்டை வியாபாரம் தொடங்கினார்கள். முதன் முதலில் எங்கள் கடை ஜார்ஜ் டவுனில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது சென்னையில் வேர்க்கடலைக் கடைகள் இல்லாத இடமே இல்லை என்று கூடக் கூறலாம்.



சென்னையில் வேர்க்கடலை கடை வைத்திருக்கும் பலர்களில் பலர் எங்கள் உறவினர்கள்தான்.

நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னால் ஒரு படி வேர்க்கடலை ஐந்தே ஐந்து அணாவாக இருந்தது. இப்பொழுது ஒரு படி ரூ. 3.20

அண்மையில் குஜராத்தி மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்கு வேர்க்கடலை போகக் கூடாது என்று அரசு தடை விதித்த பொழுது, கடலையின் விலை மிகவும் வேகமாக உயர்ந்தது. மறுபடியும் அரசு விதித்த தடை நீங்கியதால் இப்பொழுது விலை, சில நட்சத்திரங்களின் மார்க்கெட் விழுவது போல் குறைந்து விட்டது.

வேர்க்கடலை மூலம் அறுபதுக்கு மேற்பட்ட பண்டங்கள் தயாராகின்றன. இது வரையில் நிலக்கடலையின் தோலை அடுப்பு எரிப்பதற்காக உபயோகித்து வந்த நாங்கள் அண்மையில் புதிய கண்டுபிடிப்பு காரணமாக அடுப்பு எரிக்க முற்படுவதில்லை.

மாட்டுத் தீவனமாகவும் ஆகிறது என்பதால் தோலியை எரிப்பதும் இல்லை, எறிவதும் இல்லை; பத்திரமாகப் பாதுகாத்து வருகிறோம்.

வேர்க்கடலையிலிருந்து வெண்ணெய் எடுக்கலாம் என்று ஆராய்ச்சி மூலமாக (இப்பொழுது சிலர் கடைந்த மோரிலேயே வெண்ணெய் எடுக்கிறார்கள். அப்படியிருக்க வேர்க்கடலையில் வெண்ணெய் எடுப்பது ஒன்றும் விசித்திரம் அல்ல!) முடிவு செய்திருக்கிறார்கள்!

காலை ஆறு மணிக்குக் கடையைத் திறந்தால் இரவு பத்து மணிக்குத்தான் கடையை

""ஏன்?''

""எனக்கு ஒரு கலியாணத்தைச் செய்து விட்டால் அவருக்கு நிம்மதி ஏற்படுமாம்.''

""செய்து கொள்வதுதானே?'' என்றாள், திரிவேணி. அவள் இதழ்களில் புன்னகை அரும்பியது. ரங்கமணி அவளை உற்றுப் பார்த்தான். அவனையும் அறியாமல் ஏனோ அவன் பார்வை அவள் முகத்தையே வளைய வளையச் சுற்றி வந்தது.

""நாடு விடுதலையான பிறகுதான் அதைப் பற்றி யோசிக்க வேண்டும்'' என்றான்.

""ஓகோ! இன்னொரு பீஷ்மாச்சாரி தோன்றியாகி விட்டதா?'' என்று கூறிச் சிரித்தாள் அவள்.

LDT லையில் வீடு திரும்பினார்கள். அன்று இரவு எட்டு மணிக்கெல்லாம் சர்தார் சொக்க லிங்கம் பிள்ளை வந்து சேர்ந்தார். அவரைக் கண்டதும், தவமிருந்தவனுக்கு முன்னால் தெய்வம் தோன்றினால் எப்படி யிருக்கும், அப்படி இருந்தது ரங்கமணிக்கு.

""அப்பா, உங்கள் சிஷ்யர் உங்களுக்காகக் காத்திருந்து தவித்துப் போனார்'' என்றாள் திரிவேணி.

""எனக்கு ஒரே பயம். உன்னுடைய சாமர்த்தியத்தால் எங்கே இவன் தன்னுடைய கொள்கையை இழந்து விடுவானோ என்று தான் பயந்து கொண்டிருந்தேன். இருந் தாலும், இவன் மீது எனக்கு நம்பிக்கை உண்டு. உன்னுடைய திறமை யெல்லாம் இவனிடம் செல்லாது'' என்று கூறிச் சிரித் தார் சர்தார்.

""உண்மைதானப்பா! இவர் தங்கியிருக் கும் அறையில் மகாத்மாவின் படம்கூட இருக்கக் கூடாது என்று கூறிவிட்டார். படத்தைக் கண்டே பதறும் சூரப்புலிதான்!''

ரங்கமணி பதில் கூற முனைந்தான். அதற் குள் சர்தார் இடைமறித்து விட்டார்.

""ரங்கமணி, இவள் கூறியதுக்கெல்லாம் நீ பதில் கூற நினைத்தால் இந்த யுகமே காணாது'' என்றார். பிறகு கேட்டார்:

முடுகிறோம். குழந்தைகளுக்குச் சாக்லெட் வாங்கிக் கொடுப்பதால் காசுக்குக் காசும் செலவு, உடம்புக்கும் கெடுதல்: வேர்க்கடலை 'பர்பி' விலை மலிவு. இதனால் இரண்டு முக்கிய நன்மையும் உண்டு : சிக்கனம்; உடம்புக்கு நல்லது.

பலாப்பழம் சாப்பிட்டதற்குச் சமான மாகப் பலாக்கொட்டை சாப்பிடுவது போல் எவ்வளவு வேர்க்கடலையை விழுங் கினாலும் கொஞ்சம் வெல்லம் சாப்பிட்டா லேயே போதும் !

காந்திஜி வேர்க்கடலையை விரும்பிச் சாப் பிட்டதற்குக் காரணம் அது, தேசிய இன்பண் டம் என்பதற்காக மட்டும் அல்ல! அவருடைய மிருநிலத்தில் அதிகமாக விளையும் தானியம் என்பதற்காகவும்தான். தமிழ் நாட்டிலும் விளைகிறது. நாம் அதை ஆதரிக்கவேண்டாமா?

வேர்க்கடலை சாப்பிடுவதால் பித்தம் என் கிறார்கள். அதைத் தவிர்க்க வழி உண்டு.

வேர்க்கடலையின் உள்ளே இருக்கும் மூளையைச் சாப்பிட்டால் பித்தம். மூளையைக் கிள்ளி எறிந்து விட்டுச் சாப்பிட்டால் ஒன்றும் செய்யாது. பித்தம் மூளையில்தான் இருக்கிறது. மூளையைச் சாப்பிடுவதற்கு ரொம்பவும் ருசியாகத்தான் இருக்கும். ஆனால் அவ்வளவும் ஒரே பித்தம்.

ஆரம்பநாட்களில் நாகேஷ், வாலி இவர்கள் இருவரும் அடிக்கடி எங்கள் கடைக்கு வந்து வேர்க்கடலை வாங்கிச் சாப்பிடுவது உண்டு.

ஆண்டுதோறும் கார்த்திகை தீபத்துக்குப் பொரி வியாபாரம் பலமாக நடப்பது உண்டு. ஆனால் இந்த ஆண்டு ஒரே டல்லு. காரணம் அரிசிப் பஞ்சம்தான். ஒரு படி நெல்லை வறுத்தால், பத்து படி நெல் பொரி கிடைக்கும். படி எட்டணுவுக்கு நாங்கள் விற்கும் பொரியை வாங்க மனம் வருமா ?

முன்பு மாலை நேரத்தில்தான் வேர்க்கடலை வியாபாரம் அதிகம். இப்பொழுது அப்படி அல்ல ! காலையிலும் நல்ல வியாபாரம். சிலர் ஆபீஸில், மேஜை டிராயரில் வைத்துக் கொண்டு வேலை செய்யும் பொழுது அடிக்கடி சாப்பிட்டுக் கொண்டே ஆபீஸையும், குடலை யும் அசுத்தம் செய்கிறார்கள்.

கடலை வாங்கிச் சாப்பிடுவது ஆண்களை விடப் பெண்கள்தான் — அதிலும் கல்லூரி மாணவிகள்தான் அதிகம்.

""தங்கள் கடைக்கு, 'பாரதி பட்டாணிக் கடலை கடை' என்று ஏன் பெயர் வைத்திருக் கிறீர்கள்?'' என்று இடைமறித்துக் கேட்ட தற்கு, ""அன்று சுதந்திர தாகம் தணியப் பாரதியார் துள்ளிக் குதித்தார். வேர்க் கடலையையும் அடுப்பில் போட்டால் துள்ளிக் குதிப்பதால் அப்படிப் பெயர் வைத்தேன்'' என்று வேடிக்கையாகச் சொல்லுகிறார் வேர்க் கடலை வியாபாரி சுந்தரம். பேட்டி: அன்பு



"இவனுக்கு அச்சாபீசைக் காட்டினாயா, திரிவேணி?"

"இல்லை, என்ன அவசரம்? நீங்கள் வந்த பிறகே அந்த நரகத்துக்குப் போகட்டுமே என்றிருந்து விட்டேன்" என்றாள் திரிவேணி.

"நரகமா?"—ரங்கமணி ஒன்றும் புரியாமல் கேட்டான். சொக்கலிங்கம் பிள்ளை சிரித்தார்.

"ரங்கமணி! இந்தத் தேவதைகள் இந்தச் சொர்க்கத்திலேயே இருந்து, வார்தாக் கடவுளை நினைந்து தவமிருக்கட்டும். நமக்கு ஏற்றது நரகம்தான். வா, நரகத்தை உனக்குக் காட்டுகிறேன்" என்று கூறி ரங்கமணியை வெளியே அழைத்துச் சென்றார்.

இரவு ஒன்பது மணிக்கு மேல் இருவரும் திருநெல்வேலி ஜங்ஷன் கடைத் தெரு வழியாக நடந்தார்கள். சாலைக் குமாரசாமி கோயிலில் அர்த்தஜாம பூஜை நடந்துகொண்டிருந்தது. சொக்கலிங்கம் பிள்ளை கோயிலுக்குள் நுழையவே, ரங்கமணியும் அவரைப் பின்தொடர்ந்தான். சந்நிதியில் கூட்டம் அதிகம் இல்லை.

"வாருங்கள் சார்..." என்ற குரலைக் கேட்டுத் திரும்பினார், சொக்கலிங்கம் பிள்ளை. ஓர் இளைஞன் சிரித்தபடியே நின்று கொண்டிருந்தான்.

"சிவானந்தமா? என்ன அபூர்வமாயிருக்கிறதே?" என்றார் சர்தார்.

"சூப்பிரண்டெண்ட் மதுரைக்குப் போகிறார். ரயிலில் ஏற்றிவிட்டு வரும் வழி. அப்படியே முருகனையும் தரிசிக்கலாமே என்றுதான். பத்திரிகை விற்பனை பரவாயில்லை போலிருக்கிறதே" என்றான் அந்த இளைஞன். அவனுடைய கலகலப்பான குரலும், பேசும் தோரணையும் அவனைப் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவன் என்று காட்டிக் கொடுத்து விட்டன. ரங்கமணி அவனைக் கூர்ந்து கவனித்தான்.

சிவானந்தத்துக்கு இருபத்தைந்து வயதிருக்கும். நல்ல உயரம், சிவந்த மேனி, கட்டு உடல். எதையும் சந்தேகத்தோடு துளைக்கும் பார்வை, கம்பீரமான தோற்றம், களை பொருந்திய முகம், அதில் பெண்மையின் சாயலும் இருந்தது.

"இவர் யார் சார்?" என்று ரங்கமணியைச் சுட்டிக் காட்டிக் கேட்டான்.

"இவன் நம்முடைய நிருபர். புதிதாக வந்திருக்கிறான்" என்றார் சர்தார். இதைக் கேட்டு ரங்கமணி திகைத்தான். ஒன்றும் புரியவில்லை. மௌனமாக வேறு எங்கோ பார்த்துக் கொண்டு நின்றான்.

"ஐயோ, நிருபரா? எனக்கு நிருபர்களைக் கண்டாலே பயம். எதையாவது திரித்துத் திரித்து எழுதிவிடுவார்கள்" என்றான் சிவானந்தம். பிறகு அட்டகாசமாகச் சிரித்தான். ரங்கமணியும் மரியாதைக்காகப் பதிலுக்குச் சிரித்துக் கொண்டான்.

"சிவானந்தம் இங்கே போலீஸ் டெபுடி சூப்பிரண்டெண்டாக இருக்கிறார்" என்று அந்த இளைஞனை ரங்கமணிக்கு அறிமுகம் செய்து வைத்தார், சொக்கலிங்கம் பிள்ளை.

பூஜை முடிந்ததும் சர்தாரும் ரங்கமணியும் சிவானந்தத்திடம் விடைபெற்றுக் கொண்டு லெவல்கிராஸ் பக்கமாக நடந்தார்கள். ரயில் பாதை வழியாகவே மீனாட்சிபுரத்தை நோக்கிச் சென்றார்கள். நிலவு காய்ந்து கொண்டிருந்தது.

"தம்பி, கோயிலில் பார்த்தோமே, அவன் தான் இந்த வட்டாரத்து டெபுடி சூப்பிரண்டெண்ட். அவனுக்குக் கீழ் வேலை பார்க்கும் இன்ஸ்பெக்டர்களுக்கும் சப் இன்ஸ்பெக்டர்களுக்கும் அவனைக் கண்டால் சிம்ம சொப்பனம்தான். கடுமையான அதிகாரி. அவனுடைய அட்டகாசம் பொறுக்க முடியவில்லை!" என்றார் சர்தார்.

"என்ன?"

"காங்கிரஸ்காரர்களை அவன் படுத்தியிருக்கும் பாடு சகிக்க முடியாது."

"பார்த்தால் அப்படித் தோன்றவில்லையே?"

"பார்வைக்குக் கலகலப்பாகத்தான் இருப்பான். காங்கிரஸ்காரர்களை விரட்டி விரட்டி அடிப்பதில் அவனுக்குத் தனிப் பிரியம். அவன் மனைவி ஒரு ராக்ஷஸி. அவளுடைய தூண்டுதலால்தான் இப்படி மிருகம் மாதிரி நடந்து கொள்ளுகிறான்."

"ஒரு பெண்ணுடைய சொல்லைக் கேட்டா?"

"அவளுடைய ஆதிக்கம்தான் நடக்கிறது" என்றார் சொக்கலிங்கம் பிள்ளை.

இருவரும் பேசிக் கொண்டே மீனாட்சிபுரம் லெவல் கிராஸ் பக்கம் வந்ததும், ரயில் பாதையை விட்டு விலகி, சிக்கல் நரசையன் கிராமத்துக்குப் போகும் பாதையில் நடந்தார்கள். சிக்கல் நரசையன் கிராமத்தை அடைந்ததும் முதலாவது தெருவிலிருந்த ஒரு பெரிய கட்டிடத்தின் வாசலில் போய் நின்றார்கள். வாசற் கதவு சாத்தியிருந்தது. வெளிச் சுவரில் "ஜயபேரிகை அச்சகம்" என்ற பெயர்ப் பலகை பெரிதாகக் காட்சியளித்தது. சொக்கலிங்கம் பிள்ளை கதவைத் தட்டினார். சிறிது நேரத்தில் வாசற் கதவை அடுத்துள்ள சன்னல் கதவு திறந்தது. சன்னல் வழியாக ஓர் இளைஞன் எட்டிப் பார்த்தான். பிறகு சன்னலை அடைத்து விட்டு வாசற் கதவைத் திறந்தான்.

"என்ன மாணிக்கம், வேலை நடக்கிறதா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார், சர்தார் சொக்கலிங்கம் பிள்ளை. ரங்கமணியும் உள்ளே நுழைந்தான். அந்தக் கட்டிடம் வெளியிலிருந்து பார்ப்பதை விட உள்பக்கம் மிகப் பெரியதாக இருந்தது. உள்ளே பல கட்டுக்களைக் கொண்ட மிகப் பெரிய முரட்டுக் கட்டிடம் அது. எல்லா அறைகளிலும் மின்சார விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. அச்சு இயந்திரத்தின் இரைச்சல் கேட்டுக் கொண்டிருந்தது. சொக்கலிங்கம் பிள்ளை உள்ளே நுழைந்ததும் அனைவரும் நிமிர்ந்து அவரையும், அவரைத் தொடர்ந்து சென்ற ரங்கமணியையும் உற்றுப் பார்த்து விட்டு மீண்டும் வேலையில் ஈடுபட்டார்கள்.

ரங்கமணி சுற்று முற்றும் பார்த்தான். அந்தச் சூழ்நிலையே அவனைச் சிலிர்க்க வைத்தது. அங்கு வேலை செய்து கொண்டிருந்த அனைவரும் இருபத்தைந்து வயதுக்கு உட்பட்டவர்கள் என்பதைத் தெரிந்து கொண்டான். சொக்கலிங்கம் பிள்ளை ஒரு பெரிய அறையைத் திறந்து உள்ளே போய் விளக்கை ஏற்றினார்.

(தொடரும்)

உங்களுடைய கேசம் ஆரோக்யமாகவும்
பளபளப்புடனும் விளங்கும்

பிரில்க்ரீம்

தடவி நேர்த்தியாக தலையை வாரிக்கொண்டால்!



பிரில்க்ரீம் மட்டுமே

- அதிக எண்ணெய்ப்பற்று இல்லாமலும், தாறுமாறாக உரோமம் கலையாமலும் நேர்த்தியாக தலையை வார உங்களுக்கு உதவுகிறது.
- மிகவும் சிக்கனமானது—ஒருமுறை தடவி வாரிக்கொண்டால் நாள் முழுவதும் உங்கள் தலை கலையாது அழகாக தோற்றமளிக்கும்.
- உரோமம் உதிர்ந்து வழுக்கை விழாமல் தடுக்கக்கூடிய, ஆரோக்யமான உரோம வளர்ச்சியைத் தூண்டக்கூடிய, சேர்த்தியான கலவை வாய்ந்தது.
- உங்களுடைய கேசத்தின் இயற்கையான வண்ணத்தையும் பாதுகாக்கிறது.



எனவே இனிமேல் பிரில்க்ரீமையே உபயோகியுங்கள்!

உலக முழுவதிலும் லக்ஷகணக்கான நேர்த்தியான மனிதர்கள் இதையே உபயோகிக்கிறார்கள்

B/P/1/P/1/65 TM

அத்தியாயம் 7

நெருப்பு மூண்டது!

இரவோடு இரவே அந்தப் படை புறப்பட்டு வந்திருக்க வேண்டும். விடியற்காலையில் எழுந்ததும் மகனைக் காணாமல் அதிர்ச்சியுற்ற நிலையில் வீட்டுக்கு வெளியே வந்து பார்த்த சூலபாணிக் கிழவரின் கண்களில், ஒரே புழுதிப் படலத்தைப் போர்த்திய அந்தப் படை துளு நாட்டு நன்னர்



களின் அரசப் படை. மிஞிலியின் தலைமையிலே சீற்ற வெறியோடு அடர்ந்து வருகிறது அது!

கிழவருடைய செவிகளிலே அந்த ஓசை இப்போது இன்னும் நன்றாகக் கேட்டது. குதிரைகளின் காலடி 'சடசட' 'படபட' என்று பரிந்தது!

''என்ன இது!'' என்று கிழவர் திகைப்படைந்து நிற்பதற்கு முன்னர் நூறு நூறு குதிரைகள், ஆயிரம் ஆயிரம் வீரர்கள், இதோ தெருக் கோடியிலே திரும்பி, தெருவுக்குள் நுழைவது தெரிகிறது! சூலபாணியின் வீட்டையே நோக்கிப் படர்ந்து வருகிறது படை!



வீட்டின் தலைவாசலுக்கு வந்து அப்படியே அணிவகுத்து நிற்கிறது! கிழவர் அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி யடைந்து படபடக்கும் இதயத்தோடு நிலை வாசலைப் பிடிக்கிறார்.

எத்தனையோ போராட்டங்களையெல்லாம் பார்த்தவர்தான் சூலபாணி! இப்போது அந்த முதிய உடம்பிலே தள்ளாமை வந்து நடுக்கம் எடுக்கிறது. போதும் போதாததற்கு நேற்று இரவு கேட்ட திகைப்பான செய்தியும், அதைத் தொடர்ந்து காலையிலே மகளைக் காணாத அதிர்ச்சியும் சேர்ந்து உள்ளத்தையும் உடம்பையும் ஆட்டி வதைக்கின்றன. இப்போதோ என்றால் ஒரு பெரிய போர்ப் படையே வந்து தாக்குவதற்கு ஆயத்தமாகத் தன்னுடைய வீட்டுக்கு முன்னாலேயே அல்லவா நிற்கிறது!

நன்குயர்ந்த வெள்ளைப் பரி ஒன்றிலிருந்து வேகத்தோடு குதிக்கிறான், தானைத் தலைவன் — மிஞிலி.

''நீர்தானே ஐயா சூலபாணி?'' என்ற கேள்வி தானை வீரத்தோடு முழங்குகிறது மிஞிலியின் குரலிலே. குதிரையிலிருந்து குதித்தவன் கிழவருக்கு அருகிலே வந்து நிற்கிறான்.

''முல்லை மூதூர்த் தலைமகனும், நன்னர்களுக்கு எதிராக வேலை செய்யும் கோசர் குலத்தின் முதல்வனுமான சூலபாணி நீர்தானே?'' என்று கேட்கிறான் மீண்டும்.

''ஆம். சூலபாணி என்பது அடியேன்தான். ஆனால்—'' என்று பணிவோடு மறுமொழியைத் தொடங்குகிறார் கிழவர். மிஞிலி இடைமறித்துப் பேசுகிறான்:

''அடியேனாவது முடியேனாவது! துளு நாட்டு இளவரசியைக் கடத்திச் சென்ற குற்றத்துக்காக உம்மையும், உமது மகள் பொன்மணியையும் சிறைப்பிடித்து வரும்படி நன்னன் மன்னருடைய அரசக் கட்டளை! தெரிகிறதா? அதற்காகத்தான் நாங்கள் இங்கே வந்திருக்கிறோம்!''

''என்ன! அரச குமாரியைக் கடத்தினேனா? என்ன சொன்னீர்கள்? நானும் என்னுடைய....''

''ஆம். நீரும் உமது மகளும் அவளுடைய கணவனும் கூட்டாகப் பேசி வைத்து, அதன் விளைவாக உமது மகளுடைய கணவன் அழலாடி, இரவுக்கு இரவே எங்கள் தங்கள் அரண்மனையிலே புகுந்து, திருட்டுத்தனமாக, நயவஞ்சகமாக, முரட்டுத்தனமாக, எங்கள் இளவரசியை மயக்க மருந்தினால் மயக்கி, இரவின் இருட்டுக்குள் குதிரையின் மீது ஏற்றிக் கொண்டு—''

''ஐயோ ஐயோ! மேலே ஒன்றும் சொல்லாதீர்கள். இதெல்லாம் உண்மையா? உண்மைதானா?''

''ஓகோ! நீர் தீர்மானித்தபடி எல்லாம் சரியாக நடந்து விட்டது என்பது என் வாயிலிருந்து வரவேண்டுமோ? கிழவரே, எங்கே உம்முடைய மகள்? உடனே சொல்லிவிடும்! இல்லையென்றால் என்ன நேரிடும் தெரியுமா? எங்கே உம்முடைய மகள்?''

'ஐயோ! அவளைத்தானே ஐயா தேடித் தேடித் துடிக்கிறேன்—''

''கிழவரே, நான் உம்மை வெறும் கிழவன் என்றுதான் நினைத்தேன். இளமையில் கூத்தாட்ட அரங்குகளிலே நாடகமும் பயின்று தேறியிருக்கிறீரே! போர்ப் பயிற்சியோடு நாடகப் பயிற்சியும் உண்டா உமக்கு? சொல்லுமையா உண்மையை, எங்கே உம்முடைய மகள். பொன்மணி எங்கே?''

கிழவரின் கண்கள் கலங்கின. நாக்கு தழுதழுத்தது.

''என் அருமை மகள் கண்மணி, பொன்மணி இரவு படுக்கச் சென்றவளைக் காலையிலே பார்த்தால் காணவில்லை!''

''ஓகோ! எங்கள் அரச குமாரியைக் காணோம் என்று நாங்கள் குற்றம் சாட்டுகிறோம் என்பதற்கு மாற்றாக இப்படி ஒரு நாடகமா? மெச்சினேன்

இவரேதான்!



கங்கையும் காவிரியும் இணைந்தாற்போல், இரு பெருங் குடும்பங்களை இணைத்தது ஒரு திருமணம் பல ஆண்டுகளுக்கு முன்னர். காந்திஜிக்கும், ராஜாஜிக்கும் பேரனாக இருக்கும் பாக்கியம் பெற்ற அந்தச் சிறுவன் 'கோபு' என்று செல்லமாக அழைக்கப்பட்ட கோபாலகிருஷ்ணன். டில்லி சர்வகலா சாலையில் இலக்கியத்துறையில் எம். ஏ., பட்டம் பெற்ற பிறகு இன்று 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையின் துணைப் பத்திரிகையான 'வீக் எண்ட் ரிவியு'வில் ஆசிரியப் பயிற்சி பெற்று வருகிறார். இரு மாமேதைகளின் வாரிசான இவரிடம் தந்தை தேவதாஸின் பத்திரிகைத் தொழில் அனுபவமும் ரத்தத்தோடு கலந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.



மஹா சிவராத்திரி-சிவ விஷ்ணு ஆலயம், தியாகராயநகர், மதராஸ்-17

நாடெங்கிலும் உள்ள தரும சிந்தனையுள்ள ஆஸ்திகர்களுக்கு நன்கொடைகளை அனுப்பி வைக்க ஓர் அரிய வாய்ப்பு.

லோக க்ஷேமார்த்தமாக 18வது வருஷத்திய - மஹோத்ஸவம் 8-3-1967 புதன்கிழமை, ப்ருஹன்னக்த ஹோமம். 9-3-1967 குருவாரம் காலை 7-30 மணி முதல் 10-3-67 வெள்ளிக்கிழமை காலை 10 மணி வரை **அகண்ட அதிருத்ர ஜபம்** - லக்ஷார்ச்சனைகள் - அகண்ட ஹோமம் வஸோர்தாரா - பூர்ணாஹுதி - கேதாரேஸ்வரருக்கு அகண்ட அபிஷேகம்.

தற்கால நவக்ரஹஸ்தானதோஷ பரிஹாரார்த்தமாகவும், நாட்டில் இன்னல்கள் தீர்ந்து சாந்தி நிலவவும், பஞ்சம் நீங்கவும், சுமார் 300 வேத வித்துக்களைக் கொண்டு செய்யப்படும் மஹாயக்ஞம் வேதயாக பரிபாலன **ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்** அத்யக்ஷதையில் வேதாரண்ய மஹாமண்டபத்தில் நடைபெறுகிறது. உபன்யாஸ சக்ரவர்த்தி ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் 24-2-67 முதல் 7-3-67 வரை ஸ்ரீமத் பாகவதம்-நாராயணீய உபன்யாஸமும் செய்கிறார்கள்.

மஹாயக்ஞத்திற்கு குறைந்தபக்ஷம் ரூ. 25000 செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. 11 லக்ஷம் 121 முறை ருத்ர ஜபம் செய்து அகண்ட ஹோமம், ஸந்தர்ப்பணை செய்ய ரூ. 121/- நன்கொடை கொடுத்து யக்ஞத்தின் பூரண பலனை அடைய அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டுகிறோம்.

நன்கொடை - செக் - மணியார்டர் மூலமாகவும் பொக்கிஷதாரருக்கு அனுப்பவும்:

S. Krishna Iyer	S. K. Ragha Reddiar, Vice President	V. Chinnaswami Iyer, President
P. S. Subramania Iyer	S. R. Nataraja Iyer ,,	K. R. Viswanatha Iyer, Gl. Secretary
K. M. Subramania Iyer	R. K. Aiyah Secretary	K. Ramachandra Iyer, Treasurer
C. S. Sundaram Iyer	R. Sundaram Secretary	Dr. K. Souri Rajan
R. Ramakrishnan	J. L. Pathi	C. Damodaran

8-2-67 *Patrons and Executive Committee*, M. S. S. SABHA



பிப்ரவரி 24 முதல்
சென்னை மிட்லண்ட்
அகஸ்தியா - 70 mm
மகாலக்ஷ்மி மற்றும் தமிழ்நாடெங்கும்
மனோகர் பிக்சர்ஸ் (மதரஸ்)
பாமா விஜயம்
முற்றிலும் மாறுபட்ட
நகைச் சுவைச் சித்திரம்
கதை, வசனம், டைரக்ஷன்
K. பாலசந்தர்
தயாரிப்பு
M.S. காசி
பாடல்கள்
கண்ணதாசன்
இசை
M.S. விஸ்வநாதன்
கலை
A. K. சேகர்
காமிரா
P.N. சுந்தரம்
ஜெமினி ரிலீஸ்

ஐயா, உமது நடிப்பை! நன்று, நன்று! மிக நன்று உமது நாடகம்!''

''வீரரே! அவசியமில்லாத பேச்சுகள் வேண்டாம். உடம்பில் முதுமை இருப்பது உண்மை. ஆனால் உள்ளத்தில் இன்னும் தன்மான உணர்ச்சி மரத்துப் போய்விடவில்லை. புரிகிறதா உமக்கு? ஏதேதோ பேசுகிறீரே!''

''கிழவரே! பேசுவது யார்? ஏதேதோ பேசுவது யார்? பசப்புகிறீரே என்னிடம் வந்து! அடா வீரர்களே, உள்ளே செல்லுங்கள், கொண்டு வாருங்கள், அந்தப் பொன்மணியை! கூந்தலைப் பிடித்து இழுத்துக்கொண்டு வாருங்கள் இங்கே!''

கூச்சலிடுகிறான் மிஞிலி. கிழவருக்கு உடம்பெல்லாம் பதறுகிறது. செயலாகப் பரிணமிக்க முடியாத கோபமும் ஆத்திரமும், உடம்பிலே பொங்கிப் பொங்கி, அங்கமெல்லாம் ஆடுகின்ற நிலையிலே கண்கள் சிவக்கின்றன!

''ஐயா, வீரரே! இரவு படுக்கச் சென்ற மகள் என்ன ஆனாள் என்று தெரியவில்லை. மெய்யாகவே உள்ளம் அதிர்ந்து போய் அவளைத் தேடித் தேடி மறுகுகிறேன் ஐயா!''

''சூலபாணி நடிகரே! பொய் பேசாதீர்! நாங்கள் யார் என்று தெரியுமா உமக்கு? துளு நாட்டு அரச வீரர்கள் நாங்கள். மிஞிலி என்று கேள்விப்பட்டிருக்கிறீரா? அந்த மிஞிலியே இதோ வந்து நிற்கிறேன். உமக்கு எதிரில். பொய் பேசாதேயும்!''

''பொய்யா, பொய் பேசுகிறேனா நான். ஐயா மிஞிலியாரே, நீர் வந்து எதிரே நின்றாலும் சரி. அல்லது உம்முடைய மன்னன் நன்னனே வந்து நின்றாலும் சரி, அல்லது அவனுடைய முன்னோன், பெண் கொலை புரிந்த அந்த மாவீர நன்னனே வந்து நின்றாலும் சரி, எனக்கும் எங்கள் கோசர் குலம் முழுமைக்குமே தெரியாது பொய் பேச! புரிகிறதா?" பொய் என்ற சொல்லையே அறியாத குலம் எங்கள் கோசர் குலம். என்னிடம் வந்து என்ன மொழி பேசுகிறீர்? பசப்புகிறேனாம், நடிக்கிறேனாம், பொய் பேசுகிறேனாம். வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சாதீர்! தள்ளாத வயது. உடம்பு தள்ளாடுகிறது. உமக்கு அஞ்சி அல்ல! வயதின் தள்ளாமை! அதைப் பார்த்து விட்டு முறையற்ற சொற்களை மதிப்பின்றி வீணாக்காதீர். என்னுடைய தலைவாசலில் நின்று கொண்டு என்னையும் என் குலத்தையும், என் குடும்பத்தையும் முறையின்றிப் பேசுகிறீரே! என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்?''



''அப்பா என்னை வேலைக்குப் போகச் சொன்னார். அம்மா கல்யாணம் பண்ணிக்கச் சொன்னாள். கடைசியிலே வேலைக்குப் போகிற பெண்ணாகவே பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும்படியாகிவிட்டது எனக்கு.''

கிழவரின் முதிர்ந்த விழிகளிலே தீப்பொறி பறக்கிறது. ஆனாலும் அந்த ஆவேச வேகத்தைத் தாங்க முடியாமல் உடல் தள்ளாடுகிறது. பதறுகிறார்.

''அடா வீரனே! இப்படி ஒருவன் வா இங்கே! இந்தக் கிழவரைப் பிடித்து நிறுத்து! கையிலே விலங்கு போடு! கொண்டு போ இவரை!''

''விலங்கா! வீரனே! நில் அங்கே! இந்தக் கைகளுக்கு விலங்கு போடத்தான் தெரியும். போட்டுக் கொள்ளத் தெரியாது!''

கிழவரின் குரல் சீறுகிறது. சீறிப் பாய்கிறது. சூலபாணி துள்ளுகிறார். அருகிலே வந்த வீரனைத் திமிறித் தாக்க முயல்கிறார். ஆனாலும் வீரம் குழலாடுகிறது அந்த முதிய கைகளிலே! உடம்பிலே பாய்ந்த வீர உணர்ச்சி உடம்பின் அங்கங்களை, முதிர்ந்து சுருங்கிக் காய்ந்து சருகாகி விட்ட அந்த அங்கங்களை அப்படியே அனக்குகிறது. தரையிலே தள்ளாடி விழுகிறார் கிழவர். கோசர் குலமே தனக்கு முன்னால் சரிந்து விழுந்து விட்டது போல எண்ணி, அவரை அப்படியே தூக்கி எடுத்துக் கொண்டு படை வீரரின் கூட்டத்துக்குள்ளே பாய்ந்து செல்கிறான் துளு வீரன் ஒருவன்.

''பொன்மணி எங்கே? எங்கே பொன்மணி?'' என்று கதறிக் கொண்டே வீட்டுக்குள்ளே பாய்கிறான் மிஞிலி.

பொன்மணி! அவளைக் காணோம்! துளு நாட்டு வீரர்கள் பலர் தங்கள் தலைவனைத் தொடர்ந்து உள்ளே செல்கிறார்கள், பொன்மணியைத் தேடி!

சூலபாணியின் வீட்டு மூக்கு மூலைகள் உள்ளறைகள், வெளி அறைகள் எங்கும் தேடுகிறார்கள், கதவுகள், இடுக்குகள், மறைவிடங்கள், மேடையின் இருக்கைகள், சாய்மானங்கள், விளிம்புகள், வீட்டின் புகு வாயில்கள், அகல் வாயில்கள், மாடங்கள், கவுதங்கள் எங்கும் தேடுகிறார்கள் துளு நாட்டு வீரர்கள்! ஆனால் பொன்மணியைக் காணோம்.

''வீரர்களே, ஏதோ சூது, ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது. நிலவறையின் நுழை வாசல் எங்காவது இருக்கிறதா பாருங்கள்!'' என்று கூச்சலிடுகிறான் மிஞிலி. கண்கள் சீற்றத்தோடு அங்குமிங்கும் சுழலுகின்றன.

நிலவறையின் கதவுகளை உடைத்தார்கள். குதித்தார்கள். கீழே நாற்பது ஐம்பது வீரர்கள் சாடினார்கள். ஒருவரை ஒருவர் பிடித்துப் புரண்டதைத் தவிர நிலவறைகளிலும் காணோம் அந்தப் பொன்னான மணியை!

''புறக்கடை வாசலைத் திறவுங்கள், உடைத்தெறியுங்கள்!'' என்று கதறுகிறான் மிஞிலி! சீற்றத்தின் வேகத்தில் உடம்பே ஆடுகிறது.

நூறு நூறு பசுக்கள், நூறு நூறு காளைகள். கொல்லேறுகள். சிங்கமும் சிங்கக் குட்டிகளும்போலத் தொழு முழுதும் நிரம்பி நிற்கின்றன!

''அவிழ்த்து விடுங்கள் அந்த மாடுகளை! அடருங்கள் அவற்றின் மீது! அப்படியே ஒடியுங்கள் கொம்புகளை!''

ஏதேதோ வெறித்தனமாகக் கட்டளை இடுகிறான் தானைத் தலைவன் மிஞிலி!

தேடி வந்த அழகுப் பொருள், நாடி வந்த பொன்மணி கைநழுவி விட்டதா! மிஞிலிக்கு ஆத்திரம் பொங்குகிறது. அழகி, அழகி என்று எத்தனை அடைமொழிகளோடு எத்தனை தடவை சொன்னான், அந்த நாகமல்லன்! எங்கே அந்தக் கோசர் குல எழில் மங்கை? மிஞிலியின் விழிகள் மறுகி மறுகித் தேடித் தேடி ஏமாற்றம் அடைந்து தீயாக எரிந்தன!

''கிழவன் நம்மை ஏமாற்றி விட்டானா? வஞ்சகம் புரிந்து விட்டானா அந்தச் சூலபாணி? யாரிடம்? இந்த மிஞிலியிடமா? இந்த மிஞிலி யார் எனத் தெரியாதா அந்தப் பெண்ணுக்கு? அந்தப் பொன்மணிக்கு? வீரர்களே! என்ன செய்கிறீர்கள் நீங்கள்? என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?''

இவ்வாறு ஓலமிட்டான் மிஞிலி. அவனுடைய முகத்திலே பொங்கிய சீற்றத்தையும், விழிகளிலே புகைந்த ஏமாற்ற உணர்ச்சிகளையும், குரலிலே ஒலித்த வெகுளியின் வெறியையும் கண்டு துளு வீரர்கள் மருண்டார்கள்.

''துளு நாட்டுச் சிங்கங்களே! நன்னவேந்தனுடைய கொல்லேறுகளே! சாடுங்கள் உடனே! ஏன் குழம்புகிறீர்கள்! அந்தப் பொன்மணி இத்தனை விநாடிக்குள் எங்கே போய்த் தப்பித்திருக்க முடியும்? செல்லுங்கள் அண்டை வீடுகளிலே! உடையுங்கள் பக்கத்து வீட்டுக் கதவுகளை எல்லாம்! கூடங்கள், மாடங்கள், பெண்களின் கூட்டங்கள், நிலவறைகள், அந்தப்புரத்து உள்ளிருக்கைகள், எங்கும் சென்று தேடுங்கள். உங்களுக்கு முழு உரிமை தருகிறேன்! உங்களுக்குப் பரிபூரணமான தன்னிச்சை வழங்குகிறேன். கொண்டு வாருங்கள் அந்தப் பொன்மணியை! கூந்தலைப் பற்றி இழுத்து வாருங்கள் என் முன்னே!''

அணி அணியாகப் புறப்பட்டார்கள் வீரர்கள்! வில்லில் இருந்து புறப்பட்ட அம்புகளைப் போல நூறு நூறு வீரர்கள் சீறி அடர்ந்தார்கள்! கையிலே குந்தமும், ஈட்டியும், வாளும், சூலமும் ஏந்தியவாறு முல்லை மூதூரின் வீடுகளிலே புகுந்தார்கள். கோசர் குலத்து அழகிகளிலே ஒப்பற்ற வனப்பும் கண்கவரும் இளமையும் நீண்ட கூந்தலும், வேல்போன்ற விழிகளும் கொண்ட பொன்மணி எங்கே ஒளிந்திருக்கிறாள்? எங்கே மறைந்திருக்கிறாள் என்று வீடு வீடாகப் புகுந்து தேடினார்கள் துளு நாட்டு வீரர்கள்!

காணோம்; கோசர் குலத்து வீடே அந்த முல்லை மூதூரில் ஒன்றுதானே? சூலபாணி ஒருவனுடைய முதிய தோள்களின் மீதுதானே, கோசர் குலத்தின் பழியைத் துடைக்க வேண்டிய முழுப் பொறுப்பும் சார்ந்திருந்தது! அதைத் தொடர்ந்துதானே இத்தனை விபரீத விளைவுகளும் நேர்ந்தன! எங்கே போய்க் கண்டுபிடிப்பார்கள் கோசர் குல அழகி பொன்மணியை?

''பொன்மணியைக் காணோம்'' என்று தலைவனிடம் வந்து எப்படிச் சொல்வது? அவனுடைய சீற்றத்தின் வெறி நெருப்புக்குள் எப்படிப் புகுந்து என்ன பேசுவது? அவனுடைய சீற்றத்துக்கு முன்னால் நின்று என்ன செய்வது?

வீரர்கள் குழம்பினார்கள். அந்தக் குழப்பத்திலே வெகுண்டார்கள். எதிரே வந்த மனிதர்களை, அவர்கள் யாராக இருந்தாலும் தாக்கினார்கள். அடித்தார்கள், தூக்கி எறிந்தார்கள். மாடு

களை அவிழ்த்து விட்டார்கள். கன்றுக் குட்டிகளைத் தூக்கித் தரையிலே எறிந்தார்கள். வீடுகளிலே யிருந்த சாய்மானங்களையும், இருக்கைகளையும் உடைத்தார்கள். கதவுகளைப் பெயர்த்தார்கள். சாளரங்களை யெல்லாம் சிதற அடித்தார்கள்.

மிஞிலி பாய்ந்தான் அந்தக் கூட்டத்துக்குள்ளே. பேய்களுக்குப் பைத்தியம் பிடித்தால் எப்படி இருக்கும்? அந்தப் பைத்தியப் பேய்களுக்கு நடுவிலே வெறி கொண்ட மதுகைப் பூதம் உட்புகுந்து சாடினுல் அந்தக் காட்சி எப்படி இருக்கும்? அப்படி இருந்தது முல்லை மூதூரிலே துளு வீரர்களுக்கு நடுவிலே மிஞிலி பாய்ந்து சென்று கூத்தாடியது!

''வீரச் சிங்கங்களே! புலிகளே! இந்தப் பொன்மணி நம்மோடு கண் கட்டு விளையாட்டுப் புரிகிறுளா? இருக்கட்டும். இந்தச் சிற்றூருக்குள்ளே, எங்கே போய்த் தலைமறைவாக இருந்துவிட முடியும்? ஏதோ ஒரு வீட்டிலே ஏதோ ஒரு வேற்றுடையிலே ஒளிந்து நிற்கிறுள் அவள்! கோசர் குலத்து அணிகளைத் துறந்து மாற்றுடை போர்த்தி மயக்க முனைந்திருக்கிறுள் அவள்! இருக்கட்டும். அதற்கு இப்போதே ஒரு வழி செய்வோம்! வீரர்களே, துளு நாட்டுத் தானையின் வெற்றி மன்னர்களே! கிழவனைக் குதிரையிலே ஏற்றிக்கொண்டு துளுநாடு செல்லுங்கள். இந்தப் பொல்லாத திருட்டு முல்லை மூதூரைத் தீயினுக்கு இரையாக்குங்கள்! இந்த முல்லை மூதூரை இதோ இப்போதே நெருப்பிட்டுக் கொளுத்துங்கள்!''

இப்படி மிஞிலி வெறி வேகத்தோடு கட்டளை இட்டதும் வீரர்கள் எல்லோரும் அப்படியே அசைவற்று நின்றுர்கள், ஒரு விநாடி! தங்கள் தலைவனுடைய சீற்றத்தின் அனலை அவர்களாலேயே தாங்க முடியவில்லை!

''என்ன தயங்குகிறீர்கள்? துளு நாட்டுத் தானைத் தலைவனின் கட்டளை இது. புரிகிறதா? நிறைவேற்றுங்கள் உடனே! இந்த முல்லை மூதூர் முழுதும் இன்று பகற் பொழுதிற்குள் நெருப்புக்கு இரையாகிச் சாம்பற் காடாக, வெந்துபோன சாம்பற் குவியலாக நிற்க வேண்டும். தயங்காதீர்கள்! துளு நாட்டு இளவரசியை நம்முடைய வீரம் மிக்க வேந்தரின் அருமைக் குமாரியைக் கடத்திக் கொண்டு திருட்டுத்தனமாகச் சென்ற இந்தப் பொல்லாத வினைர்களின் கூட்டத்துக்கு இதுவே சரியான தண்டனை! இதுவே தக்க நீதி! குழம்பாதீர்கள்; தயக்கம் கொள்ளாதீர்கள். நீதியை வழங்குவதிலே ஊக்கம் செலுத்துங்கள். இது என்னுடைய கட்டளை, ஆணை!''



''நேற்று நடந்த லேடீஸ் க்ளப் மீட்டிங்கில் என் மருமகள் மூன்று மணி நேரம் பேசினளாம்.''
''எதைப் பற்றி!''
''என்னைப் பற்றி அடுத்த வீடு அம்புஜத்துடன்!''


வீரத்தோடும் உறுதியோடும் இந்த ஆணையை அறிவித்தவாறு தனது வெள்ளைப் புரவியிலே குதித்து ஏறினன் மிஞிலி.

துளு நாட்டுத் தானைத் தலைவனின் வெகுளியும் கொடுமையும் நாடு முழுதும் அறிந்திருந்த ஒரு மாபெரும் காட்டுத் தீ! அந்தக் காட்டு நெருப்பு இப்பொழுது துளு நாட்டு வீரர்களின் கைகளிலே தீப்பந்தங்களாக எரிந்தது. எரிந்து முல்லைமூதூரிலே தாவிப் படர்ந்தது!

ஆம்; நாகமல்லன் என்ற ஒரு நச்சுப் புகையானது பகையை நெருப்பாக வளர்த்து எரியத் தொடங்கியது அல்லவா? அது இப்போது மிஞிலி என்ற காட்டுத் தீயிலே கலந்து அந்த நெருப்பு மாபெரும் தீயாக மூண்டு பற்றியது முல்லை மூதூரிலே! வீடுகள், குடிசைகள், மாடங்கள், கூடங்கள், வைக்கோற்போர்கள், தாழைமடல்கள், சீற்றுகள், மரவாடிகள், தொழுவங்கள், ஆடு மாடுகள், கன்றுகள், கொல்லேறுகள், மனிதர்கள், ஆண்கள் பெண்டிர்கள் — எத்தகைய வேறுபாடும் இல்லாமல், சரி சமமாக எரிந்தது. துளு நாட்டு நன்னர் படை முல்லைமூதூரிலே இட்ட அந்த நெருப்பு!

சிறைப்பிடித்த சூலபாணிக் கிழவரைத் துளு நாட்டுக்கு எடுத்துச் சென்று கொண்டிருந்தது மிஞிலியின் போர்ப் படை! முல்லை மூதூரோ தீயிலே வெந்து கொண்டிருந்தது. கானகத்துக்குள் என்றே நடுகல்லுக்கு முன்னுல் விழுந்து அழுது கொண்டிருந்தாள் பொன்மணி. கோசர் குலத்தின் மறு வாழ்வுக்காக!

(தொடரும்)


SECTION E/F

கோவாவின் சரித்திரத்தில் ஓர் ஏடு

உழவர்கள் அளித்த உயர் கல்வி

வி.எஸ். செட்டண்ணர்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஒரு நாள். கோவாவில் ஒரு கிராமம். மக்கள் சிலர் ஒரு குடிசைக்குள் கூடியிருந்து முக்கியமானதொரு விஷயம் பற்றித் தீவிரமாக விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கிராமவாசிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள்.

இன்று அந்தக் கிராமப் பெரியோர்களுக்கு மத்தியில் அமர்ந்திருந்தவர் ஒரு கிறிஸ்துவப் பாதிரி. அவரை நோக்கிக் கிராமத் தலைவர்களுள் ஒருவர் கேட்டார்: ''பாதிரி லாவ்ரென்கோ அவர்களே! லிஸ்பனுக்குப் போய் உயர் கல்வி பெற்றுத் திரும்ப நினைக்கும் தங்களது திட்டம் பற்றி இன்னும் விரிவாக எங்களுக்கு எடுத்துச் சொல்வீர்களா?''

இந்தக் கோரிக்கைக்கு இணங்கினார் பாதிரி லாவ்ரென்கோ.

அவரது பேச்சால் பெரிதும் கவரப்பட்டனர் மக்களும் தலைவர்களும். அவருக்குப் பண உதவி செய்து லிஸ்பனுக்கு அனுப்பி வைப்பது முடிவாயிற்று. கல்விக்கென்று அவர்கள் செலவிடுவது சகஜம்தான். கிராமச் சிறுவர்களின் படிப்புக்கும் பஞ்சாயத்தார்களே பொறுப்பு. ஆனால் மேல்நாட்டுக்கு ஒருவரை அனுப்புவதென்றால் நிரம்பச் செலவாகுமே? எனினும், கிராமப் பொதுநலனுக்கென்று தாங்கள் சேர்த்த பணத்தில் ஒரு பகுதியை லாவ்ரென்கோவுக்குக் கொடுக்க அவர்கள் தயங்கவில்லை. அப்பாதிரியிடம் அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. பள்ளிப் படிப்பின் போதும் கல்லூரிப் படிப்பின் போதும் லாவ்ரென்கோவின் திறமை நன்கு வெளியாகியிருந்தது. அவர் தமக்கும் தமது சொந்தக் கிராமத்துக்கும் புகழ் ஈட்டித் திரும்புவார் என்று பஞ்சாயத்தார்கள் தீர்மானித்தனர்.

அவர்கள் நம்பிக்கை வீண் போகவில்லை. முதலில் லிஸ்பனில் ஒரு சர்வ கலாசாலையில் பயின்ற லாவ்ரென்கோ பிறகு பிரான்ஸ் தேசத்துக்குச் சென்று அங்கு அறிஞர்களால், ''அகில உலகின் சாரமும் உறையும் இடம்'' என்று புகழப் பெற்ற ஸார்போன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். இதற்கும் அவரது சொந்தக் கிராம மக்களே தொடர்ந்து பணம் உதவினர். பாதிரி லாவ்ரென்கோ, அங்கு விஞ்ஞானத் துறைத் தலைவராக விளங்கிய வர்ட்ஸ் என்பாரின் பெருமதிப்புக்குப் பாத்திரமானார். அறிஞர் வர்ட்ஸ், அப்போது ஒரு முக்கியமான ரசாயன ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். யூரியா பற்றிய இந்த ஆராய்ச்சியில் தமக்கு உதவ, ஒத்துழைக்க அவர் லாவ்ரென்கோவை அழைத்தார். இது எப்பேர்ப்பட்ட பெருமை, கௌரவம்! வர்ட்ஸ் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்கள் — அவரது அபாரமான ஆராய்ச்சித் திறனையும் ரசாயனத் துறையில் அவரது வெற்றிகளையும் எடுத்தியம்பியவர்கள் — அவருக்கு உறுதுணையாக நின்ற லாவ்ரென்கோவை மறக்காமல் உரிய இடம் தந்திருக்கிறார்கள்.

லாவ்ரென்கோவை எத்தனையோ சிரமங்களுக்கிடையிலும் பண உதவி செய்து அனுப்பி வைத்த கோவானிய கிராம மக்களுக்கு — கோவணம் அணிந்த உழவர்களுக்கு—இதைவிட மகிழ்ச்சி தரத் தக்க செய்தி வேறென்ன இருக்க முடியும்? அவர்களது யோகத்தைத் தான் என்னவென்று சொல்லிப் போற்றுவது?

கோவா முழுவதும் பரவி நின்ற இந்தக் கிராமப் பஞ்சாயத்து முறை அங்கு எப்போது முதல் இயங்கத் தொடங்கியது? ஆரம்ப காலத்தில் கோவாவில் குடியேறியவர்கள், கிராமப்புறங்களில் யாருக்குமே சொந்தமாயிராத யாராலும் உழுது பயிரிடப்படாத நிலம் பெருமளவுக்கு இருப்பதைக் கண்டார்கள். யாருக்கும் சொந்தமில்லாத இத்தகைய நிலங்கள் பொதுநலனுக்கு என ஒதுக்கப்பட்டன. திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்த்து அதன்படி வரிசைக்கிரமமாகப் பலர் மாறிமாறி இந்த நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துப் பயிர் செய்தனர். இந்த நிலங்களிலிருந்து கிடைத்த வருவாய் அல்லது லாபம் கிராமப் பொது நலனுக்குப் பயன்படுத்தப்பட்டது. அந்தப் பணத்தைக் கொண்டு சாலைகள் அமைத்தனர்; பள்ளிகள் நடத்தினர்; மேலும், கால்வாய்கள் வெட்டினர்; வேறு பல நற்கருமங்கள் புரிந்தனர்.

இந்தச் சொத்தை நிர்வகிக்கவும் பொது நலனைக் கவனிக்கவும் கிராமத் தலைவர்கள் (பஞ்சாயத்தார்) மக்களால் வாக்கெடுப்பு முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கோவாவை ஆண்ட மன்னருக்கு என்ன வரிகளைச் செலுத்த வேண்டும் என்பதைத் தீர்மானித்ததுகூட இந்தக் கிராமப் பொது நல அமைப்புத்தான். கோவாவின் ஆட்சி பல கைகள் மாறியது. ஆயினும் எந்த அரசனும் கிராமப்புறங்களில் நிலவிய இந்த நல்ல நடைமுறையில் மாற்றம் செய்யவில்லை.

பின்னும் போர்ச்சுகீசிய ஆட்சியின் கீழ் இந்தக் கிராம ஆட்சி முறையில் சில தேவையற்ற மாறுதல்கள் ஏற்பட்டன என்றாலும் இன்றைக்கும் கோவானியரிடம் அடிமட்டத்திலிருந்தே ஜனநாயகப் பண்புகள் வேரூன்றியிருக்கக் காரணம் இந்த அமைப்பே.

ஆதி நாளிலிருந்தே இந்தச் சிறந்த நடைமுறை வழக்கில் இல்லாமல் இருந்திருந்தால் 1850ஆம் ஆண்டிலே பாதிரி லாவ்ரென்கோ லிஸ்பனுக்குப் போய் மனித குலம் அனைத்துக்கும் பயன்படக்கூடிய அரிய ஆராய்ச்சிகளைச் செய்திருக்க முடியுமா?



நடைப் பிணம்

கோவி. மணிசேகரன்

'சூதும் வாதும் வேதனை செய்யும்' என்று ஆயிரம் முறை ஒலிபெருக்கி வைத்துக் கத்தினாலும் சூதாடிகள் செவிகளில் விழவே விழாது. கட்டால்தான் தெரியும் நண்டுக்கு என்பார்கள். சூதாடிகளுக்கும் பட்டாலும் தெரியாது; கட்டாலும் தெரியாது. துன்பத்தை அநுபவிக்கும் போது இந்தச் சூதினை மறந்து இதோடு தலைமுழுகிவிட வேண்டும் என்றுதான் நினைப்பர். மறு நாள் பொழுது விடிந்ததும் நேற்றைய நினைவு நீடிக்க வேண்டுமே! 'குடிகாரன் பேச்சு பொழுது விடிந்தால் போச்சு' என்ற கதை இவர்களுக்கும் பொருந்தும்!

ரங்கசாமி இருக்கிறானே அவனுக்கும் இதே நிலைதான். பாவம், அவன்! இந்தச் சீட்டுக் கட்டில் அவன் இது வரை ஏறத்தாழ ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு மேலே இழந்திருப்பான்! என்ன செய்வது? ஆற்றில் கரைத்த மாவினைக்குதான்! திரும்ப எடுத்துப் பிசைந்து ஒளியேற்ற முடிகிற காரியமா இது! ரங்கசாமிக்கு மட்டும் ஒரு துணிவான எண்ணம் உண்டு. எப்படியும் விட்ட பணத்தைப் பிடித்து விடலாம்! அவனுடைய இந்த உறுதியான எண்ணம் ஒருவேளை கைவந்தாலும் வியப்பதற்கில்லைதான். எண்ணியதை முடிக்கத் திண்ணிய மனமிருந்தால் போதும் என்கிறார்களே!

ஒரு பத்திரிகை அலுவலகத்தில் காவல் பணி புரிபவன் ரங்கசாமி. பத்தாண்டு அநுபவத்துக்குப் பிறகு அவன் வாங்கும் சம்பளம் எண்பது ரூபாய். இந்த லட்சணத்தில் நான்கு குழந்தைகளுக்குத் தகப்பன். வயிற்றுக்கே எட்டாது; வாழ்க்கைக்கு எட்டுவது என்பது குருவிப்பால் தேடும் முயற்சி தானே?

இந்த வேதாந்த சித்தாந்தங்கள் அவனுக்குத் தெரிய வேண்டுமே! ஞாயிற்றுக் கிழமையானால் அந்தக் 'கிளப்'புக்குப் போவதை அவன் மறக்க வேண்டுமே! எப்படியோ, யார் தலையை அறுத்தாவது பதினைந்து ரூபாய் சேகரித்துக் கொள்வான்: ஆடுவது என்னவோ பாயிண்டுக்கு இரண்டு நயாபைசாதான்: அதாவது 'ஆல்ஜோக்கர் ரம்மி!'

'கிளப்'பில் அவனுக்கு ரம்மி ரங்கசாமி என்றே பெயர். சிந்தாதிரிப்பேட்டைப் பகுதியில் அது ஒரு மோசமான கிளப்! சில கீழ்த்தர மனிதர்கள் பலர் அதில் அங்கத்தினர்களாக இருந்தனர். கிளப் என்னவோ சிந்தாதிரிப் பேட்டையில்தானேயொழிய, அதில் சிந்தாதிரிப் பேட்டைவாசிகள் அங்கத்தினர்களாக இருக்கிறார்களா என்றால், அதுதானில்லை! ரங்கசாமியுங்கூட இராயப் பேட்டையிலிருந்து வருகிறவன். அந்தக் கிளப்புக்குப் பெயரே 'அரிஸ்டோ கிளப்' !

இந்த ஜனநாயக யுகத்தில்தான் பேர்செல்வம் பெற்று விட்டால் எதையும் செய்யலாமே! குடிகாரனுக்குப் போதை ஏற்படாமல் போகிறதா? நாய் கடித்தால் விஷம் ஏறாமல் விடுகிறதா? சூதாடி மடங்களிலும் பணம் இப்படித்தான் இறைந்து கொண்டிருந்தது! நல்ல வேளையாக ரங்கசாமிக்குக் குதிரைப் பந்தயம் 'டேஸ்ட்' பிடிக்கவில்லை! பிடித்திருந்தால் அவன் எப்போதோ, 'குளோஸ்' ஆயிருப்பான்!

ஏதோ தெய்வ தரிசனத்துக்கு எதிர்பார்க்கும் பக்தனைப்போல ஞாயிற்றுக்கிழமைக்காக எதிர்பார்ப்பான் ரங்கசாமி. ஞாயிற்றுக் கிழமைப் பொழுதும் 'ரம்மி'யாக விடிந்தது.

மாதக் கடைசி. கையிலும் பணமில்லை. நேற்றைய முழுவதும் ரங்கசாமி யார் யாரையோ கடன் கேட்டுப் பார்த்து விட்டான். மிகவும் சோதனையாகப் போய்விட்டது. ஒரு காசு கிடைக்க வேண்டுமே! ஊஹூம்.

சம்பளக்காரர்களுக்கோ முதல் வாரம் 'கோல்டன் வீக்'! இரண்டாம் வாரம் 'ஸில்வர் வீக்'! மூன்றாம் வாரம் 'காப்பர் வீக்'! நான்காம் வாரம் 'பாப்பர் வீக்'தானே? ரங்கசாமியைப் போன்றவர்களுக்கு எந்த வாரமும் 'பாப்பர் வீக்'தான்! ஒரு வாரமேனும் எடுத்துக் கொண்டு செல்லும் பதினைந்து ரூபாய் கனியாகத் திரும்ப வேண்டுமே! ஒவ்வொரு வாரமும் 'பேங்க் அவுட்'தான். அதாவது, 'பேங்க்' என்றால், குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி, டோக்கன் பெறுவதற்குப் பெயர் 'பேங்க்!'



பக்கத்துக் குடித்தனக்காரர் வீட்டுக் கடிகாரம் எட்டு அடித்தது. இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் புறப்பட்டாக வேண்டும்! எப்படி மூளையைப் போட்டுக் குழப்பியும் பணத்தை எங்கே கைமாற்று வாங்குவதென்றே புரியவில்லை ரங்கசாமிக்கு! அவனுடைய அந்தப் பரிதாபமான நிலை, மனைவி ராஜத்துக்குப் புரிய வந்தது. "என்ன.....! இன்னிக்குச் சீட்டாடப் பணம் கிடைக்கவில்லையாக்கும்!" என்று கூறித் தோளை அசைத்தவளாய் அடுக்களையை நாடினாள்.

"டீ...... ராஜம்! உனக்கும் கேலியாப் போயிடுத்தோ? கொண்டாந்து கொடுக்கிற அன்னிக்குக் கைநிறைய வாங்கிக்கறியே! அப்போ காணமே இந்த அலுப்பு!"

"அழறதான் போங்களேன்! நீங்கக் கொண்டாந்து கொடுத்த நாளுமில்லே; நான் சிரிச்ச நாளுமில்லே. வெறுமனே வாயை மூடிக்கிட்டுக் கிடங்க."

ராஜத்தைக் குற்றம் சொல்லி என்ன பயன்? அவளுக்கு ஒரு சினிமா உண்டா? சிங்காரம் உண்டா? என்ன பயனை அநுபவித்தாள்? அந்தமட்டில் தன் கணவன் ஞாயிற்றுக் கிழமைக் 'குடிகார'னாக இருந்தானே. தப்பினளோ! நித்திய குடிகாரனாக இருந்திருந்தால் 'பேங்க்' லோனாவது போக, குடியே 'குளோஸா'யிருக்குமே!

பெரிய பெண் மஞ்சுளா படித்துக் கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் ஒரு நினைவு திடுமென்று உதயமானது ரங்கசாமிக்கு! ஆமாம்; அவளுடைய காது திருகாணி உடைபட்டு, பெட்டியோடு கிடக்கிறது. அதனைச் சீர்திருத்தப் பணமில்லை என்று ஓயாமல் ராஜம் பாட்டுப் பாடுவாள். அதை ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது?

அடப்பாவி, ரங்கசாமி! எத்துணை பயங்கரமான எண்ணம் இது!

பாவமாவது, புடலங்காயாவது! ஆடுவது சூது: அவனை ஆட்கொள்ளுவது பாவ புண்ணியமா?

சத்தடி செய்யாமல் பெட்டியைத் திறந்து திருகாணிகளை எடுத்துக் கொண்டான்: சீ, சீ! திருடிக் கொண்டான்! அடுத்து மெல்லச் சட்டையை மாட்டிக் கொண்டு

வெளியேறினான். மார்வாடிகளுக்கும் ஒரு ஞாயிற்றுக்கிழமையா ?

திருகாணிகள் பள்ளிக்கூடம் படிக்கத் தொடங்கின.

அரிஸ்டோ கிளப்பில் காலடி வைக்கும் போது சரியாக ஒன்பது மணி. அதி முக்கிய மான செயல்களிலும்கூட இவ்வளவு 'பஞ்சுவாலிடி' இருக்காது. அந்தக் குறிப் பிட்ட நேரத்துக்குள், வயிற்றுள் இறங் கியதோ, என்னவோ வந்து கூடி விட் டார்கள். எங்கும் ஒரே புகை மண்டலம் ! விதம் விதமான புகை ! மூக்காலும் பீடிப் புகைதான்!

ரங்கசாமி உள்ளே நுழைந்ததும், அவ னுடைய சகாக்கள், ''வாய்யா, ரம்மி ரங்க சாமி !'' என்று குரல் கொடுத்தனர். வெற் றிலைப் புகையைக் குமட்டிக் கொண்டு சிரிக்க முடியாமல் சிரித்தான் ரங்கசாமி. கையில் திருகாணிப் பணம் கனத்தது.

'' என்ன, இன்றைக்கு நாமத்தைக் காணுமே!'' என்றான் வெற்றிலைக் கடைக் கார வேதாசலம்.

ரங்கசாமியும் சிரித்துக் கொண்டே, ''மறந்து விட்டேன்!'' என்றான். உண்மை யில் அதற்கு நேரம் ஒதுக்க முடியாமல் ஓடி வந்த கதை அவனுக்கல்லவோ தெரியும் !

''பலே, பலே! ஒவ்வொரு வாரமும் நீங்கள் நாமம் போட்டுக் கொண்டு வந்து நாமத்தோடுதான் திரும்பி வருகிறீர்கள். இன்று அது இல்லை; நல்ல 'பிளஸ்' (லாபம்) தான் போங்கள்!'' என்றான் ஒரு ஐஸ்கிரீம் தள்ளு வண்டிக்காரன்!

செவிகள் தேனை இனித்தன ! மனம் 'ஜில்'லாகச் சில்லிட்டது ! ஆகா ! எவ்வளவு சுபசகுனமான சொற்கள்!

ரங்கசாமிக்கு மனத்தில் ஒரு பிடிப்பு.

அனைவரும் 'பேங்க்' வாங்கிக் கொண்டு மேசைகளை நாடினர்.

முதலில் வழக்கம் போல் 'பாயிண்டு'க்கு இரண்டு நயாபைசா மேசையில்தான் ரங்க சாமி அமர்ந்தான். பையில் முப்பதுரூபாய்க்கு மேலிருந்தது. ஐந்து நயாபைசா மேசைக்கே சென்றிருக்கலாம். ஆயினும் மனம் இடம் தரவில்லை. முற்றிலும் போய்விட்டால்.....?

மணி பத்து !

ஐந்து பெரிய 'டோக்கன்கள்' பிளஸ் ! அதாவது பத்து ரூபாய் லாபம் !

ஐஸ் வண்டி தள்ளுபவன், ''பார்த்தீர் களா, சுவாமிகளே!'' என்று மீண்டும் குரல் கொடுத்தான்.

மணி பதினொன்று !

மேலும் பதினைந்து பெரிய டோக்கன்கள்!

''டீல் மீ அவுட் !'' என்றான் ரங்கசாமி. அதாவது நான் ஆட்டத்தை விட்டு விலகு கிறேன் என்பது அதன் பொருள் !

டோக்கன்களை மாற்றினான். நாற்பது ரூபாய் லாபம். முதலீடான பத்து ரூபாயைப் போட்டு, பத்து நயாபைசா டோக்கன்களை வாங்கினான். பாயிண்டுக்குப் பத்து நயா பைசா !

எல்லாருக்கும் வியப்பு! ரம்மி ரங்கசாமி முன்னேறுகிறானே!

அங்கேயும் 'பிளஸ்'தான் !

ஒரு மணிக்கெல்லாம் இருநூறு ரூபாய் லாபம் ! அடுத்து — ''டீல் மீ அவுட் !''

இப்போது பாயிண்டுக்கு நாலணா ஆட்டம்! என்ன புத்தியோ இது! ஒருவிதத்தில் வெறி யான புத்திதான். இன்று ஆட்டம் ஆடுகிறது. இதுவரையில் விட்டதைப் பிடித்துக்கொண்டு இன்றோடு கிளப்புக்குத் தலை முழுகிவிட வேண்டும் !

''வாய்யா, ரம்மி ரங்கசாமி ! எல்லா டேபிள்ளேயும் ஒரே 'ஸ்பீக்கிங்'காமே ! இங்கேயும் ஒரு 'குத்து' குத்த வந்தியா?'' என்றார் ஒரு வயதான பெரியவர். அவர் கொத்தவால் சாவடியில் காய்கறி மொத்த வியாபாரி !

மணி நாலரை —

ரங்கசாமியின் கையில் எழு நூறு ரூபாய். அடேயப்பா ! ஜன்மத்தில் காண முடியாத தொகை ! அதிலும் சீட்டாடி வந்த வரு மானம் என்றால் இதயம் வெடித்துவிட வேண்டிய செய்திதான்.

ஆசையை மேலும் கிளப்பியது அற்ப புத்தி. 'ஏதோ ஒரு பயங்கரமான வெற்றித் திருநாள்தான் இன்று' என்று மனத்துக்குள் முனகிக் கொண்டான் ரங்கசாமி.

ஒரேயடியாக பாயிண்டுக்கு ஒரு ரூபாய் வைத்தாடும் 'பெரிய' மேசையை நாடினான். அங்கே தோல் மண்டி, அரிசி மண்டி வியா பாரிகள் ஆடிக் கொண்டிருந்தனர். முதலைகள் நடுவே ஒரு பல்லியைப் போல நுழைந்தான் ரங்கசாமி. அவனுக்குத்தான் எவ்வளவு பெரிய துணிவு ! சீட்டைப் பார்த்து ஆட்டம் வரவில்லை என்று வைத்து விட்டால் அதற்கு இருபத்தைந்து ரூபாய் கொடுத்துவிட வேண்டும். ஆடி 'ரம்மி'யில்லாமல் தோல்வி கண்டாலோ நூறு ரூபாய் தர வேண்டும் ! அதே நேரத்தில் ஓர் ஆட்டம் அடித்தால் நல்ல வருமானம் ! ஒரு 'கேட்' அடித்தால் குறைந்தது ஐந்நூறு ரூபாய் கிடைத்து விடும். எல்லாம் அதிர்ஷ்டத்தைப் பொறுத்த விஷயம். ரங்கசாமி அன்று அதிர்ஷ்ட தேவதையின் மீதே சவாரி செய்து கொண்டு வந்தான்.


கடிகாரம் பத்து முறை அலறி ஓய்ந்தது. 'கிளப்' முடிந்தது. ரங்கசாமிக்கு மொத்த மாக ஆயிரத்து எழுநூறு ரூபாய் லாபம் ! பெண் அதிர்ஷ்டமானவள்தான் ! அவ னுடைய திருகாணி நன்றாக வேலை செய் திருக்கிறது. போதும் போ ! விட்டதைப் பிடித்தாகி விட்டது. மேற்கொண்டு லாபம் தான் ! இனி மேல் இந்த வாசற்படியை மிதிக்கக் கூடாது. அழுத்துக் கொள்ளும் ராஜம்கூட ஆனந்தப்படுவாள். அவளுடைய நகைக்கு மட்டும் ஐந்நூறு ரூபாய் கொடுத்து விட வேண்டும். கொஞ்சம் வட்டிக்காரர் களிடம் கடன். அதனைத் தீர்த்து விட்டால். அப்புறம் ஐந்நூறு ரூபாய் மிஞ்சும். வட்டிக்கு விட்டுச் சாப்பிடலாமே !

''சார், டாக்ஸி....!'' என்றான் கிளப் பாய் !

REPORT ON

Ambassador

Mark II



பிறந்த தேதி: அக்டோபர் 1963

தோற்றம்: ஆரோக்கியமுடன் சுறு சுறுப்பானது.

அமைப்பு: உறுதியும் சரியான அமைப்புடன் சக்தியும் பொருந்தியது. ஆறு பேர்களை ஏற்றிச் செல்லக் கூடியது.

பூட் சைஸ்: மிகப் பெரியது.

ரத்த அழுத்தம்: அதிக வேகமாய்ச் செல்கையிலும் எப்பொழுதும் சாதாரண நிலைதான்.

பாரம்பரியம்: உயர்வம்ச முன்னோரான மாரிஸ்ஸின் நேர்வழி வழி வந்த ஹிந்துஸ்தான் 10, ஹிந்துஸ்தான் 14, லாண்டு மாஸ்டர் தந்தை அம்பாஸடர் - எல்லாம் இன்றும் வலுவுடைத்தவாறிருக்கின்றன.

பொதுவான நிலை: சக்தி நிரப்பப் பெற்றது. எல்லா நிலைகளிலும் தொடர்ந்து பிரயாணம் செய்வதில் திறமை மிக்கது. சக்தி உற்பத்தி வகையிலே புஷ்டி அளிக்கும் உணவு தேவையில்லை.

நோய் நிர்ணயம்: *N. A. D.* பல்முளைக்கையில் ஏற்படும் தொந்தரவுகளை வெகுகாலம் முன்பே கடந்தாகி விட்டது. இப்போது முழுப்பருவம்.

நோக்கம்: எதிர்காலத்தில் நம்பிக்கை. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் நம்பிக்கையில்லை. இன்று நாட்டிலெங்கும் ஓடுகின்ற லட்சத்திற்கு மேலான *HM* குடும்பத்துச் சிறந்த கார்களுடன் இன்னும் 25,000 கார்களைச் சேர்க்க வேண்டுமென்று கருதுகிறது.

முன் அறிவிப்பு: ஆகிறுதியில் வளர்ச்சி நிச்சயம். மக்களால் இன்னும் அதிகமாக விரும்பப்படும் நீடித்திருப்பதற்கும் உத்தரவாதம்.

HM HINDUSTAN MOTORS

ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் லிட்., கல்கத்தா-1

விற்பனையும் சேவையும் நாடுமுழுவதும் உள்ளன

ASP/HM-866

''டாக்ஸியா ! நான் சொல்லவில்லையே!'' என்றான் ரங்கசாமி வியப்புடன்.

''நம்ம காரியதரிசிதான் ஏற்பாடு செய்தார் சார் ! நீங்கள் ரொம்ப 'பிளஸ்'ஸில் இருக்கிறீர்களாம். பத்திரமாக வீடு போய்ச் சேர வேண்டுமாம் !''

''ஆமாம், ஆமாம் ! நல்ல ஏற்பாடுதான். காரியதரிசிக்கு நன்றி சொல்லப்பா!''

ரங்கசாமி வாடகைக் காரில் ஏறினான்.

வாடகைக் கார் அருணாசல நாயக்கன் தெரு வழியாகவே, நேப்பியர் பூங்காவை நோக்கிச் சென்றது. உயர்நிலைப்பள்ளித் திருப்பத்தையடைந்த வாடகைக் கார், வலப் பக்கம் செல்லாமல் இடப் பக்கம் சென்றது. ''என்னப்பா ! இப்படித் திரும்புகிறாய். நான் ராயப்பேட்டைக்குச் செல்ல வேண்டும் !''

''எல்லாம் எனக்கும் தெரியும்'' என்றான் அவன். இருட்டான ஒரு பகுதியில் வாடகைக் கார் நின்றது. ''ஏம்பா, நிறுத்தினே....?''

''எனக்கு ஒண்ணுக்கு வருது: இதோ வந்துடறேன்!'' என்று கூறிக் காரை விட்டிறங்கினான் அந்த மனிதன். அவன் பார்வைக்கு டாக்ஸி டிரைவராகத் தெரியவில்லை. அப்போது இன்னொரு குண்டன் எங்கிருந்தோ அங்கு வந்து சேர்ந்தான். ''இந்தாய்யா! சத்தம் போடாதே! பேசாமல் சட்டைப் பையிலிருப்பதை இப்படிக் கொடுத்துவிடு. இல்லே...உன் குடல் சரிந்து விடும்!'' என்றான்.

ரங்கசாமி வெட வெடத்துப் போய்விட்டான். ''எங்கிட்டே ஒண்ணுமில்லேப்பா !''

''இன்னு வாத்தியாரே ! நம்மகிட்டேயே 'டாவு' அடிக்கிறே ! மரியாதையா எடுக்கிறியா, இல்லே......!''

கையில் பிச்சுவா மினுமினுத்தது.

ரங்கசாமி உடல் வியர்க்க, குலை நடுங்கப் பையிலிருந்த பணத்தை எடுத்துக் கொடுத்தான். வாங்கி எண்ணிப் பார்த்த அந்தக் குண்டன், ''பார்த்தியா! இன்னும் டபாய்க்கிறியே !'' என்று கூறியவண்ணம் சட்டைப் பையில் கையை விட்டுச் சுத்தமாகத் துடைத்து விட்டான். அதற்குள் அந்த 'டாக்ஸி டிரைவர்' போர்வையில் இருந்தவனும் வந்து விட்டான். ஒரு நொடியில் டாக்ஸி பறந்தது. காரியதரிசி ஏன்தான் இப்படி ஓர் ஏற்பாடு செய்தாரோ என்று ரங்கசாமி மருட்சியுடன் முனகலானான்.

இருபது ரிக்ஷாக்களை வைத்துக் கொண்டு மேய்ப்பவனுயிற்றே அந்தக் காரியதரிசி. ரங்கசாமி எந்த மூலை! அவன் என்ன தோல் மண்டி வியாபாரியா? அவன் எதற்கு தனக்கு டாக்ஸி ஏற்பாடு செய்யப் போகிறான் ? கிளப்பை விட்டு வெளியே வந்ததும் தன் முகத்தைப் பார்த்தே 'பிளஸ்'ஸில் வரும் ஆசாமி என்று கணித்திருக்க வேண்டும் அந்தக் கேடிகள் !

பொங்கி வந்த துக்கத்தாலும், அடைந்த லாபம், துப்புரவாக ஒழிந்ததை எண்ணி ஏற்பட்ட ஏமாற்றத்தாலும் 'கோ'வென்று அழுது விடலாம் போலத் தோன்றியது அவனுக்கு ! அந்தக் கும்மிருட்டில் அழுது வரப் போவதென்ன ? மார்வாடியிடம் அடகு வைத்த பணம்கூடத் திரும்பப் போவதில்லை. அதையும் சேர்த்தல்லவா அந்தப் பாவிகள் அள்ளிக் கொண்டு போய் விட்டனர்!

நடந்தான் —

கண்களைத் துடைத்துக் கொண்டு நடந்தான்.

ராயப்பேட்டை வரை நடந்துகொண்டே இருந்தான் ! வேறு பறக்கவா முடியும் ?

தான் ஒரு நடைப்பிணம் போல அவனுக்குத் தெரிந்தது. ஆமாம்; சூதாடிகள் அனைவருமே ஒரு நாள் இல்லாவிட்டால், ஒரு நாளைக்கு நடைப்பிணமாகப் போகக் கூடியவர்கள்தாம் ! அவனைப் பற்றி நமக்கென்ன கவலை.......?

நாம் தரித்திரன்! நித்திய தரித்திரன் ! இந்தப் பாதகமான செயல் நமக்குக் கூடாது. நாளை முதல் கூடவே கூடாது.

ரங்கசாமியின் மனம் பெரிதாகச் சபதமிடுவது போல அலறியது. அந்த அலறலுக்குரிய பெருமை பொழுது விடிந்தால்தானே தெரியும் ! அல்லது அடுத்த ஞாயிற்றுக் கிழமை வந்தால்தானே தெரியும் !



ஹாஸ்ய நடிகரின் பதில்!

எழுபத்தேழு வயதில் ஹாஸ்ய நடிகர் சார்லி சாப்ளின் புதிதாக ஒரு படம் (The Countess From Hongkong) எடுத்திருக்கிறார். அது இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் அமெரிக்காவிலும் இப்பொழுது திரையிடப்பட்டு வருகிறது. பிரான்ஸில் திரையிடப்படுவதற்கு முன் பாரிஸ் நகரத்தில் பத்திரிகையாளர்களுக்கு ஒரு பேட்டி கொடுத்தார் சார்லி சாப்ளின்.

படத்தில் அவருடைய மகனும் மகளும் நடிக்கின்றனர். மெர்லின் பிராண்டோவும் ஸோபியா லாரனும்தான் முக்கிய பாகங்களில் தோன்றுகிறார்கள். இந்தப் படம், இங்கிலாந்தில் திரையிடப்பட்டதும், "சாப்ளினின் புதிய படம் நன்றாக இல்லை, மோசம்!" என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் எழுதின.

அதைப் பற்றிப் பிரெஞ்சுப் பத்திரிகை நிருபர்கள் சாப்ளினைக் கேட்டதற்கு, "பிரிட்டிஷ் பத்திரிகைகளுக்குப் பிடிக்காவிட்டாலும், பிரிட்டிஷ் பொதுமக்களுக்குப் பிடித்திருக்கிறது. நன்றாக ஓடுகிறது. பொதுமக்களும் நானும் ஒரேமாதிரியான நகைச்சுவை ரஸனை உடையவர்களாக இருக்கிறோம்!" என்றார்.

நிருபர்கள், "உங்களுக்கு யார் எடுத்த படங்கள் பிடிக்கின்றன?" என்று கேட்டார்கள்.

"உண்மையைச் சொல்லப் போனால் நான் படம் பார்க்கப் போவதே யில்லை. என் (படப் பிடிப்பு) வேலையே எனக்குச் சரியாக இருக்கிறது" என்று பதில் வந்தது.


"இன்று உங்களுக்கு மிகவும் விருப்பமான ஹாஸ்ய நடிகர் யார்?" என்று மற்றொரு கேள்வி கேட்டார் நிருபர்.

"சார்லி சாப்ளின்!" என்றார் சார்லி சாப்ளின்!


அறிவுத் தாகம்



❖ பிரிட்டனில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் செயின்ட் காதரைன் கல்லூரியில் அண்மையில் தமது இருபத்தெட்டாவது பிறந்த தின விழாவைக் கொண்டாடிய ஒரு மலாவி நாட்டு மாணவர், தமது கல்வியைத் தொடருவதற்காக ஆப்பிரிக்கக் கண்டத்தின் பல பகுதிகளை நடந்தே கடந்திருக்கிறார்! அவர் பெயர் லெக்சன் காயிரா — உயர்நிலைப் பள்ளிப் படிப்பை — மலாவியில் படித்து முடித்தபோது மேற்கொண்டு தமது படிப்பைத் தொடர அங்கு ஏதும் வாய்ப்புகள் இல்லாதிருப்பதைக் கண்டார். மேற்படிப்புக்கு என அமெரிக்கா செல்லும்பொருட்டு நடக்கத் தொடங்கினார். ஸாம்பியா, டான்ஜானியா, உகாண்டா, சூடான் எனப் பல நாடுகளையும் நடந்தே கடந்தார். கார்ட்டோம் நகரை அவர் அடைந்தபோது அவர் உதவி வேண்டி எழுதியிருந்த வாஷிங்டன் பல்கலைக் கழகத்திலிருந்து பதில் வந்தது: "உமது பிரயாணத்துக்குப் பணம் கொடுக்கிறோம்; தங்கும் இடமும் தருகிறோம்" என்று. அங்கு அவர் தமது அரசியல் விஞ்ஞான பி. ஏ. பட்டத்தைப் பெற்றுக்கொண்டு கேம்பிரிட்ஜ் சென்றார். கேம்பிரிட்ஜில் அவர் படிப்புக்குப் பணம் ஏது? தாமே எழுதி வெளியிட்டுள்ள "நான் முயற்சி செய்வேன்" என்ற புத்தகத்தின் விற்பனை வருவாயிலிருந்து படிக்கிறார்.




❖ அமெரிக்காவின் இன்றைய 'வயதான' மாணாக்கர் யார் தெரியுமா? நூறு ஆண்டுகள் நிரம்பிய ஸ்ரீமதி மேரி வாக்கர் என்பவர்தான்! அலபாமாவில் பிறந்த இந்த நீக்ரோ மாது, 1964ம் ஆண்டுவரை பள்ளிக்கூடம் சென்றறியாதவர்; அந்த ஆண்டுதான் அவர் ஆரம்பப் பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்தார். அவ்வளவு தாமதமாக அவர் கல்வி கற்க ஆரம்பித்தபோது அவர் கூறிய காரணம் என்ன தெரியுமா? "நான் பைபிளைப் படித்து, கடவுளைப் பற்றி மேலும் நல்ல முறையில் அறிந்து கொள்ள விரும்புகிறேன்!"



❖ பாகிஸ்தானில் கராச்சி பல்கலைக் கழகத்தில் இந்த ஆண்டு பட்டம் பெற்ற 6,050 பேரில், சரி பாதிப் பேர் பெண்கள்! மேலும் இப்பொழுது கல்லூரிகளில் படிப்பவர்களில் 56 சதவிகிதம் பெண்களே! — 'பியாடே'

ரோஜா மலர... வெங்காயம்!



❀ உடைத்ததும் தேங்காய் மூடியை அப்படியே உப்பில் போட்டு வைத்திருந்தால் அது நீண்ட நாள் கெடாமல் இருக்கும். தேங்காய் விலை ஒரேயடியாக உயர்ந்துள்ள இந்நாளில் இது சௌகரியமாய் இருக்குமல்லவா?



❀ வீட்டில் ரோஜாச் செடி நன்றாக வளர்ந்து பூத்துக் குலுங்க வேண்டுமா? அதன் பக்கத்தில் வெங்காயத்தை நடவும். ரோஜா நன்றாகப் பூத்துக் குலுங்கும்.



❀ கறிவேப்பிலைச் செடி நன்றாக வளரவில்லையா? — வீட்டில் மீதமாகும் புளித்த மோரை அதன்மேல் கொட்டிவாருங்கள். செடி செழிப்பதுடன் கறிவேப்பிலையும் நன்றாக மணக்கும்.



❀ அப்பளாம் வைத்துள்ள டப்பியில் கொஞ்சம் பெருங்காயம் போட்டு வைத்தால் அப்பளாம் கமகமவென்று வாசனையுடன் இருக்கும்.



❀ வீட்டில் தென்னை மரம் நன்றாக வளரவில்லையானால் அதைச் சுற்றி ஆழமாக வெட்டி உப்பைக் கொட்டி மண்ணினால் மூடி விடவும். தென்னை மரம் நன்றாக வளரும்.

— சாரதா கணபதி

நதிக்கு — மரண தண்டனை

ஒரு நதிக்கு மரண தண்டனை விதித்தான் ஒரு மன்னன். இது என்ன முட்டாள்தனம் என்று அவசரப்பட்டு முடிவுகட்டி விடாதீர்கள். அதை அவன் நிறைவேற்றவும் செய்தான். இப்போது ஈராக்கிலுள்ள டையாலா என்ற அந்த நதிக்கு அப்போது ஜின்டெஸ் என்று பெயர். பாரசீக மன்னன் சைரஸ் ஒரு சமயம் குதிரை மீது ஆற்றைக் கடந்து சென்ற போது அவனுடைய அருமையான குதிரை ஆற்றில் மூழ்கி இறந்து விட்டது. நதியே தன் குதிரையைப் பறித்துக் கொண்டு விட்டதாக எண்ணிக் கோபமடைந்த மன்னன் நதிக்கு மரண தண்டனை விதித்தான். 360 கால்வாய்களை வெட்டச் செய்து ஆற்றின் நீரையெல்லாம் அவற்றின் வழியே வடியச் செய்து விட்டான். அதனால் ஆறு வறண்டு போய் உயிரிழந்து விட்டது. ஆயிரம் வருடங்களுக்குப் பிறகே இயற்கை இந்த மரண தண்டனையை ரத்து செய்தது. காலப் போக்கில் கால்வாய்கள் தூர்ந்து போகவே மீண்டும் ஆற்றில் நீர் ஓட ஆரம்பித்தது.

ஆதாரம்: 'விசித்திர மனிதர்கள்' என்ற நூல்
தகவல்: அ. கி. மூர்த்தி

பிரியாமலிருக்க ... விவாகரத்து!



மேல் நாடுகளில் விவாகரத்துக்காக எத்தனையோ புதுமையான காரணங்கள் கூறப்படுவது தெரிந்ததே. ஆனால் சமீபத்தில் டைவானில் வாய்யுங்—சாங் என்ற 27 வயது ஆசிரியர் விவாகரத்துக் கோரியுள்ள காரணம் விநோதமானது. அவரும் புதிதாய்த் திருமணம் செய்து கொண்ட அவர் மனைவியும் ஒரே ஆரம்பப் பள்ளியில் ஆசிரியர்கள். கணவனும் மனைவியுமாகப் பணியாற்றுவதற்கு அந்தப் பள்ளிக்கூடச் சட்டம் இடம் தருவதில்லை. அதனால் தானும் தன் மனைவியும் ஒரே பள்ளியில் தொடர்ந்து இருப்பதற்காக இப்போது வாய் யுங் — சுங் விவாகரத்துக் கோரியிருக்கிறார்!

இ. பட்டிராஜன்

ஆதாரம்: இந்துஸ்தான் டைம்ஸ்

42. பால சம்பந்தர்

சிவனருட் செல்வர்

திருமுருக கிருபானந்தவாரியார்




பெரிய புராணத்தில் பாதி வரலாறு திருஞான சம்பந்தரது வரலாறு. சமய குரவர் நால்வருள் முதலாக வைத்து எண்ணப்படுபவர் திருஞான சம்பந்தர். அவருடைய சரிதத்தைச் சிந்தித்தும் வந்தித்தும் பாடுகின்றார் சேக்கிழார். திருமுறைகளில் முதலாவது ஞான சம்பந்தர் வாக்கு. திருஞான சம்பந்தர் வயதில் சிறியவராயினும், ஞானத்தில் பெரியவர். தம்முடன் கயிலைக்கு வந்த சேரமான் பெருமான் நாயனாரை உள்ளே அழைத்துச் செல்லவில்லை சுந்தரர். ஆனால், சம்பந்தர் தம் திருமணத்துக்கு வந்த அத்தனை பேருக்கும் சிவலோகக் காட்சியளித்தார். அத்துணைக் கருணையுள்ளம் படைத்தவர் சம்பந்தர். கருணை வேறு; ஞானம் வேறு என்று சிலர் சொல்லுகிறார்கள். அது பிழை. ஞானத்தின் பயன்தான் கருணை. இதைத் திருவள்ளுவர் கூறுகிறார்:

> அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
> தந்நோய்போல் போற்றாக் கடை.

பிறர் துயரைத் தன் துயரமாக எண்ணி இரங்குவதுதான் நல்லறிவுக்குரிய இலக்கணமாகும். அந்த நல்லறிவே ஞானம். அந்த ஞானத்தின் வடிவம் ஞான சம்பந்தர் என்று கூறுகிறார் சேக்கிழார். சுப்பிரமணிய ஸ்வாமியை அப்படிச் சொல்லுவார்கள்; ஞானமே வடிவானவர் முருகன். ஞானசம்பந்த சுவாமிகளைப் பூசனை செய்தால் ஞானம் வரும்.

ஞான சம்பந்தர் இல்லையென்றால் தமிழ் ஏது? திருநீறு ஏது? உருத்திராக்கம் ஏது? சைவம் ஏது?

ஞான சம்பந்தர் அவதாரம் செய்வதற்கு முன் நாடு எப்படி இருந்தது? கூன் பாண்டியன் சமணனாகி விட்டான். அரசன் எவ்வழியோ அவ்வழி தானே குடிகள்? சமண சமயத்தை எடுத்துச் சொல்லி எட்டாயிரம் குருமார்கள் பிரசாரம் செய்தார்கள். பாண்டிய நாட்டிலே சமண இருள் மண்டிக் கிடந்தது. அதனால் கொடுமை மிகுந்திருந்தது. சம்பந்தர் திரு அவதாரம் செய்வதற்கு முன் பாண்டி நாட்டுக்கு யாராவது திருநீறு பூசிக் கொண்டு போனால், அவர்களைக் கண்ட சமணர்கள் அழுவார்கள். 'ஏன் அழுகிறீர்கள்?' என்று கேட்டால் 'கண்டு முட்டு' என்பார்கள். அதைக் கேட்டவர்கள், ''கேட்டு முட்டு'' என்று அழுவார்கள். இப்படியாகச் சமணர்கள் சைவர்களை மனம் நோகச் செய்தார்கள். கொலையைக் காட்டிலும்



கொடியது மனம் நோக வைப்பது. இந்த மாதிரியான நிலைமையில்தான் ஞானசம்பந்தர் திருஅவதாரம் செய்தார். பொறுக்க முடியாத சமணக் கோடை ஞான சம்பந்தராகிய மழையைக் கொண்டு வந்தது.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை
விளங்க
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திரு ஞான சம்பந்தர்
பாத மலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

கடலில் தவிப்பவனுக்கு உய்வு தருவது படகு. பிறவிப் பெருங்கடலில் விழுந்துவிட்ட நாம் அதனுள் அழுந்தாத வண்ணம் உதவி செய்வது ஞானசம்பந்தர் திருவடி. படகில் ஏறிக் கொள்ளலாம். திருவடியில் ஏற முடியாது. பற்றிக் கொள்ள வேண்டும். அதனால்தான் சம்பந்தர் திருவடிகளைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறோம். 'சம்' என்றால் நல்ல என்றும், 'பந்தம்' என்றால் உறவு என்றும் பொருள். ஞானத்தோடு உறவு கொண்டவராதலால் ஞானசம்பந்தர். ஞானம் மூவகைப்படும். பொருள்களைப் பற்றி அறியும் ஞானம் பாச ஞானம். ஆன்மாவைப் பற்றி அறிகிற ஞானம் பசு ஞானம். இறைவனைப் பற்றி அறிகிற ஞானம் பதி ஞானம். பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் பிறவித் துன்பம் தீராது. பதி ஞானத்தாலேயே அது தீரும். ஞானசம்பந்தர் பதி ஞானத்தோடு தொடர்பு கொண்டவர்.

ஃ ஃ ஃ

உயர்குடித் தோன்றல்களான சோழ மன்னர்கள் வழி வழியாகச் சைவத்





துறையில் நின்றவர்கள். அவர்கள் வளமை உள்ளவர்கள். ஆதலால் 'வளவர்' என்றும், செழிப்புடையவர்களாதலால் 'செழியர்' என்றும் அறிஞரால் புகழப்படுபவர்கள். இத்தகைய சீரும் சிறப்பும் பெற்ற சோழர்களது ஆட்சிக்கு உட்பட்ட நாடு சோழ நாடு எனப்படும். அந்நாடு காவிரி நதியினால் வளம் பெறும் நாடு.

சீகாழி என்ற திருத்தலம் சோழ நாட்டுக்கு அணிகலம் போல் விளங்கியது. யுக முடிவில் கடல் பொங்கி எங்கும் நீர் பெருகி உலகம் ஒடுங்கியபோதும் தோணி போல் மிதக்கும் தன்மையுடையது இத்தலம். அந்நகரில் வேதம் பயிலும் ஓசை கடல் ஒலி போன்று ஒலிக்கும். பசுமை நிறம் பொருந்திய சோலைகளுக்கு இடையில் அந்நகரம் பொலியும் அழகு யுக முடிவில் மட்டுமேயன்றி எப்பொழுதுமே கடலில் மிதப்பது போல் காட்சி தந்து கொண்டிருந்தது.

யுக முடிவுகள் தோறும் மேலெழுகின்ற வெள்ளப் பெருக்குகளின் அலைகள் அந்நகர மதிலின் புறத்தில் அலையலையாக அடையாளங்கள் செய்திருக்கும். பாற்கடலைக் கடைந்த காலத்தில் மந்தர மலையை வரி வரியாகச் சுற்றிய வாசுகி நாகம் போல் விளங்கியது அக்காட்சி. பல இளஞ் சூரியர் தோற்றம் போல் மலர்ந்த தாமரைகளும், மணக்கும் தடாகங்கள் பலவும் அந்நகரைச் சூழ்ந்திருந்தன. பல ஊழிகளாக அழிவின்றி நிலைபெற்றிருக்கும் அந்நகரில் மறைவாணர் புரியும் ஓமப் புகையினால் இருளும், அடியவர் மேனியில் விபூதி யொளியும் எப்போதும் விளங்கின. அதனால் ஆங்கு இரவும் பகலும் மிகையாயின.

வயல்களில் மலர்ந்துள்ள தாமரை மலர்களாகிய ஓமத் தீயில், அருகில் இருக்கும் மாமரங்களில் உள்ள இனிய மாங்கனிகளின் சாறு ஆகிய நெய், அம்மரங்களின் இலைகளின் வழியே ஒழுகிற்று. அக்காட்சி, அவ்வூர் மரங்களும் ஓமம் செய்வது போல் காணப்பட்டது. இருண்ட சோலைகளில் வண்டுகள் தாமரை நூலைத் தாங்கியும் பூவின் புற இதழைத் தாங்கியும் மகரந்தப் பொடியணிந்து, கண்ணீர் ததும்பி



இனிய ஓசையை எழுப்பின. அவ்வோசை வேதியச் சிறுவர்கள் சாம வேதம் பயில்வது போல் இருந்தது. அருந்ததியின் மிக்க கற்புடை மாதரார் யாக வேதிகையினை மெழுகி, வெண் சுண்ணக் கோலமிட்டு, அழகு செய்யும் அழகிய மாடங்கள் பல அவ்வூரை அணி செய்கின்றன. பொன்னாலாகிய கிண்கிணி ஒலிக்க அந்தணச் சிறுவர்கள் சிறு தேர் உருட்டியும், வெள்ளிச் சடங்குகளை விளையாட்டில் அமைத்து ஆடியும் உலவுகின்ற அழகிய வீதிகள் பல நெருங்கி யிருந்தன.

மடையெங்கும் மணிக் குவியலும் வயலெங்கும் மீன் குழுவும் வயலருகில் மலர்க் குவியலும், அதன் அருகில் வேள்விகளின் பொலிவும் வேதம் பயில் இடங்களில் வேத கீதமும், சோலையெங்கும் வண்டின் இனிய நாதமும். சோலைகளிடையே முனிவர் கூட்டமும் மதில்களில் மேகங்களின் ஈட்டமுமாக இலங்கின. அத்திருத் தலத்துக்குப் பன்னிரண்டு நாமங்கள்.

> பிரமபுரம் வேணுபுரம்
>   புகலிபெரு வெங்குருநீர்ப்
> பொருவில்திருத் தோணிபுரம்
>   பூந்தராய் சிரபுரமுன்
> வருபுறவம் சண்பைநகர்
>   வளர்காழி கொச்சைவயம்
> பரவுதிருக் கழுமலமாம்
>   பன்னிரண்டு திருப்பெயர்த்தால்

படைப்புத் தொழிலைப் பெற வேண்டிப் பிரம்ம தேவர் பூசித்துத் திருவருள் பெற்றார். அதனால் பிரமபுரம் எனப் பேர் பெற்றது.

வேணு என்றால் மூங்கில். இந்திரன் சூரபன்மனுக்கு அஞ்சி மூங்கில் உருவங் கொண்டு தவம் செய்தான். அதனால் வேணுபுரம் என்னும் பேர் பெற்றது.

சூராதி அவுணர்களின் கொடுமைக்கு ஆற்றாத அமரர்கள் கந்தவேளைத் தந்தருளுமாறு புகலிடமாகப் புகுந்தனர். அதனால் புகலி எனப் பெற்றது.

பிரம்மனால் இகழப்பட்ட அசுர குருவாகிய சுக்கிரன், நாரதரின் உபதேசப்படி வந்து பூசித்துத் தேவகுருவுக்கு இணையான தகைமையைப் பெற்றான். தன்னைக் கொடியன் என்று நரகர் இகழும் பழி நீங்குவதற்காக இயமன் வழிபட்டு, முன்னுணர்ச்சி பெற்று மௌன நிலை அடைந்தான். இவைகளால் வெங்குரு எனப் பெயர் பெற்றது.

கற்பாந்த காலத்தில் உலகனைத்தும் அழியுமாறு எழுந்த பெரு வெள்ளத்தில் இத்தலம் மட்டும் அழியாமல் பிரணவ உருவாகத் தோணி போல் மிதந்தது. அதனால் தோணிபுரம் எனப் பெயர் பெற்றது.

சங்கநிதி, பதும நிதி என்ற இரு நிதிகளின் அதி தேவதைகள் வேண்டுவார் வேண்டியவற்றை மாறாது வழங்கும் வன்மையைப் பூந்தராயிருந்து பூசித்துப் பெற்றன. திருமால் வெண்பன்றி உருக் கொண்டு, இரணியாக்கனைக் கொன்று, பூமியை இங்கு தரித்தனர். இவ்விரு காரணங்களால் பூந்தராய் எனப்பெற்றது.

பாற்கடலில் தோன்றிய அமுதத்தைத் திருமால் தேவர்களுக்குப் பகிர்ந்து, அளிக்கும்போது, சிலம்பன் என்ற அசுரன் அமர வடிவு கொண்டு அமுதம் பெற வந்தான். அவனை அசுரன் என்று சூரியன் சுட்டிக் காட்ட, திருமால் சட்டுவத்தால் அவனை வெட்டினார். அவனுடைய சிரம் ராகுவாக நின்று இங்கு பூசித்தது. அதனால் அவன் நவக்கிரகங்களில் ஒருவனாகும் பதம் பெற்றான். இக் காரணத்தால் சிரபுரம் எனப் பெயர் பெற்றது.

சிபிச் சக்கரவர்த்தியிடம் இந்திரன் பருந்தாகவும், அக்கினி தேவன் புறாவாகவும் சென்று சோதித்தனர். புறவின் எடைக்குச் சிபி தன் உடல் தசையை அறுத்து நிரப்பினான். அப்பாவம் போகப் புறவாகிய அக்கினி தேவன் இத்தலத்தில் பூசித்தான். அதனால் புறவம் எனப் பெற்றது.

கபிலர் சாபத்தால் யாதவன் ஒருவன் வயிற்றில் உதித்த இருப்பு உலக்கையைப் பொடியாக்கிக் கொட்டிய தூள்கள் சண்பைப் புற்களாய் முளைத்தன. அப் புற்களைப் பிடுங்கி யாதவர்கள் ஒருவரை யொருவர் அடித்து மாய்ந்தனர். அப்பழி போகுமாறு கண்ணனும், அம் முனிவனும் இந்த க்ஷேத்திரத்தில் பூசித்தனர். அதனால் சண்பை எனப் பெற்றது.

காளிதன் என்ற நாகராஜனும் நடனத்தில் தோல்வியுற்ற காளியும் சீர்காழியில்தான் ஈசனைப் பூசித்து அருள் பெற்றனர். அதனால் காழி எனப் பெற்றது.

பராசர முனிவர் மச்சகந்தியைக் கலந்ததனால் உண்டாகிய துர்க்கந்தமும், பழியும், முனிவர்களது இகழ்வும் நீங்கும்படி சீர்காழியில் பூசித்தார். அதனால் கொச்சை வயம் எனப் பெற்றது. (கொச்சை — தீ நாற்றம். வயம்— நீங்கியது.)

உரோமச முனிவர் பூசித்து ஞானோபதேசம் பெற்று, உலகில் உள்ள உயிர்களின் மலங்களைக் கழுவும் வரம்

பெற்றார். அதனால் கழுமலம் எனப் பெயர் பெற்றது.

இவ்வாறாகப் பன்னிரண்டு திரு நாமங்களை உடைய அந்தத் திருநகரில் அந்தணர் குலத்தின் தலைவராய், வழி வழியாக நன்னெறி நின்ற கௌணியர் கோத்திர நற்குடியில் சிவபாத இருதயர் என்னும் சிவனருட் செல்வர் ஒருவர் தோன்றினார். இவ்வுலகமெல்லாம் வாழும் பொருட்டுத் தவம் செய்யும் இயல்பு உடையவராய் இருந்தார் அவர். சிவபெருமான் திருவடியை எப்போதும் இதயத்தில் வைத்து வழிபடும் நியமம் பூண்டவர். அவருடைய திருமனைவியார் பகவதியார் பொற்பும் கற்பும் மிகுந்து கணவனார் கருத்தின்படி ஒழுகி வந்தார். கணவனாரும் மனைவியாரும் திருநீற்றினிடம் மிகுந்த அன்பு கொண்டு, யாவரும் அதிசயிக்குமாறு அன்பும் அறனும் அமைந்த அழகிய இல்வாழ்க்கையில் இனிது வாழ்ந்தார்கள். அப்பொழுது சமணர்களின் பொய்யொழுக்கம் யாண்டும் பரவியிருந்தது. அதனால் விபூதியின் விளக்கம் போற்றப் பெறாதிருந்தது. அதனைக் கண்டு சிவபாத இருதயர் பெரிதும் வருந்தினார்.


“ஏ பரமேசா! தேவரீருக்கு எம் மதமும் சம்மதமாயினும், மதப் பூசலைத் தவிர்த்து அருள வேண்டுவது நின் கருணையின் இயல்பன்றோ? கருணைக் கடலே! இங்கு விளைவிக்கும் மூங்கையராகிய பர சமயிகளை அழித்து, திருநீற்றின் பெருமையைப் பரப்பும் ஒரு சிறந்த நற்புதல்வனைத் தந்தருள வேண்டும்” என்று துதித்து அரும் பெரும் தவம் புரிந்தார்.


நாடோறும் பெரிய நாச்சியுடன் இருந்தோணி மிசை வீற்றிருக்கும் விடையவரது விரைமலரடியை அன்புடன் வழிபட்டு வந்த பகவதியம்மையார் கண்ணுதலார் கருணையினால் கருவுற்றார். தோணியப்பருடைய பரம கருணையைப் போற்றி மிகுந்த மகிழ்ச்சியுடன் திங்கள்தோறும் செய்யும் மறைமுறைச் சடங்குகளை நலஞ் சிறப்பச் சுற்றத்தாருடனும், நண்பருடனும் செய்வாராயினர். அம்மையார் கருவுற்றுப் பத்துத் திங்கள் நிறைந்தன.


கதிரவன் முதலிய கோள்கள் யாவும் உச்சம் பெற்று விளங்கின. திருவாதிரை நாளில், பர சமயத்தின் தருக்கு அடங்கவும், சைவமும் வைதிகமும் தழைத்து ஓங்கவும், திருஞான சம்பந்தர் திரு அவதாரம் செய்தார். (தொடரும்)



நானானவள்!





பொன் என்னில் அரை மாற்றும் குறையாதவள்;
புகழ் என்னில் சிறு கறையும் படியாதவள்;
மலர் என்னில் என்றென்றும் வாடாதவள்;
மதி என்னில் பின் தேய்ந்து வாராதவள்;
தேன் என்னில் சிறிதளவும் தெவிட்டாதவள்;
திரு என்னில் போய் வந்து சிதையாதவள்;
மயில் என்னில் பிறர்க்காக ஆடாதவள்;
மழை என்னில் வெள்ளத்தால் அழிக்காதவள்;
கலை என்னில் களங்கமே கலவாதவள்;
கடல் என்னில் எல்லையே காணாதவள்;
காலம் என்னில் தினந்தோறும் கரையாதவள்;
காதல் என்னில் என்னுள்ளே தானானவள்;
உயிர் என்னில் எனக்காக உடலானவள்;
உளம் என்னில் தன்னுள்ளே நானானவள்!

சிவசக்தி



அன்புக்கும் ஓர் எல்லை





அட்டைப் படக் கதை

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

ரயில் ஆனந்தமாய்த் தண்டவாளத்தில் தாளமிட்டுக் கொண்டு சென்னை சென்ட்ரல் நிலையத்துக்குள் நுழைந்து கொண்டிருந்தது. மாலை வெய்யில் பொன்னாய் மாறிவிட்டது. நின்று நின்று மூச்சுக் காற்றாய் வந்த தென்றலைப் போல என்ஜின் பொருமுவதும், விட்டு விட்டுக் கடைசியாய் நின்று விட்டது.

கல்கத்தாவிலிருந்து ஒன்றரை நாள் பிரயாண அலுப்போடு இறங்கிய ரவி, கைகளை உதறி உடையை ஒருமுறை சரி செய்து கொண்டான். முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து சாமான்களின் வரிசை இறங்கத் தொடங்கிற்று. ரவியின் கண்கள் கோடிக்குக் கோடி தேடி அலைந்தன.

'பட்'டென்று முதுகில் அடி விழுந்தது. மகிழ்ச்சியும் திகைப்புமாகத் திரும்பினான். சுந்தர் நின்று கொண்டிருந்தான்.

''உன்னைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.''

''நான் உன்னைப் பார்த்தாயிற்று. தெரியாமல் பின்னால் வந்து முதுகில் இப்படி ஒரு போடு போட்டுத் திகைக்க வைக்க வேண்டுமென்றுதான்—''

ரவி சிரித்துக் கொண்டே பையைத் தோளில் மாட்டிக் கொண்டான். சுந்தர் இடது கையில் எடுத்த பெட்டியைச் சுவாதீனமாகப் பிடுங்கிக் கொண்டான். போர்ட்டருடன் நடக்கத் தொடங்கினார்கள். முடிச்சு பிரிந்து கொட்டிய மூட்டையாக, பிளாட்பாரமெங்கும் இறைந்து கிடந்த சாமான்கள் பரவலாக நடந்தும், நின்றும் குவிந்து கிடந்த கூட்டம், இவைகளுக்கிடையே பேச்சும் நடையுமாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

ஒரு மாத விடுமுறை. தமிழ் நாட்டில் ஒரு மாத வாசம். தமிழ்ப் பேச்சு காதில் விழுகிறது. நடை, உடை, பாவனை, சாப்பாடு, சூழ்நிலை எல்லாவற்றிலும் அசல் தமிழ் மணம். 'இது தமிழ் நாட்டைப் போல் இருக்கிறது' என்று கற்பனை செய்துகொள்ளத் தேவையில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கிடைக்கும் அநுபவம்தான். ஆனால் ஒவ்வொரு தடவையிலும் ஒரு புதுமை தெரியாமல் இல்லை.

''காரில் வந்திருக்கிறாயா?''

''ஆமாம். அவளும் வந்திருக்கிறாள்.''

''அப்படியா?''

''கூடவே—'' ஏதோ சொல்ல வந்தவன், அப்படியே நிறுத்தினான். ஒரு கணம் அவன் பேச்சுக்குக் காத்திருந்து விட்டு, மணிபர்ஸைத் திறந்து டிக்கட்டை எடுக்க முனைந்தான் ரவி.

வெளியே சாமான்களுடன் காரில் வந்து ஏறும்போதுதான் அவன் சொல்ல வந்து நிறுத்திக் கொண்ட விஷயம் புரிந்தது. சுந்தரின் மனைவி நீலாவை அவனுக்குத் தெரியும். அவளுடன் பின் ஸீட்டில், பக்கத்தில் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். மங்கி மறையும் அந்தி வெளிச்சத்தில், அவள் உருவக் கோடுகள் மாத்திரம், மென்மையாக எழுதிய சித்திரத்தின் தொடக்கம் போலத் தெரிந்தன. குனிந்த தலையுடன் தன் கையில் இருந்த புத்தகத்தில் ஊன்றிப் போயிருந்தாள்.

ஒரு சிரிப்புடன் நீலா அவனை வணங்கினாள். பதிலுக்குக் கதவருகில் குனிந்து அவனும் ஒரு புன்சிரிப்புடன் விசாரித்தான். அந்தக் குரல் கேட்டு அவள் நிமிர்ந்து பார்த்தாள். தயங்கி நிமிர்ந்த பார்வை. சற்றே தலையவிழ்ந்த மொட்டுப் போன்று வியப்பில் சிறிது திறந்த இதழ்கள். சிறு அசைவும் கலைத்து விடக் கூடியது போல ஒரு நளினம்.

அவள் அவனைப் பார்த்த விதத்தை அவனால் கண்டுகொள்ள முடியவில்லை, அந்த மெல்லிருளில். ஆனாலும் தன்னுள் எழுந்த உள்ளுவகையை அந்த மலர்ச்சியின் மணம் தன்னைக் கவர்ந்த விதத்தை, அவனால் உணர முடிந்தது.

''இவள் என்னுடைய மாமாவின் பெண். பெயர் உமா'' என்று சொல்லிவிட்டு அவன் புறம் திரும்பினாள் நீலா. ''இவர் மிஸ்டர்

ரவி. கல்கத்தாவில் இன்ஜினியர். அவருக்குச் சகோதரரைப் போல நெருங்கிய நண்பர். மிஸ்டர் ரவி பெண்ணாகப் பிறந்திருந்தால் நான் இங்கே வந்திருக்க முடியாது!''

கலகலவென்ற சிரிப்பு சேர்ந்தாற்போல் எழுந்தது. போர்ட்டரை அனுப்பிவிட்டு ரவி உள்ளே உட்கார்ந்து கொண்டான். ரவியைச் செல்லமாக ஒருமுறை கிள்ளிவிட்டுச் சுந்தர் கதவைச் சாத்தினான். கார் கிளம்பிற்று.

மாலை நேரம். கடற்கரைச் சாலையின் மயக்கும் தோற்றம். விளக்குகள் ஒவ்வொன்றாய்க் கண் விழிக்கத் தொடங்கி விட்டன. நடை பாதையில் வண்ண வண்ணமாய் ஓவியம் எழுதியது போல நடந்து செல்லும் உருவங்கள். கரையிட்டது போன்ற பசுமையான செடி வரிசை. அங்கங்கே தலைநிமிரும் பூக்கள். உழைப்பின் உயர்வைக் காட்டும் சிலை, மகாத்மா காந்தியின் சிலை, என்று ஒவ்வொன்றாக நழுவிக் கொண்டிருந்தது.

இது தாகூரியா ஏரிக் கரை யில்லை. பாலி கஞ்ஜின் தெருக்களில் ஒன்றில்லை. டிராமிலும் பஸ்ஸிலும் வந்திறங்கும் மக்களிடையே தமிழ் மக்களை, நண்பர்களை, பழக்கமான பேச்சை, கண்ணும் காதும் தேட வேண்டியதில்லை.

இது ஹூக்ளி அல்ல; அடையாறுதான். அந்தச் சூழ்நிலைக்குத் திரும்ப இன்னும் ஒரு மாதமாகும். அவசியமானால் இன்னொரு மாதம் விடுமுறையைக் கூடக் கேட்டுக் கொள்ளலாம். அவசியமானால்— அவனுள் ஒரு சிரிப்புக் கேட்டது. காதருகே தாயின் குரல் கேட்டது.

''இந்தத் தடவையாவது ஒரு கலியாணத்தை முடித்துக் கொண்டு போய் விடப்பா. யாராயிருந்தாலும் சரி; உனக்குப் பிடித்திருந்தால் எங்களுக்கும் சம்மதம் தான்!''

தாயின் குரல் கேட்கும்போது, அவனுடைய எண்ணங்கள் அவனுடையவை இல்லை. தன்னையறியாது கசிந்துருகி அவன் எங்கேயோ அமிழ்ந்து விடுகிறான். அவன் பதவியும், செல்வமும், உயர்ந்த வாழ்க்கை நிலையும் பொருளற்றுப் போய் விடுகின்றன; தான் இழந்து நிற்கும் அந்த அன்பின் இனிப்பை நினைத்து மறுகும்போது.

''இறங்கு. என்ன யோசனை?'' என்று போர்டிகோவில் நின்ற காரின் கதவைத் திறந்தான் சுந்தர். அவன் இறங்கியாயிற்று. நீலாவும் கூடத்தான். சமாதானமாக ஒரு சிரிப்புடன் அவன் இறங்கி, உமாவின் பக்கமாய் இருந்த கதவை மெதுவாகத் திறந்தான்.

''நீங்கள் இறங்கவில்லை?''

சட்டென்று அவள் முகம் ஒரு வேதனையில் கனத்தது. ரவி சுந்தரின் புறம் திரும்பினான். அவன் முகம் கனிந்தது. புரியாத விதமாய் நீலா அவர்கள் இருவரையும் பார்த்தபடி நின்றாள். செய்யக் கூடாத ஏதோ ஒன்றைச் செய்து விட்டோம் என்ற குற்ற உணர்ச்சி அவனைத் தாக்கிற்று. அங்கே அவர்களிடையே விழுந்து விட்ட மௌனத் திரை, அவனைச் சட்டென்று தனியனாக்கி விட்டது.

அவள் அப்படி என்ன செய்து விட்டாள்? எதனால் இந்த இம்சையான மௌனம்? எல்லோரிடமும் அப்படிக் கனத்துத் தொங்கும் அந்த வேதனைக்கு அவனா காரணம்?

''ரவி, நாம் உள்ளே போகலாம் வா.''

சுந்தரின் குரல் அந்தத் தேக்கத்தைக் கலைத்தது. கையைப் பின்னால் கட்டியபடி ரவி அவன் பின்னால் போனான். ஆனாலும் மனத்தில் முணுமுணுக்கும் அந்த வேதனையிலிருந்து அவனால் விடுபட முடியவில்லை.

குளித்து விட்டு உடை மாற்றிக் கொண்டு அவன் வந்தபோது அவர்கள் மூவரும் தோட்டத்தில் பிரம்பு நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தார்கள். அவன் கண்கள் உமாவைத் தேடின. தூய வானின் நிறமாய் இள நீல நிற ஜார்ஜெட். அவள் முகத்தில் களைப்பின் அடையாளம் எதுவும் இல்லை. அவன் புறம் திரும்பிய பார்வையில் இள முறுவல் தெரிந்தது. காற்றில் ஆடும் அகல் சுடர் போல விழிகள் அவனை அழைத்தன.

அவன் அவளுக்கு எதிர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். தோட்டத்து விளக்கின் வெளிச்சம், நடுவில் இருந்த குட்டையான மேஜையின் மேல் விழுந்தது. வட்டமான விளிம்பிலிருந்து தொங்கிய விரிப்பின் அலங்காரமான ஓரங்கள் காற்றில் இலேசாய் நடுங்கின. சுந்தர் விரிப்பின் மேல் வழவழப்பான சீட்டுக்களை விசிறி போல் பிரித்தான்.

''ரொம்ப நாளாச்சு இல்லே? இரண்டு ஆட்டம் போடுவோமா?''

அவன் சிரித்துக் கொண்டான். சம்மதம் தெரிவிக்கும் விதமாய் நிமிர்ந்து உமாவைப் பார்த்தான். இரண்டு நட்சத்திரங்கள் ''நான் உங்கள் கட்சி'' என்று எட்டிப் பார்த்துக் கண்களைச் சிமிட்டின.

விளையாட்டை விட அவன் உற்சாகம் அவளுக்கு இதமாக இருந்தது. மாலையில் ஒரு கணம் தெரிந்த அந்த வேதனையின் நிழல் இப்போது இல்லை. களிப்பாகக் கைகொட்டி, கலப்பற்ற மகிழ்ச்சியில் சிரிப்பை உதிர்க்கும் வேளையில் ஒரு குளிர்ச்சி அவனை வசப்படுத்திற்று.

விளையாடிக் கொண்டிருக்கும் போதே, பையன் தட்டில் கண்ணாடி தம்ளரில் பழ ரசம் கொண்டு வந்தான். நீலா எழுந்து அதை ஒவ்வொருவருக்காக வாங்கிக் கொடுத்தாள். ரவிக்கு ஒரு கணம் என்ன தோன்றிற்றோ, பொய்க் கோபமாய்க் கடியும் குரலில் உமாவின் பக்கம் கையை நீட்டி, ''ஆட்டம் இருக்கட்டும். எழுந்து நீங்களும் கொஞ்சம் ஒத்தாசை செய்யுங்கள்'' என்று சொன்னான்.

எல்லோருக்கும் ஒரே சமயத்தில் சட்டென்று வாயடைத்து விட்டது. இம்சையான மௌனம் அங்கே தேங்கிற்று. கோல் பட்ட நாகம் போல் உமா தலை குனிந்து விட்டாள். இடது கைவிரல்களை வலது கையால் நீவிக் கொண்டாள். மடிமேல் படிந்த கைகளின் மேல் அவள் பார்வை குனிந்தது. கூந்தலின் சிற்றலைகளின் கருமை விளக்கொளியில் பளபளத்தது. மோவாயும் உதடுகளும் நடுங்குவது தெரிந்தது.

அப்புறம் ஆட்டம் நடக்கவில்லை. நீலா ஏதோ காரியமாக எழுந்து உள்ளே போய் விட்டாள். சுந்தர் கொஞ்ச நேரம் தயங்கி விட்டு எழுந்து அப்பால் நகர்ந்து போனான். அவர்கள் பேசிக்கொள்ளட்டும் என்றுதானோ?

அவனுக்கு எதுவும் புரியவில்லை. இப்படி ஓர் இடைஞ்சலான சந்தர்ப்பம்; இது இரண்டாம் தடவை. பசு நாக்குப் போல நெற்றியில் அடையாய்ச் சரிந்த முன் மயிரை ஒதுக்கிக் கொண்டான். குரல் தயங்கிற்று.

''என்னை மன்னித்து விடுங்கள். என் பேச்சின் தவறு இன்னும் எனக்குப் புரியவில்லை.''

ஏதோ சிந்தனையாய் அவள் நிமிர்ந்தாள். விழி ஓரங்களில் கண்ணீர் புறப்பட்டது.

''உங்கள் மேல் தவறு ஏதும் இல்லை. நான் — என்னால் துணையின்றி நிற்கவோ நடக்கவோ முடியாது.''

இறகொடிந்த பறவையாய், குனிந்த தலையுடன் அவள் உட்கார்ந்திருந்தாள்.

இரவெல்லாம் அவன் அந்த யோசனையிலேயே புரண்டு கொண்டிருந்தான். மையிருட்டின் இதம் கண்களை ஒற்றவில்லை. மெல்லெனத் தவழும் காற்றின் குளிர்ச்சி உடம்புக்குச் சுகமாக இல்லை.

படுக்கப் போகு முன் சுந்தர் அவனிடம் சொன்னான்: ''சிறு வயதில் வந்த வாத நோயின் அடையாளமாய், உமாவின் வலது கால் சுவாதீனம் இல்லாமல் போய்விட்டது. அதை நினைவுபடுத்தும்படி யாராவது ஏதாவது சொல்லி விட்டாலோ, எல்லோருக்குமே நெஞ்சு பொறுப்பதில்லை.''

ஒரு குற்ற உணர்ச்சி அவனை உறுத்திக் கொண்டே இருந்தது; அவன் ஒரு சிரிப்போடு அந்த நினைவை இழுத்து மூடிவிட்டு முதுகில் இலேசாய்த் தட்டி, ''குட் நைட்'' என்று சொல்லி விடைபெற்றுக் கொண்ட பிறகும்.

காலையில் சுந்தருடன் உலாவப் போகும் போது மறுபடியும் அந்தப் பேச்சின் தொடர்ச்சியை, விட்ட நூலை எடுப்பது போலத் தொடருவதை அவனால் தவிர்த்து நிறுத்த முடியவில்லை.

''உமாவிடம் நான் பேசலாமில்லையா, சுந்தர்?''

அவன் கண்களில் வினாத் தெரிய அவன் புறம் திரும்பினான். அவன் தீர்மானத்தை முகத்தில் பதிக்க முயலும் பாவனை.

''உன் மனத்தில் இருப்பது வெறும் அனுதாபம் இல்லையே? அப்படி யிருந்தால் அதனால் அவளுக்கு உதவி ஏதும் இல்லை. இயல்பான அன்பை அவள் ஏற்கலாம். ஆனால் இரக்கத்தை அவள் வெறுக்கிறாள். அவளுடைய குறையை அது இன்னும் அழுத்தமாகக் காட்டுவதன்றி வேறென்ன?''

''இல்லை சுந்தர். அது இரக்கமில்லை. முதன் முறையாக அவளைப் பார்க்கும் போதே என்னுள் அந்தத் துடிப்பை நான் உணர்ந்து கொண்டேன்'' என்று தொடங்கியவன் சுந்தரின் விஷமச் சிரிப்பைக் கண்டதும் சிறிது நிறுத்தினான். ''நீ என்ன நினைத்தால் என்ன? நான் அவளுக்கு உதவ முடியும். அவள் என்னை அனுமதித்தால்.''



''உங்க வண்டி மாடு என்ன விலை?''
''ஐந்நூறு ரூபாய்க்குத் தரேன்!''
''250 ரூபாய்க்குத் தர முடியுமா?''
''அவ்வளவு குறைச்சல் ரூபாய்க்கா? ஒரு சமயம் நான் பதிமுட்டாளானப்புறம் தரலாம்!''
''பரவாயில்லை; நான் காத்திருக்கிறேன்!''

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

சுந்தர் பெருமூச்சுடன் திரும்பினான்.

''அப்படிச் சொல்லும் வாலிபர்களில் நீ முதல்வன் இல்லை, ரவி. அந்த அழகுக்கு அந்தக் குறை. அதனால்தான் அவ்வளவு கொடுமையாக உனக்குத் தோன்றுகிறது. அந்தப் பலவீனத்துக்கு அவளுக்கு அந்தக் கவர்ச்சியாவது இல்லாமல் இருக்கலாம். போகட்டும். 'குட் லக்' என்றால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. அவள் உணர்ச்சிகள் மிகவும் மென்மையானவை. நீ ஜாக்கிரதையாக நடந்துகொள்.''

ரவி மறு நாள் ஊருக்குப் போவதாக இருந்தது. ஆனால் அவன் அதை இரண்டு நாட்கள் தள்ளிப் போட்டுக் கொண்டான்.

காலையில் காரில் நான்கு பேருமாகப் புறப்பட்டு விட்டார்கள். காரில் ஏறும் போதே ரவியின் கண்கள் அவள்மீது ரகசியமாக வெள்ளோட்டம் விட்டன. வைகறையின் அமைதியைப் போன்ற அந்த அழகு அவன் மனத்தில் வேதனையையே எழுப்பிற்று.

பேச்சில் அவள் சளைக்கவில்லை. பின்புறமிருந்து சிரிப்பும் பேச்சுமாக வந்து கொண்டிருந்ததில் கலகலப்பான சூழ்நிலை அங்கே நிலவிற்று. திரும்பாமலேயே அந்த உணர்வின் சூழலை, நிறையப் பூத்த மரத்தடியில் அமர்ந்திருப்பதைப் போல அவன் உணர்ந்தான்.

மாமல்லபுரம் வரை போய் வருவதென்ற திட்டம் அவர்கள் இருவருக்கு மட்டுமே தெரியும். நீலா அவர்களுடன் நடையின்றிச்

சேர்ந்து கொண்டான். உமா என்ன எண்ணி இருப்பாள்? அதுவும் அவனுடைய பங்கும் அதில் இருக்கும் போது? முதல் நாளே தன்னையறியாமல் இருமுறை அவள் மனத்தைப் புண்படுத்தி விட்டதை நினைந்துக் கொண்டான். அந்த நிகழ்ச்சியை எப்படி ஈடு செய்வது என்ற உணர்ச்சி அவனை நீங்காமல் அழுத்திக் கொண்டிருந்தது.

அர்ஜுனன் தவத்தைச் செதுக்கியிருந்த பெரும் பாறை முகத்துக்கு நேரே காரை நிறுத்தி விட்டுச் சுந்தரும் நீலாவும் எங்கேயோ நழுவி விட்டார்கள். தங்கள் இருவரையும் அப்படித் தனிமையில் விட்டு விட்டதைச் சிறிது நேரம் கழித்துத்தான் உமா புரிந்து கொண்டாள். அதை அவள் எளிதாக ஏற்கவில்லை. அந்தச் சங்கடம் அவள் முகத்தைப் பார்க்கையிலேயே தெரிந்தது. அவள் பார்வை வெளிப் பக்கமாக ஓடிக் கொண்டே இருந்தது. 'பாவம், முடிந்திருந்தால் அவள் எழுந்து போயிருப்பாள்' என்று நினைந்துக் கொண்டான் ரவி.

பக்கத்தில் நெடிதுயர்ந்து நின்ற சிற்பத்தைக் காட்டி, "இது மிகவும் நன்றாக இருக்கிறது. இல்லையா?" என்று ஏதோ ஒருவிதமாய்ப் பேச்சைத் தொடுத்தான். அவள் ஒரு மென் சிரிப்புடன் தலையை அசைத்துக் கொண்டாள். பேசாவிடினும் அதுவே அவனுக்கு ஓர் ஆறுதலாக இருந்தது.

"இறங்கிப் பார்க்கலாமா?"

"எதற்கு — இங்கிருந்தே தெரிகிறதே ?"

"பரவாயில்லை" என்று இறங்கிப் பின்புறம் வந்து கதவைத் திறந்து விட்டான். அவள் பிடித்துக் கொண்டு இறங்க ஆதரவாய் இடது கையை நீட்டினான். அவளுக்குத் தயக்கமாக இருந்தது. அவன் அதை வென்று விட உதவுவது போல் அவனே அவள் பிடியைப் பற்றிக் கொண்டான். அவள் கரம் மட்டுமின்றி உடல் முழுதும் சிலிர்த்து நடுங்கிற்று. இரண்டொரு அடிகளே நடந்து கைப் பிடிச் சுவரில் உட்கார்ந்து கொண்டாள்.

"நன்றி!"

அவள் அவனைப் பார்க்கவில்லை. நெற்றியில்-அரும்பிய வியர்வையை ஒற்றிக் கொண்டாள். அவன் மனத்தில் இரக்கம் ததும்பிற்று. ஆனால் அதைத்தான் எவ்வளவு பக்குவமாக வெளிப்படுத்தினாலும் அது எப்படி அவள் மனத்தை நோகச் செய்து விடுமோ என்ற தயக்கம் அவனைத் தடுத்தது.

"தவத்துக்கு எப்போதுமே ஓர் அழகு!"

அவன் பேச்சின் இரட்டை அர்த்தம் புரிந்தது போல் அவள் முக உணர்ச்சிகள் சட்டென்று நிலைத்தன. விரல்களின் பதற்றம் தெரியாமல் சேலை மடிப்பின் அலைகளில் புதைத்துக் கொண்டாள்.

"தவத்துக்கு உரிய குறிக்கோளும் சரியாக இருந்தால்..."

"அது எவ்வளவு தூரம் சரி என்றும், சாத்தியம் என்றும் பேசிப் பார்த்தால்தானே தெரியும்?"

"இருக்கலாம்—" அடுத்த கணமே அவளுக்கு அதைச் சொல்லி இருக்க வேண்டியதில்லை என்று தோன்றியிருக்க வேண்டும். அவர்களிடையே ஏதோ ஒரு வெட்கம் திரையாக நின்றது. அது அப்படியே இருப்பது அவனுக்கும் பாந்தமாக இருக்கும் போல் தோன்றிற்று.

"நான்தான் சுந்தரிடம் சொல்லி இங்கே வர ஏற்பாடு செய்தேன்."

அவள் அவனைச் சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். அவள் புன்னகை உயிரற்று உறைந்து போயிற்று. கூட்டுக் குருவியின் சிறகாய் அடித்துக் கொள்ளும் இதயம். அதன் படபடப்பை அடக்கிக் கொள்ள மார்பில் கையை வைத்துக் கொள்வது போல் விரல்கள் மடிப்பாய் உயர்ந்து படிந்தன.

அவளைத் தான் சங்கடத்தில் ஆழ்த்துவது அவனுக்கும் புரிந்தது. அதை அவன் விரும்பவில்லை. ஆனால் வேறு வழியும் இல்லை. தன்னைக் குனிந்து பார்த்துக் கொண்டான்; தன்னை அவள் சமாளித்துக் கொள்ள அவளுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுப்பது போல.

"நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் சக்தி நம்மிடம்தான் இருக்கிறது. நம் முயற்சியைப் பொறுத்துத்தான் அது அமையும்."

தன் உள்ளுணர்ச்சிகளை அப்படி வெளிப்படுத்துகையில் அவனுக்கு உடல் குறுகுறுத்தது. அவள் மனத்தைப் பெட்டி போல, அவ்விதமாய் அவன் திறக்கும் அதிர்ச்சியைப் பொறுதவளைப் போல அவள் முகம் வெளுத்தது.

"நமக்குள் இருக்கும் சொற்பப் பழக்கத்தில் நான் இவ்விதமாய்க் கேட்பது பொருத்தமாக இல்லை. ஆனாலும் உன்னைப் புரிந்து கொள்ள விரும்புகிறேன்."

அவள் இதழ்கள் துடித்தன. கண்களில் நீர் துளித்தது.

"மிஸ்டர் ரவி. என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியும்."

"தெரிந்துதான் பேசுகிறேன்."

"அப்படியானாலும் நீங்கள் அதன் பொறுப்பு முழுவதையும் நன்றாக உணராமல் பேசுகிறீர்கள். உங்கள் செய்கையின் சிக்கல் உங்களுக்குத் தெரியவில்லை."

"நீங்கள் ஒப்புக் கொண்டால் போதும்."

அவள் உணர்ச்சிகள் பொங்கின. கைக்குட்டையை இதழ்களில் வைத்துப் புதைத்துக் கொண்டாள்;

"சொல்லுங்கள் உமா."

"என்னால்.... யாருக்கும் சுகமில்லை."

"நான் அப்படி நினைக்கவில்லை."

"கொஞ்சம் பொறுமையாக இருங்கள். ஓர் ஆயுள் தண்டனையைத் தேடிக் கொள்ள ஏன் இப்படித் தவிக்கிறீர்கள்? இந்த இளமையும் அழகும் மறைந்துவிடும். வாழ்நாள் முழுதும் ஒரு முடமான பெண்ணைத் தாங்கிப் பராமரிக்க வேண்டிய பொறுப்புத்தான் மிஞ்சும்."

"உங்களுடைய ஊனத்தைப் பற்றி நீங்கள் நினைக்கக் கூடாது. அதை நானும் நினைந்து இப்போது பேசவில்லை. எனக்கு உடற்குறை இருந்திருந்தால் நீங்கள் அதைப் பொறுத்துக் கொள்ள மாட்டீர்களா? அல்லது நமக்கு

மணமான பிறகு ஏதும் நேர்ந்திருந்தால் என்ன செய்யப் போகிறோம்?''

''இது தவிர்க்கக் கூடியது.''

''நான் மட்டும் இல்லை. என் வீட்டிலும் எல்லோரும் உன்னை ஏற்றுக் கொள்வார்கள். அது உனக்குத் தெரிந்தால் நீ சம்மதிப்பாய் அல்லவா ?''

''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?''

''நான் நாளைக்கு ஊருக்குப் போகிறேன். ஒரு வாரத்தில் சுந்தர் அங்கே வரப் போகி றான். நீ ஒத்துக் கொண்டால் உன்னையும் அழைத்து வருவான்.''

ஒருவித பயத்தில் அவள் விழிகள் வட் டங்களாயின. முகம் கண்ணாடி போல் ஒரே படியாய்த் தெளிந்தது.

''நீ ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அங்கே வந்து திரும்பிய பிறகு நீ உன் முடிவு எதுவென்று சொன்னாலும் நான் அதை ஒப்புக் கொள்கிறேன்.''

''இதெல்லாம் வேண்டாம். நான் சொல் வதைக் கேட்க மாட்டீர்களா?''

''நீ என்னுவது பிசகு; வா, உட்கார லாம்'' என்று அவள் கையைப் பிடித்து எழுப்பி நிறுத்தினான், காரை நோக்கி அடி யெடுத்து வைத்தபடி.

அவள் மனத் தடுமாற்றம் போலக் கால் களும் தள்ளாடின. அவன் அவளை மெது வாய்த்தாங்கி அழைத்துக்கொண்டு போனான். இந்தத் துணை என்றும் சாசுவதமா? அவ னுக்கு அதில் நன்மை இருக்கலாம். அவளுக்கு? வாழ்நாள் முழுவதும் வீட்டில் ஓர் உதவியும் இன்றி, அவள் காரியத்தை அவளே பார்த் துக் கொண்டு, அதனால் ஏற்பட்ட தனிமை, ஒதுக்கம், இவற்றில் உழன்று கொண்டு....

அவள் கை அவன் கையுள் உயிரற்றுக் கிடந் தது. கன்னங்களில் அருவிகள் படபடத்தன. உடல் வேதனையை ஒதுக்கி விடலாம். ஆனால் எண்ணங்கள் ?

சுந்தர் அவளை அழைத்துக் கொண்டுவந்த போது ரவி ஸ்டேஷனுக்குக் கார் கொண்டு வந்திருந்தான். அவனுடன் அவன் தங்கை ஜானகியும் வந்திருந்தாள். ரயிலிலிருந்து இறங்கியதும் அவள் தோள் மேல் கையைப் போட்டுக் கொண்டாள் ஜானகி, அழைத் துச் செல்வதைப் போல. பரிவினால் இளகிய பார்வை. ஆதரவோடு மென்மையாக இறுகும் கைகள். அவளுக்குச் சௌகரியமான மெது வான குழந்தை நடை.

காரில் வந்து உட்கார்ந்ததும் ஜானகி யைப் பார்த்து ரவி சொன்னான்: ''நீ ஒரு டென்னிஸ் சாம்பியன் என்று உமாவிடம் சொன்னாயோ ?''

''போதுமே, பெருமை!'' என்று கடிந்து கொண்டு விட்டு ஜானகி உமாவின்புறம் திரும் பினாள். 'இந்த அண்ணாவுக்கு ஏன் இதெல் லாம் தெரியவில்லை? என்னுடைய கால்களின் ஓட்டத்தை என்னும் போது உமாவுக்குத் தன் நிலையைப் பற்றி ஓர் ஏக்கம் உண்டா காதா?' என்று எண்ணிக் கொண்டாள். ஆனால் உமா அதைப் பாராட்டிக் கொண்ட



''துரோகி! நன்றி கெட்டவள்! எவ்வளவு புடவை நகைகள் வாங்கிக் கொடுத்திருப்பேன்! கடைசியிலே ஏமாற்றி விட்டாளே! ஒரு வேட்டாவது விழும்; பெட்டி காலியாக இல்லாமல் இருக்குமென்று நம்பி னேன். அதுவும் இல்லாமல் போச்சு! இவளும் ஒரு மனைவியா? சே!''

தாகத் தெரியவில்லை. வீடு வரை காரில் ஒரு குதூகலமான சூழல் நிலவிக் கொண்டே இருந்தது.

வாசலில் கார் நின்றதும், உமா இறங் கினாள், ஜானகியைப் பிடித்தபடி. ரவி தனியே இருந்திருந்தால் அவளுக்குத் தைரியம் கொடுக்கும்படி ஒரு வார்த்தை பேசியிருக்க லாம். ஆனால் சந்தர்ப்பம் அப்படி இல்லை. தன் அன்பு முழுவதையும் பார்வையில் நிறைத்து அவளிடம் அந்த உணர்வின் அடையாளத்தை மட்டுமே காட்ட முடிந் தது அவனால்.

வாசலில் அப்புறம் உமாவைப் பிரியவே இல்லை. கூடத்தில் இருந்த பெரிய ஊஞ்சலின் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு ஏதோ பேசிக் கொண்டேயிருந்தாள். அவள் என்ன கேட்கிறாள்? என்ன பேசுகிறாள் ? அவளையறியாமல் ஏதோ ஒரு சொல்லில் உமா நொந்து போக நேரிடுமோ? அவனுக்கு மனம் நிம்மதியாக இல்லை. ஆனால் அவர்கள் எதிரே அவன் போகவும் முடியவில்லை.

குழந்தைகள் பரிவாரமாக அவளைச் சூழ்ந்து கொண்டன. அவர்கள் ஒவ்வொருவ ருக்கும் ஒரு சமாதானம், திருப்தி செய்ய ஒரு மிட்டாய் அல்லது பொம்மை. இப்படி அவள் சமாளித்ததைப் பார்க்க வேடிக்கையாக இருந் தது உமாவுக்கு.

''இவர்கள் என்னுடைய மூத்த சகோதரி யின் குழந்தைகள். அதோ அந்தப் பையன்— ரொம்ப விஷமம் — அண்ணாவின் பையன். எல் லோரும் விடுமுறைக்கு வந்திருக்கிறார்கள்.''

"மாமா! எங்களை ஊஞ்சலில் வைத்து வீசி வீசி ஆட்டு" என்று நாலைந்து குரல்கள் கேட்டன.

"ஆகட்டும். அப்புறம்—"

"சித்தப்பா வேண்டாம். அந்த மாமியே ஆட்டுவாள்" என்றான் அந்தப் பையன் திடீரென்று.

"இருக்கட்டும். நானே ஆட்டுகிறேன்" என்று அவனை அவசரமாகத் தூக்கிக் கொண்டான் ரவி. ஆனாலும் அந்தச் சிறு நிகழ்ச்சி எழுப்பிய பொறியை அவனால் அணைக்க முடியவில்லை. அவள் கண்களில் தன் கலக்கத்தின் நிழல் தெரிந்ததும் மனம் குழம்பிற்று. நல்ல வேளையாக அது நீடிக்கவில்லை. ஜானகி வந்து அவனை அழைத்துப் போய்விட்டாள்.

ரவியின் தாயார் உமாவைப் பக்கத்தில் உட்கார வைத்துப் பேசிக் கொண்டிருந்தாள். பேச்சில் தவறிக்கூட அவளைப் பற்றிய அந்த விசாரணை இல்லை. ஜாக்கிரதையாக அப்படி நிகழாமல் சமாளித்துக் கொண்டாளோ?

அவளுடைய கூந்தலைப் பிரித்து அவளே அழகாகப் பின்னத் தொடங்கினாள். ஓர் உணர்ச்சி அவள் பேச்சை நிறுத்திற்று. அவ்வளவு வேலைகள் செய்தும் பூப்போன்று மெத்திட்ட அம்மாவின் கைகள். வாழ்க்கையில் அவ்வளவு தூரம் அடிபட்ட பின்னும், சற்றும் அலுப்போ சலிப்போ இல்லாத, பக்குவமான பேச்சும் பண்பும். வாழ்க்கையில் இன்னொரு சோதனையா அம்மாவுக்கு, தன் மூலமாக?

அம்மா என்னவெல்லாம் கற்பனை செய்திருப்பாள்? வீட்டுக்கு அலங்காரமாக மட்டும் தானா மருமகள்? வெண்பட்டுப் போல நரைத்துவிட்ட கூந்தல். உடம்பின் தளர்ச்சியில் தடுமாறும் நடை. அந்த வயதில் அவளுக்கு மருமகளின் சேவையா? அல்லது மருமகளுக்கு அவள் ஊன்றுகோலா?

"உனக்குக் கூடப் பிறந்தவர்கள் எத்தனை பேர்கள்?"

"யாரும் இல்லை, அம்மா!"

"உன் பெற்றோர் எங்கே இருக்கிறார்கள்?"

"அம்மா இல்லை – நான் தனி – அப்பா நாக்பூரில் இருக்கிறார்." அம்மாவுக்கு என்ன தோன்றிற்றோ. முதுகை ஆதரவாய் நீவிக் கொடுத்தார். ஆனால் பேசவில்லை. பேசினால் குரலின் கமறிய அடைப்பில் தன் அநுதாபம் தெரிந்து விடுமோ என்ற நினைப்பாக இருக்கலாம். ஆனால் அந்த விரல்கள் பேசின. அவள் தலையைக் குனிந்து கொண்டாள். இரண்டு அனல் துளிகள் மடியில் விழுந்து பொசிந்தன. அம்மா ஆறுதலாக முதுகில் தட்டினாள்.

"இந்த வீட்டில் மனிதர்களுக்குக் குறைவில்லை உனக்கு."

கையில் சீப்பை வைத்துக் கொண்டு ஏற இறங்க அவளை அன்போடு பார்த்தாள். அங்கு ஆயிரம் கேள்விகள் குழுமின.

சமையலறை வாசலில் நிழலாடிற்று.

"ராதுவா? வா. வா. என்ன உனக்குக் கல்லூரி லீவா இப்போது?"

உமா தலை நிமிர்ந்தாள். அவளைவிட இரண்டு வயது குறைவாக இருக்கலாம் அந்தப் பெண்ணுக்கு. நடையில் ஒரு லாகவம். மேனியில் இளமை மினுமினுப்பு. தகதகவென்று நிறம். சிற்றலையாகப் பூத்துக் கிடந்த கூந்தல். பார்வையில் ஒரு குளிர்ச்சி.

"நேற்றுத்தான் வந்தேன். இன்றைக்கு உங்களைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. போன தடவை என்னைப் பிடித்து உட்கார வைத்துக் காலில் மருதோன்றி இட்டீர்களே!"

இறக்கை அடங்கும் பறவையாய், அவள் இளஇளவென்று மென்மை தவழும் பாதம் தெரிய, காலை மடித்து உட்கார்ந்தாள்.

"இவள்தான் ராது. எனக்கு ஒரு முறையில் உறவும்கூட. சென்னையில் கல்லூரியில் படிக்கிறாள்...... இவள் உமா. ரவிக்குப் பழக்கமான குடும்பத்துப் பெண். ஜானகி உன்னிடம் சொல்லியிருப்பாளே?"

அந்தக் கண்ணில் சட்டென்று இரக்கம் ததும்பிற்று. ஆனால் உடனே அதை மறைத்துக் கொண்டாள். அம்மா கையை ஊன்றி எழுந்திருந்தாள். "கொஞ்சம் பேசிக்கொண்டிரு. நான் உள்ளே போய்—"

"எனக்குக் காப்பி போட வேண்டாம். வேண்டுமானால் நானே போய்ப் போட்டுக் கொள்வேன்."

அந்த சுவாதீனமும் துறுதுறுவென்ற சுபாவமும்? அம்மா அப்படியும் எழுந்து உள்ளே போய் விட்டாள். இருந்தும் அவர்கள் இருவரையும் உமா மனத்தில் கற்பனையில் இணைத்துப் பாராமல் இருக்க முடியவில்லை.

காலில் மருதோன்றியும், கன்னத்தில் நாணச் செம்மையுமாக, முழந்தாளிட்டு உட்கார்ந்திருக்கும் ராது குருத்து இளமையாய், வடிவமாய் அமைந்த உருவத்தின் எடுப்போடு, தரையில் அழுந்திய பாதங்கள். அம்மா அதைப் பற்றிக் கொண்டு, அந்த இளமையையே வழிபடுவது போல, மனத்தில் எத்தனையோ கற்பனைகளோடு மருதோன்றி இடும் காட்சி.

ராது என்னென்னவோ பேசிக் கொண்டிருந்தாள். புருபுருவென்று ஓர் இயக்கம் எதிலுமே. சிற்றெறும்பின் சுறுசுறுப்பு. தன்னுடைய நிலைப்புக்கும் அமைதிக்கும் பக்கத்தில் அது எடுப்பாய்த் தெரிந்தது.

கடைசியில் குங்குமம் வாங்கிக் கொண்டு எழுந்துவிட்டாள். உமாவின் அருகே குனிந்து, "வரட்டுமா? பிறகு பார்க்கலாம்" என்றாள்.

"நான் நாளைக்குத் திரும்புகிறேன்."

"அப்போது இந்தச் சமயத்திலேயே சொல்லிவிட வேண்டியதுதான்" என்று வலது கையை நீட்டினாள் ராது. "கங்கிராஜுலேஷன்ஸ், உமா!"

அந்தக் குரலில் ஓர் இலேசான பொருமல். கண்கள்தாம் பேசின. வாய் திறந்து சொல்லி இருந்தால் என்ன சொல்லி இருப்பாள்? "ரவியைப் போல ஒரு வாலிபர் கணவனாகக் கிடைக்க, அம்மாவைப் போல ஒரு மாது மாமியாக வந்து சேர, நீ ரொம்பப் பாக்கியம் செய்திருக்க வேண்டும் உமா! என்ன ஆனால்

நான் என்ன? நீ என்னைவிட அதிர்ஷ்டசாலி'' என்று சொல்லி சிரிப்பாளோ ?

இளங்காலைப் பொழுது. ரவி, சுந்தர், ஞானவி மூவருமே காரை எடுத்துக் கொண்டு டென்னிஸ் ஆடப் போய்விட்டுத் திரும்பி னார்கள். குளித்துவிட்டு, ஈரக் கூந்தல் காய வேடு கட்டின தலையோடு உட்கார்ந்திருந் தாள் உமா. அவள் நிறத்துக்கும் பளபளப் புக்கும் தூய வெண்ணிறத்தில் அந்த உடை பளிச்சென்று ஓர் எடுப்பாக இருந்தது.

மற்ற இருவரும் பின்னால் வர, ஒரு குதிப் போடு முன்னால் ஓடி வந்தான் ஞானவி. நேரே ஓடி வந்து சோபாவின் கைமேல் உட்கார்ந்து கொண்டான். கை உமாவின் கழுத்தை அணைத்துக் கொண்டது.

''மன்னிக்கு வெண்ணிற உடுப்பு எப்படி இருக்கிறது பார்த்தாயா அண்ணா? டென்னிஸ் உடை போட்டுக் கொண்டாளானாலும் நீ கண்ணை அவளிடமிருந்து எடுக்க மாட்டாய். ஆட்டமும் ஆட மாட்டாய்.''

'மன்னிக்கு' என்ற சொல்லின் அதிர்ச்சியில் மகிழ்ச்சியும் வியப்புமாகக் குழம்பிய உமா வின் முகம் அடுத்த சில வார்த்தைகளில் சட்டென்று ஒளி மங்கிற்று. ஞானவி, குழந்தை சுபாவமாய், தன்னை மறந்த மகிழ்ச்சியில் பேசுகிறான். அது கட்டுப்பாடில் லாமல் பொங்கும் உணர்ச்சி. இருளின் அடி யெடுத்து வைப்பது போல, வார்த்தைக்கு வார்த்தை பொருள் தேடிக் கொண்டு பேச முடியாதுதான்.

சுந்தர் அதைக் கவனிக்காதது போல உள்ளே போய்விட்டான். ரவியின் கண்கள் அவள் முகத்தைத் தேடின. அவளுக்குக் கவச மாய் நின்று அவளுடைய மென்மையான உணர்ச்சிகளை ஒவ்வொரு கணமும் பாது காக்க முற்படும் அவன் தவிப்பு தெரிந்தது அந்தப் பார்வையில். பரிதாபமாக இருந்தது அவளுக்கு.

உமாவும் சுந்தரும் ஊருக்குப் போய்விட் டார்கள். விடைபெற்றுப் போகும் போது அவள் முகமலர்ச்சியும் அமைதியான புன் னகையும் அவனுக்கு ஆறுதலைத் தந்தன. மறு வாரம் அவள் சென்னைக்குப் போவாள். அவளோடு பேசி முடிவு செய்து கொண் டால், அந்த விடுமுறையையே இன்னும் ஒரு மாதம் நீட்டி, திருமணத்தையும் முடித்துக் கொள்ள வேண்டியதுதான்.

போய் இரண்டு நாட்களாகியும் சுந்தரிட மிருந்து கடிதம் இல்லை. அந்த எதிர்பார்ப் பின் விறுவிறுப்பு அவனால் தாங்கக் கூடியதாக இல்லை. அன்று கடிதம் வராவிட்டால், அவன் ஒரு புகார்க் கடிதம் எழுதுவதாக இருந்தான்.

மணி ஒன்பதடித்தாயிற்று. வாயிற்படி ஏறிய தபால்காரர் கைப்பிடியில் சீட்டு களின் விரிதலைப் பார்ப்பது போல, கடிதங் களைப் புரட்டித் தேடி அவனிடம் அந்தக் கவரைக் கொடுத்துச் சென்றார்.

நீல நிற உறை. முத்து முத்தான எழுத் துக்கள். மேலே அவன் பெயரில் விலாசம். அந்த எழுத்து அவனுக்குப் பழக்கமானது அல்ல. ஆனால் அது உமாவிடமிருந்துதான் வந்திருக்க வேண்டும் என்று அவன் மனத் தில் ஏதோ சொல்லிற்று. அறைக்குள் போய்க் கதவைத் தாளிட்டுக் கொண்டு அமர்ந்து, உறையைக் கிழித்துக் கடிதத்தை எடுத்தான்.





''நண்பருக்கு,

உங்களை நான் இவ்விதமாய் அழைப்பது ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் வேறு எப்படி அழைக்க என்னால் முடியும்?

இந்த இரு வாரங்களில் என் வாழ்க்கையில் நான் இதுவரை கண்டிராத ஓர் உன்னத உணர்ச்சியின் அலை மோதுதலில் திளைத்துக் கொண்டிருந்தேன். அந்த அநுபவத்தை என்னால் சொல்ல முடியாது. இங்கே எழுத்திலும்கூட முழுமையாகக் காட்ட முடியாது. அதற்கு நான் உங்களைத் தவிர, வேறு யாரிடம் நன்றி தெரிவிக்க முடியும்?

நன்றி தெரிவிப்பது மட்டுமல்ல. உங்கள் வாழ்க்கை — எதிர்காலம் — நீங்காத பசுமையுடன் விளங்க வேண்டும் என்று மனமார வாழ்த்துகிறேன். உங்கள் தாம்பத்திய வாழ்க்கையை என்னைப்போன்ற ஒரு துரதிர்ஷ்டசாலியுடன் இணைத்துக் கொண்டிட மறுபடியும் நினைக்காதீர்கள். குழந்தைகளோடு விளையாட ஒரு மாமி; அம்மாவுக்கு ஆதரவாகச் சேவை செய்ய ஒரு மகள்; உங்கள் கலகலப்புக்கும் ஓடியாடும் ஆர்வத்துக்கும் பொருத்தமான ஒரு மனைவி. கட்டாயம் உங்களுக்கு இப்படி ஒரு பெண் கிடைப்பாள். ஏன்? காத்துக் கொண்டிருப்பதையும் நீங்கள் அறிய மாட்டீர்களா?

என்னிடம்தான் உங்கள் உணர்ச்சியை எவ்வளவு பக்குவமாகக் காட்டி னீர்கள். ஒரு சிறு நிகழ்ச்சியிலும், தவறி உதிர்ந்த பேச்சிலும், அநுதாபமான பழக்கத்திலும்கூட என் மனம் வேதனைப்படக்கூடாதென்று! ஆனால் என்றென் றும் என்னை இப்படிக் கண்ணை இமையாய் உறுத்தலின்றிப் போற்றி வைக்க உங்களால் முடியுமா? அந்த ஆயுள் தண்டனைக்கு உங்களை ஆளாக்க என் மனம் இடம் கொடுக்கவில்லை.

நான் நாளைக்கு நாக்பூருக்குத் திரும்புகிறேன். உங்கள் உயர்ந்த பண்பை என்றும் மறக்க மாட்டேன். பதிலுக்கு உங்களை நான் கேட்டுக் கொள்வது இது தான். என்னை மறந்து விடுங்கள். மறுபடியும் என்னைப் பற்றி நீங்கள் யாரிடமும் எதுவும் பேசக் கூடாது. அதுவே எனக்குப் பெரிய ஆறுதலாக இருக்கும்.''

உமா.

பெருமூச்செறிந்தபடி ரவி கடிதத்தை மடித்தான். கண்ணின் நீர்ப் பரப்பில் உறை மேல் தெரிந்த எழுத்துக்கள் ஒளிமிழந்து, மறைந்து கொண்டிருந்தன.

உங்களுடைய
விருந்தாளிகளைச்
சுலபமாக மகிழ்வூட்டலாம்



சுதா வனஸ்பதியால்

தயாரிக்கப்பட்ட தின்பண்டங்களைப் பரிமாறும்போது

சுதாவினால் தயாரான பட்சணங்களையும் உணவையும் பரிமாறினால் விருந்தினர் மகிழ்வர்.


ருசியைக் கொடுக்கிறது சுதா வனஸ்பதி.

மேலும் சுதாவைக் கொண்டு தயாரிப்பதும் எளிது.



சுதா
வனஸ்பதி

A KERALA GOVERNMENT PRODUCT



கேரளா சோப்ஸ் & ஆயில்ஸ் லிமிடெட்


ஹைட்ரோஜனேஷன் பாக்டரி டிவிஷன்

கள்ளிக்கோட்டை — 5 (கேரளா)

கால் அரிப்பு சரும அரிப்பு

அரிப்பு, எரிச்சல் முதலிய உபாதைகளை உங்களால் தாங்க முடியாமல் பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறதா? உங்கள் சருமத்தில் வெடிப்புகள் தோன்றி தோல் உரிந்து ரத்தம் கசிகிறதா? பாதங்களிலும் கால் விரல்களுக்கிடையிலும் புண்கள் தோன்றி உபத்திரவம் செய்கின்றனவா? இவைகள் வெடித்துக்கசிந்து மேலும் புண்களை உண்டாக்குகின்றனவா? இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் சிங்கப்பூர் சொறி, வண்ணாரப்படை, என்று பல பெயர்களில் வழங்கப்படும் ஒருவகைக் கிருமி. மூலகாரணமான இந்தக் கிருமிகளை அழிக்கும்வரை இவ்வுபாதைகளிலிருந்து நிவாரணமடையமுடியாது. விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட நிக்ஸோடெர்ம் (Nixoderm) முதல் தடவை போட்டவுடனேயே அரிப்பை நிறுத்தி கிருமிகளைக் கொன்று சருமத்தின் புண்ணை ஆற்றி மிருதுவாக்கி சுத்தப்படுத்த ஆரம்பிக்கிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) அரிப்பை நிறுத்துவதில் வெற்றி கண்டுள்ளது. மேலும் பாதத்தின் மேலிருக்கும் புண்கள் மேலாகப் பரவும் படை, முகப் பருக்கள் கட்டிகள் முகத்திலோ அல்லது தேகத்திலோ பரவிய படர் தாமரை முதலிய உபாதைகளைக் குணமாக்குகிறது. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். பூரண திருப்தியை அது நிச்சயமாக அளிக்கும்.

ஹேடன்ஸா



மூல நோய்க்கு

எங்கும் கிடைக்கும்

DZ-962A TAM



ஒரு தலை ஒரு வழி

இருள் நீக்கி கணேசன்



கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆகப் போகிறது சார்! ஆபீஸ் விட்டு நான் வருவது. என் பாட்டுக்கு என் அறைக்குள் போய் உடை மாற்றிக் கொள்வது. துண்டையும், சோப்புப் பெட்டியையும் எடுத்துக் கொண்டு குளியலறைக்குச் சென்று, முகம் கழுவித் திரும்பி வந்து அறையில் உட்கார்ந்து ஒரு கனைப்புக் கொடுத்தால் உள்ளே நடக்கும் சண்டை சிறிது கம்பிக்கும். அதுவரை 'யார் எக்கேடு கெட்டுப் போனால் என்ன?' என்கிற மாதிரி பாவனைதான். வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி வாங்கி முன் அறையில் வைத்திருக்கிற ரேடியோவை எவனாவது மூன்றாவது மனுஷன் வந்து எடுத்துக் கொண்டு போனால்கூடக் கேட்க நாதியில்லை என் வீட்டில். அவ்வளவு மும்முரம் சண்டையில்!

என்ன சண்டையோ சார்! என் கனைப்புச் சத்தம் கேட்டு, மூக்கைச் சிந்திக் கொண்டோ, புடவைத் தலைப்பை வாயில் அடைத்துக் கொண்டோ அம்மா வெளியேறி விடுவாள். 'இவளோ' மூஞ்சியைப் பறங்கிக் காய் மாதிரி வைத்துக் கொண்டு, தொண்டை அடைக்க, ''வாங்கோ! இப்பத்தான் ஆபீஸ் லேந்து வரேளா? இதோ நிமிஷமா காப்பி கலந்துண்டு வரேன்!'' என்று சொல்லிக் கொண்டே உள் வாங்கி விடுவாள். பிறகு ஐந்து நிமிடங்களுக்குப் பித்தளை 'டம்ள'ரின் சத்தத்தை மீறிக் கொண்டு 'இவ ளு'டைய விசும்பல்தான் கேட்கும். பிறகு ஏதோ ஓர் அவலாய்ப் போன ஆறிப்போன பலகாரத்தையும், காப்பித் தண்ணியையும் கொண்டு கொடுத்துவிட்டுச் சோப்புப் பெட்டியை எடுத்துக்கொண்டு குளியல் அறைக்குள் போய்விடுவாள். நானும் சட்டையை மாட்டிக் கொண்டு வெளியில் கிளம்பத் தயாராகும் சமயம் குளியல் அறையிலிருந்து குரல் வரும்: 'ராத்திரி சீக்கிரம் வந்துடுங்கோ!'

ஊக்கும்... சீக்கிரம் வரேன்... என்னுக்க இங்கே ஆசையும் அன்பும் வழிந்து ஓடுறதே!... வீட்டையே சுற்றிச் சுற்றிக்கொண்டிருக்க...

என்ன போங்கோ சார்! ஒரே 'மெகாலிகல் லைப்'.

காலார இப்படிப் போய்விட்டு ஒரு ஒன்பது மணி சுமாருக்குத்தான் வருவேன்.

'என்ன சார்?' அம்மாவைப் பற்றிக் கேட்கிறேளா? அவள் சாயங்காலம் போகிறவள்தான். அல்லூருக்குப் போய் வீட்டுச் சண்டையை விமரிசித்துவிட்டு, கோவிலுக்குப் போய்க் கடவுளிடம் முறை விட்டு விட்டு எட்டு மணி சுமாருக்கு வீட்டுக்கு வந்து விடுவாள். அநேகமாக நான் வருகிறபோது அவள் குறட்டை ஒலிதான் வரவேற்கும்.

பிறகு சாப்பிட்டு விட்டுப் படுத்தால் பால் எடுத்துக் கொண்டு மனைவி வருவதற்குச் சரியாக இருக்கும். சண்டைப் புராணத்தின் அன்றையப் படலத்தைப் பிரவசனம் செய்வாள். நானும் கேட்டுக் கொண்டே தூங்கி விடுவேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

'என்ன இவ்வளவு விட்டேற்றியாக இருக்கிறேனே?' என்று நினைக்கிறீர்களா? என்ன சார் செய்வது? நானும் ஆரம்ப நாட்களில் தனித் தனியா இரண்டுபேருக்கும் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டு முடியாமல்தான் சார் விட்டு விட்டேன்! ஆனாலும் என்னைப் பொறுத்தவரையில் நடுநிலைமை தான். பெண்டாட்டி தாசன் என்றோ, அம்மா பிள்ளை என்றோ இதுவரையிலும் பெயர் வாங்கவில்லை. இருந்தாலும் பிரச்னை தீரவில்லையே! அட! உண்ணாவிரதம் எல்லாம் இருந்து பார்த்து விட்டேன் சார்! ஊஹூம்... பிரயோசனமில்லை.

ஆமாம்! உண்ணாவிரதம் என்று சொல்லும் பொழுது அவர்கள் சண்டையின் 'சப்ஜெக்ட்' ஞாபகம் வருகிறது. என்ன சண்டை? ஒன்றுமில்லாதற்கெல்லாம் சண்டை. அதிலும், முக்கியமாக எனக்கு என்ன பிடிக்கும் என்பதற்குத் தான்.

ஓர் உதாரணம் கேளுங்கள் சார்! ஒருநாள் என் அம்மா 'இவளை'ப் பார்த்து, 'அடி சரோஜி! இன்னிக்கு வெங்காய

மெல்லாம் போட்டு ஜோரா அடை தட்டுடி. அம்பிக்கு ரொம்பப் பிடிக்கும்' என்றுளாம்.

இவள் 'ஐயோ! அவருக்கு அடையே பிடிக்காது! அதுவும் வெங்காயம்னு மூக்கைப் பிடிச்சுண்டு ஓட்டமாய் ஓடிப் போயிடுவார்' என்றுளாம்.

'உனக்கு ரொம்பத் தெரியுமோ?' 'உங்களுக்கு ரொம்பத் தெரியுமோ?' என்று ஆரம்பித்த சண்டைதான் சார்!

என் அம்மா என்னைப் பெற்று வளர்த்த தன் பெருமையை அளக்க, இவள் 'என்னிக்கோ பெற்று எப்பவோ வளர்த்தால் சரியாய்ப் போச்சா?' என இனி எனக்கு எல்லாம் அவளே என்ற உரிமைப் பிரச்னையை எழுப்ப, ஒரே ரகளைதான் போங்கள். நான் என்னமோ அன்று 'கணேஷ் பவன்' ஹோட்டலில் தான் டிபன் சாப்பிட்டேன்.

இது மாதிரிதான் சார்! அல்ப விஷயத்துக்கெல்லாம் மல்லுக்கு நின்று கொண்டு மனுஷன் பிராணனை வாங்குகிறார்கள்.

சரியாப் போச்சு! தனிக் குடித்தனம் வைக்கலாமென்கிறீர்களா? மூச்! வழியில்லை சார்! அம்மாவைக் கிராமத்தில் இருக்கச் சொல்லலாமென்றால் கதைகளில் வருகிற மாதிரி கிராமத்தில் ஒரு பழைய வீடும், இரண்டு காணி நிலமும் இல்லை சார்! இருந்தால் வயிற்றுப் பிழைப்புக்காக இங்கே, இந்த ஹனுமான்பட்டி சந்திக் கரைக்கு வரவேண்டுமென்பதில்லையே! நினைவு தெரிந்த காலமாக அம்மா என் கூடவேதான் இருக்கிறாள். அப்பா போனப்புறம் எனக்காக எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாள் சார்! எப்படி சார் அவளைத் தள்ளாத காலத்தில் தனியாக விடுவது?

இன்றைக்கு எப்படியும் இதற்கு ஒரு முடிவு கட்டி விடுவதென்று ஆபீஸிலிருந்து வரும் பொழுதே தீர்மானமாகத்தான் வந்தேன். முகம் கழுவிக் கொண்டு வந்து நாற்காலியில் உட்கார்ந்தேன். உள்ளே நடக்கும் சண்டையைக் கேட்டுக் கொண்டே மேஜைமேல் கிடந்த பென்சிலை எடுத்தேன், ஏதாவது எழுதலாமென்று. பென்சிலில் கூர் இல்லை. 'பிளேடை' எடுத்துப் பென்சிலைச் சீவலானேன்.

'ஐயோ!' — என்னையும் அறியாமல் கத்தி விட்டேன். பிளேடு விரலைப் பதம் பார்த்து விட்டது. சத்தத்தைக் கேட்டு ஓடிவந்த அம்மாவும், அவளும் ரத்தத்தைப் பார்த்துட்டு....அப்பா... எப்படிப் பதைத்துவிட்டனர்! 'என்னடா அம்பி? என்னடா அம்பி?' — அம்மா கதறிக் கொண்டு, 'அடி சரோஜி! ஓடுடீ! துணி, சைபால் எல்லாம்கொண்டாடி!' என்று கத்த, 'இதோ அம்மா!' என்று இவள் ஓட.... ஏக அமர்க்களம்.

'ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை!' என்று நான் எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் அம்மா என் கையைத்— தாங்கிப் பிடிக்க, மனைவி என் கையை அலம்பி, மருந்து போட்டு, கட்டுக் கட்டி... பாகாய்த்தான் உருகி விட்டனர்.

ஆஹா! அப்பதான் சார் ஓர் ஐடியா தோணித்து! வலியை மறந்து பேசினேன்; 'அம்மா! சரோஜி! இந்தச் சின்னக் காயம் எனக்குப் பட்டதுக்கே இப்படிப் பதறிப் போயிட்டேளே இரண்டு பேரும்! இரண்டு பேருக்குமே ஒரு மாற்றுக் குறைவில்லாமல் என்மேல் அன்பு இருக்கிறதனால்தானே! ஆனால் அம்மா! இதைவிட எனக்கு மனசிலே ஒரு பெரிய காயம் பட்டிருக்கே அது தெரியலையே? நீங்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் ஒவ்வொரு வார்த்தையும் என் நெஞ்சில் ஓர் அடியாக விழுந்து உதிரம் கசிகிறதே, அது ஏம்மா தெரியவில்லை?' அப்படின்னு சொன்னதுதான் தாமதம். 'இனிமே அவளோடே சண்டை போட மாட்டேன்டா அம்பி!' என்று அம்மா கண்ணீர் விட, 'மன்னிச்சுடுங்கோ!' என்று இவள் எனக்கும் அம்மாவுக்கும் நமஸ்காரம் பண்ணினதையும் பார்க்கிறபோது எனக்கும் கண்ணில் நீர் வந்துவிட்டது சார்!

விருந்து கொடுத்தவர்...?



முன்பு அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ட்ருமன் ஒரு நாள் தம் நண்பர் ஒருவருடன் மீன் பிடிக்கச் சென்றிருந்தார். அவர்களுள் ஒரு போட்டி உண்டாயிற்று: ''யாருடைய தூண்டிலில் முதலில் மீன் சிக்குகிறதோ, அவர் மற்றவருக்கு விருந்து வைக்க வேண்டும்'' என்பதுதான் அந்தப் போட்டி.

ட்ருமன் ஒரு கூட்டத்தில் பேசியபோது, இவ்விஷயத்தைப் பற்றிக் கூறினார்.

''என் நண்பன் மிகவும் சுயநலக்காரன். தூண்டிலில் மீன் சிக்கிவிடக் கூடாது என்பதற்காக அடிக்கடி உதறி விட்டுக்கொண்டிருந்தான்!'' என்று அவர் கூறியபோது கூட்டத்திலிருந்து ஒரு நபர் குறுக்கிட்டு, ''அப்பொழுது நீங்கள்தான் உங்கள் நண்பருக்கு விருந்து வைத்தீர்களாக்கும்!'' என்று கேட்டார்.

''நான் ஏன் வைக்கிறேன்? நான்தான் தூண்டிலில் மீனுக்கு வேண்டிய உணவே வைக்கவில்லையே!'' என்று பதில் கூறினார் ட்ருமன்.

—எஸ். கிருஷ்ணமோகன்


ஹாய்யாகப்
பருகுவீர்
ஆனந்தமான
ஒரு பானம்!
கோல்ட்
ஸ்பாட்
GOLD
SPOT

அத்தியாயம் 30

வெண்பனிச் சிகரங்களைப் பற்றிக் காப்டன் குமரன் கூறிய வார்த்தைகள் அப்போது அகிலாவின் நினைவில் சுழன்று கொண்டிருந்தன. லட்சியத் தனிமையின் பனிப் போர்வையுடன் அவை புனிதத் தவம் புரிவதற்கு வேண்டிய சூழ்நிலை மீண்டும் உருவாகி விட்டது. அவற்றின் ஏகாந்தத்தைக் குலைக்கத் தோன்றிய போர் ஒரு வழியாக ஓய்ந்து விட்டது. இப்போது நிலவும் அமைதி இப்படியே என்றும் நீடித்திருக்கும் என்று எதிர்பார்க்கலாமா ?

அந்தப் பனிச் சிகரங்களுக்கு அப்பால் வேறு எதிரிகளின் நடமாட்டம் இன்னும் இருந்து கொண்டுதான் இருந்தது. ஆனால் அங்கு எத்தவிதமான அமைதிக் குலைவும் ஏற்பட விடாமல் பாரத வீரர்கள் எப்போதும் விழிப்புடன் இருந்தனர். அந்த வீரர்களின் பாதுகாப்பில் இனி நிம்மதியாயிருக்கலாம் என்ற உறுதியுடன் கம்பீரமாக நிமிர்ந்து நின்ற இமயச் சிகரங்களைக் கண்டு அகிலாவின் உள்ளம் பெருமையால் பூரித்தது.


அந்த உன்னத இமயத்தைப் போலவே தன் இதயத்தில் இடம் பெற்றுவிட்ட குமரனை நினைத்து அவள் நெஞ்சம் நெகிழ்ந்தது. குமரன் அங்கு தங்கியிருந்த தெல்லாம் இரண்டே வாரங்கள்தான். அங்கு சிகிச்சைக்குக் கொண்டு வரப்பட்ட எத்தனையோ வீரர்களில் ஒருவனாகத்தான் அகிலா ஆரம்பத்தில் அவனைக் கருதினாள். மற்றெல்லோரிடமும் காட்டிய பரிவைத் தான் அவனிடமும் காட்டியதாக நினைத்தாள். அப்படியிருந்தும் அவளை அறியாமலே அவனிடம் அப்படிப்பட்ட பாசம் எப்படி உருவாயிற்று? அவன் அங்கிருந்து சென்று விடாமல் அங்கேயே அவனுடைய கவனிப்பிலேயே, எப்போதும் இருந்து விடக் கூடாதா என்ற அர்த்தமற்ற எண்ணம் ஏன் தோன்ற ஆரம்பித்தது? கடைசியில் அவன் கமாண்டருடைய கட்டளையை ஏற்று அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற போது பொங்கியெழுந்த கண்ணீரை அவளால் அடக்கவே முடியவில்லையே! அன்று முழுதும், ஏன் அதைத் தொடர்ந்து பல நாட்கள், அந்தப் பிரிவை நினைத்து அவள் நெஞ்சம் அப்படி வேதனைப்படுவானேன் ?

அதையெல்லாம் இப்போது நினைத்துப் பார்த்தபோது அகிலாவுக்குச் சிரிப்புக்கூட வந்தது. சாதாரணமாக அந்த மாதிரி நெகிழ்ச்சிகளுக்கெல்லாம் அகிலா என்றுமே தன் மனத்தில் இடம் கொடுத்தவளல்ல. மருத்துவக் கல்லூரியில் படித்து வந்த நாட்களில் மற்ற மாணவர்களுடன் அவள் எவ்வளவோ சகஜமாகப் பழகியிருக்கிறாள். விரும்பத் தக்க அம்சங்கள்



யாரிடமாவது இருந்தால் மனம் விட்டுப் பாராட்டவும் அவள் தயங்கியதில்லை. ஆனால் இதுவரையில் யாரும் குமரனைப் போல் இவ்வளவு தீவிரமாக அவள் மனத்தில் இடம் பெற்றுவிடவில்லையே!

குமரன் அங்கிருந்து சென்று எவ்வளவு நாட்களாகி விட்டன! ஆனால் ஒரு நாள்கூட அகிலா குமரனை நினைக்கத் தவறியதில்லை. அன்றாடக் கடமைகளில் அவள் கருத்தாயிருக்கும் நேரம் தவிர மற்ற நேரங்களில் ஏதாவது சாக்கிட்டுக் குமரனின் நினைவு அவளுக்கு வந்து விடும். அப்புறம் அன்று முழுதும் அந்த நினைவிலிருந்து



விடுபட முடியாமல் அவள் உள்ளம் அதைச் சுற்றியே வட்டமிட்டுக்கொண்டிருக்கும். அவ்வளவு தூரம் அவள் மனத்தை ஆக்கிரமித்துக் கொள்ளும் படியாகக் குமரனிடம் மட்டும் அப்படி என்ன விசேஷத் தன்மை இருந்தது என்று புத்திபூர்வமாக ஆராயத் தோன்றியது அகிலாவுக்கு.

குமரனின் ஸ்படிகம் போன்ற நேர்மை மட்டும்தான் அதற்குக் காரணமா? அதற்கு மேலும் ஏதோ ஒன்று இருப்பது போல் தோன்ற வில்லையா? தன் தனிமை உணர்ச்சியைப் பற்றிக் குமரன் கூறியதை அவள் எண்ணிப் பார்த்துக் கொண்டாள். ஆனால் அது வாழ்க்கைச் சூழ்நிலைகளால் ஏற்பட்ட தனிமை உணர்ச்சி மட்டுமல்ல, ஏதோ ஒரு சோக உணர்வும் கலந்திருந்ததால் தான் அதற்கு ஒரு தனிக் கவர்ச்சி ஏற்பட்டிருந்ததென்று இப்போது அவளால் புரிந்துகொள்ள முடிந்தது. அந்தச் சோகத்தை அவளால் மாற்ற முடிந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?

''அகிலா.... அகிலா....'' என்று அழைத்துக் கொண்டே அங்கு வந்தார் மேஜர் ரகுநாத்.

''என்ன அப்பா?''

''இன்றையத் தபாலில் ஒரு முக்கியமான கடிதம் வந்திருக்கிறது, காப்டன் குமரனிடமிருந்து'' என்று தந்தை கூறியதும் அகிலாவின் உள்ளம் துள்ளியது.

''என்ன எழுதியிருக்கிறார், அப்பா?'' என்று கேட்டாள் ஆவலுடன்.

''நீயே படித்துப் பாரேன்'' என்று கடிதத்தை அவளிடம் கொடுத்த ரகுநாத், அங்கிருந்த நாற்காலியொன்றில் உட்கார்ந்து கொண்டார். அகிலாவும் ஒரு நாற்காலியில் அமர்ந்து பரபரப்பு நிறைந்த உற்சாகத்துடன் கடிதத்தை அவசரம் அவசரமாகப் படித்தாள். அங்கிருந்து சென்ற பிறகு அத்தனை நாட்களில் தனக்கு ஏற்பட்ட அநுபவங்களைச் சுருக்கமாக விவரித்திருந்த குமரன், தன்னுடைய சகோதரனுக்கு ஒப்பான உயிர் நண்பனைப் பறி கொடுத்த துக்கத்தைப் பற்றி உள்ளம் உருக எழுதியிருந்ததைப் படித்த போது அகிலாவின் கண்கள் கலங்கின. அவை தெளிவு பெறும் வரை கண்களைக் கடிதத்திலிருந்து அகற்றிச் சில விநாடிகள் வெறுமை நோக்குடன் எதிரே பார்த்துக் கொண்டிருந்தாள். பின்பு கடிதத்தில் பார்வையைப் பதித்து மேலே படிக்க ஆரம்பித்தாள். கடிதத்தின் பிற்பகுதி குமரனின் வருங்காலத் திட்டம் பற்றியதாயிருந்தது. குமரன் எழுதியிருந்தான்.

''போர் நடவடிக்கைகள் இல்லாத நிலையில் எஞ்சினீயர்களுக்கு ராணுவத்தில் அதிக வேலையில்லை. எனவே, எஞ்சினீயரிங் பகுதியில் நிரந்தரமாயிருப்பவர்களைத் தவிர என்னைப்போல் தாற்காலிகமாகச் சேர்ந்தவர்களுக்கு ஓய்வு கொடுத்து அனுப்பத் தீர்மானித்து விட்டார்கள். அத்தகைய விடுதலை உத்தரவு எனக்கும் கிடைத்து விட்டது. நான் சீக்கிரமே சென்னைக்குத் திரும்பி எங்கள் இலாகாவில் மீண்டும் நியமனம் பெற முயற்சி செய்தாக வேண்டும். புதிதாக நியமனம் பெறுவது கஷ்டமாயிராது என்றாலும் மனத்துக்குப் பிடித்த இடமாக அமைவதற்குத்தான் முயற்சி தேவை.

''தங்கள் ஆஸ்பத்திரியில் தாங்களும் தங்கள் குமாரியும் என்னிடம் காட்டிய அன்பையும் பரிவையும் நான் என்றுமே மறக்க முடியாது. இதை நான் வெறும் உபசாரத்துக்காகச் சொல்ல வில்லை. சொந்த பந்தங்கள் இல்லாத நான் மனப்பூர்வமான சொந்த உரிமையை உங்கள் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்த சில நாட்களிலேயே உணர முடிந்தது. அப்படிப்பட்ட ஒரு பாசத்தை என்னிடம் காட்டிய உங்கள் இருவரையும் ஒரு தரமாவது பார்க்காமல் சென்னைக்குத் திரும்பிவிட என் மனம் சம்மதிக்குமா? கூடிய சீக்கிரமே அங்கு வருவேன். எப்போது வருவேன் என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. வாகன வசதி கிடைப்பதைப் பொறுத்திருக்கிறது. 'ஜீப்'போ 'லாரி'யோ எது கிடைத்தாலும் அதில் தொற்றிக் கொண்டு அங்கே வந்து சேர்ந்து விடுவேன்......''

கடிதத்தின் கடைசி வாக்கியங்களை அகிலா படித்து முடிக்கக்கூட இல்லை. வாசலில் ஜீப் வந்து நிற்கும் சத்தம் கேட்டதும் அவள் பரபரப்புடன் எட்டிப் பார்த்தாள். குமரன்தான் ஜீப்பிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தான்.

''அப்பா....அவர் வந்து விட்டார்!'' என்று கூவினாள் அகிலா.

அடுத்த சில விநாடிகளுக்குள் வேகமாக மாடிப் படியேறி வந்த குமரன் அவ்விருவருக்கும் கரம் கூப்பியவாறு அவர்களருகே வந்தான். மேஜர் ரகுநாத் சட்டென்று எழுந்து இரண்டடி முன் சென்று அவனை அன்புடன் அணைத்தபடியே அவனை நாற்காலியில் அமரச் செய்தார்.

''உங்கள் கடிதத்தை இப்போது தான் படித்துக் கொண்டிருந்தேன். அதற்குள் நீங்களும் வந்து விட்டீர்

சலவைக்கு சலவை...

துணிகளுக்கு அதிக ஒளியூட்டுவது

மேம்பாடடைந்த, புதிய ஸன்லைட்



மேம்பாடடைந்த, புதிய ஸன்லைட்! ஒரு முறை வெள்ளோட்டம் பார்த்தீர்களானால் வெட்டவெளிச்சமாகத் தெரியும் அதன் மேன்மை! உண்மை. சலவைக்கு சலவை உங்கள் துணிகளுக்கு அதிக ஒளி.

சிறிதே தேய்த்தாலும் செழுசெழுவென்று கொழிக்கும் நுரை...தூய்மை ஓங்க வெளுத்து, ஒளி நிரக்க உதவும்! துணிகள் அனைத்துக்கும் உபயோகியுங்கள்: மேம்பாடடைந்த புதிய ஸன்லைட் சோப்.

உங்கள் அன்றாடத் துணிகளின் சலவைக்குரியது
மேம்பாடடைந்த, புதிய ஸன்லைட்

லின்டாஸ்-S. 59-140 TM

ந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

களே!'' என்றாள் மகிழ்ச்சி ததும்பும் விழிகளுடன் அவனைப் பார்த்தவாறு.

''இவ்வளவு சீக்கிரத்தில் ஜீப் வசதி கிடைக்குமென்று நானும் எதிர்பார்க்கவில்லை'' என்றான் குமரன்.

''ஏன் காப்டன்! நீங்கள் எங்கள் விருந்தாளியாக நாலைந்து நாட்களாவது தங்கி விட்டுப் போகலாமல்லவா?'' என்று கேட்டார் மேஜர் ரகுநாத்.

''சரிதான் .... முழு ஆரோக்கியத்துடன் வந்திருப்பவனை ஆஸ்பத்திரியில் முடக்கிப் போடத் திட்டம் போட்டு விட்டீர்கள் போலிருக்கிறது!'' என்று சிரித்தான் குமரன்.

''எங்கள் வீட்டு விருந்தாளியாக இருக்கச் சொன்னேனே ஒழிய ஆஸ்பத்திரி விருந்தாளியாக இல்லையே'' என்று தாமும் சிரித்தவாறு கூறினார் மேஜர் ரகுநாத்.

''எங்கள் சமையல்காரன் அப்படியெல்லாம் உங்கள் ஆரோக்கியத்தைக் கெடுத்து விடமாட்டான். நளபாகமாயிருக்கும் அவன் சமையல்'' என்றாள் அகிலா.

''அப்படியானால் சரி. வீட்டுச் சாப்பாடு சாப்பிடுவதற்காக எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் தங்க நான் தயார். ராணுவ முகாம்களில் கூட்டச் சாப்பாடு சாப்பிட்டுச் சாப்பிட்டுப் போதும் போதுமென்று ஆகி விட்டது!'' என்றான் குமரன்.

ஆஸ்பத்திரிக் காம்பவுண்டிலேயே டாக்டருக்காகச் சிறிய வீடு கச்சிதமாய் அமைந்திருந்தது. அதன் மாடியறையில் குமரன் சௌகரியமாகத் தங்கியிருப்பதற்கான எல்லா வசதிகளும் இருந்தன. வெளியே வந்து உட்கார்ந்து காற்று வாங்குவதற்கான பால்கனி அமைப்புக்கும் குறைவில்லை. இவ்வளவெல்லாம் இருந்தும், அந்த வீடு ஆஸ்பத்திரிக்குப் பின்புறம் அமைந்திருந்ததால் குமரனின் மனம் அங்கே அதிகமாகப் பொருந்தவில்லை. மலைக் காட்சிகளைப் பார்க்க விடாமல் ஆஸ்பத்திரிக் கட்டடம் முன்னே மறைத்த போது பால்கனி அமைப்புக்கே அர்த்தமில்லையல்லவா? அதனால்தான் குமரன் ஓய்வாக உட்கார்ந்திருக்க நினைத்த போதெல்லாம் ஆஸ்பத்திரியில் தனக்குப் பழக்கமான பழைய பால்கனியையே நாடி வந்துகொண்டிருந்தான்.

அங்கு வந்த மூன்றாம் நாள் மாலை நேரத்தில் அந்தப் பால்கனியில் அமர்ந்து இமயத்தின் வெள்ளிச் சிகரங்கள் தங்கமயமாக மாறிக்கொண்டிருந்த காட்சியில் குமரன் நெஞ்சைப் பறி கொடுத்திருந்த சமயம் அகிலா அங்கே வந்து சேர்ந்தாள்.



''எங்க ஆபீசில் ரெண்டு லேடி டைப்பிஸ்ட்டுக்கும் சண்டை. ஒரே கூச்சல் சத்தமாக இருந்தது. நான் தலையிட்டுச் சமாதானப் படுத்தினேன்.''

''பேஷ்! இப்ப அமைதியாய் இருக்கா?''

''நாசமாய்ப்போச்சு! ரெண்டு பேரும் ஒரே பேச்சும் சிரிப்பும்; கும்மாளமுமாயிருக்காங்க. அவங்க அடிக்கிற கூத்திலே ஆபீசில் ஒரு வேலையும் ஓடமாட்டேங்குது.''

கலகலவென்று சிரித்துக் கொண்டே அவனெதிரே உட்கார்ந்த அவள், ''ஏது காப்டன், எங்கள் வீட்டு விருந்தாளியாக இருப்பதைவிட இந்த ஆஸ்பத்திரி விருந்தாளியாயிருப்பதுதான் உங்களுக்கு அதிக விருப்பமாயிருக்கிறதா?'' என்றாள்.

''மன்னிக்க வேண்டும், மிஸ்டர்! நான் இந்த ஆஸ்பத்திரி விருந்தாளியாகவிருந்த நாட்களின் இன்பமான நினைவுதானே மறுபடியும் என்னை இங்கே இழுத்து வந்திருக்கிறது. அந்த நினைவுக்கும் இந்தப் பால்கனிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு இல்லையா?'' என்று சிரித்தான் குமரன்.

''உண்மைதான். நீங்கள் இங்கிருந்து புறப்பட்டுச் சென்ற பிறகுகூட பல நாட்கள் வரை இந்தப் பால்கனிப் பக்கம் வரும்போதெல்லாம் நீங்கள் இங்கே உட்கார்ந்திருப்பது போன்ற பிரமைதான் எனக்குத் தோன்றும்'' என்றாள் அகிலா.

மாலைக் கதிரவன் இமயச் சிகரங்களில் தீட்டியிருந்த தங்க மெருகு மெள்ள மெள்ள மங்கிக் கொண்டிருந்தது. பாதரசத்தைப் பூசியது போன்ற சாம்பல் தோற்றம் அவற்றின் மீது படியத் தொடங்கியிருந்தது.

குமரன் பெருமூச்செறிந்தான். ''இன்னும் கொஞ்ச நேரம் போனால் இந்தச்

சிகரங்களெல்லாம் இருண்ட நிழல் சிகரங்களாக மாறி விடும். நெஞ்சை யள்ளிய கம்பீரமான அழகு நெஞ்சைப் பிழியும் சோக சித்திரமாக மாறி விடும்'' என்றான்.

''அதுவும் ஓர் அழகுதானே ! சோகமும் சேரும் போது இவற்றின் தனிமையில் ஒரு தனிக் கவர்ச்சி ஏற்பட்டு விடுகிறதல்லவா ?'' என்றாள் அகிலா.

'' உண்மைதான் ! அதனால்தான் எங்கும் இருள் சூழ்ந்தபிறகுகூட இங்கிருந்து எழுந்திருக்க எனக்கு மனம் வருவதில்லை'' என்றான் குமரன்.

அந்தியின் சாம்பல் சாயை மறைந்து எங்கும் கருமை படரத் தொடங்கியிருந்தது. பலவிதமான பறவைகள் இரவுக்கான அடைக்கலத்தை நாடிக் கூட்டம் கூட்டமாகப் பறந்து சென்று கொண்டிருந்தன. எங்கிருந்தோ ஒற்றை நரியொன்று ஊளையிடத் தொடங்கியிருந்தது.

சட்டென்று அகிலா மௌனத்தைக் கலைத்தாள். ''காப்டன், நான் ஒன்று சொல்வேன், தவறாயிருந்தால் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்!'' என்று ஆரம்பித்தாள்.

''என்ன ஸிஸ்டர்?''

''இந்த இமயச் சிகரங்களைப் பார்க்கும் போதெல்லாம் உங்கள் தனிமை உணர்ச்சியைப் பற்றி நீங்கள் கூறியது தான் என் நினைவுக்கு வரும். ஆனால் இவற்றைப் போலவே உங்கள் தனிமை உணர்ச்சியிலும் இன்னதென்று சொல்ல முடியாத ஒரு சோகம் கலந்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறதே, ஏன்?''

''அதாவது என்னுடைய தனிமை உணர்ச்சியிலும் ஒரு தனிக் கவர்ச்சி இருக்கிறதென்று சொல்கிறீர்கள் !'' என்று சிரித்தான் குமரன்.

''உங்கள் கேலிப் பேச்சும் சிரிப்பும் கூட அந்தச் சோகத்தை மூடி மறைக்கும் முகமூடி என்பதைத் தவிர வேறு என்ன ?''

''உண்மைதான். மற்றவர் மனம் நோகாமல் இருப்பதற்காக மனிதன் எத்தனையோ முகமூடிகளைப் போட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவற்றில் இதுவும் ஒன்று என்று வைத்துக் கொள்ளுங்களேன்.''

''தயவுசெய்து அந்த முகமூடியைக் கொஞ்சம் கழற்றி வைத்து விட்டுக் கொஞ்ச நேரம் மனம் விட்டுப் பேசக் கூடாதா? நாளைக்கே இங்கிருந்து புறப்படப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அதற்குள் உங்கள் மனத்தை வாட்டிக் கொண்டிருக்கும் சோகம் என்னவென்பதை அறியா விட்டால்.....''

''அறியா விட்டால்....?''

''எப்படிச் சொல்வது? நீங்கள் இங்கிருந்து சென்ற பிறகு என் மனம் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும்.''

''அறிந்து கொண்டால் மட்டும் வேதனைப்படாதா ?''

''அறிந்து கொண்டால் அதற்குப் பரிகாரம் தேட முடியுமே.''

''அது அவ்வளவு சுலபமில்லை, ஸிஸ்டர்!'' என்று சற்று வறண்ட சிரிப்புடன் கூறினான் குமரன்.

''தயவுசெய்து என்னை ஸிஸ்டர் என்று அழைக்காதிருங்களேன்.''

''ஏன்.... எல்லோரும் அப்படித் தானே உங்களை அழைக்கிறார்கள் ?''

''எல்லோரையும் போல்தானா நீங்களும் ? உங்கள் வாயிலிருந்து அந்த வார்த்தையைக் கேட்கும் போது எனக்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது, தெரியுமா ?''

''வேறு எப்படி அழைப்பது ?''

''ஏன், பெயரைச் சொல்லி அழைக்கக் கூடாதா ?''

''உங்களைப் பெயர் சொல்லி அழைப்பதாவது ? அவ்வளவு உரிமை நான் எடுத்துக் கொள்ளலாமா ?''

''அதாவது, எங்களிடம் அவ்வளவு பேதம் பாராட்டிக் கொண்டிருக்கிறீர்கள்? அப்படித்தானே?''

''அப்படியில்லை. பேதம் பாராட்டுவதாயிருந்தால் இவ்வளவு நாட்கள் உரிமையுடன் உங்கள் விருந்தாளியாகத் தங்கியிருப்பேனா? உங்கள் குடும்பத்தில் ஒருவனாக நினைத்து என்னிடம் அன்பு செலுத்துகிறீர்கள் என்பதை நான் மனப்பூர்வமாக உணர்கிறேன். ஆனால் அதற்காக மரியாதையை மீறிய உரிமையை நான் எப்படி எடுத்துக் கொள்ள முடியும் ?''

''சரிதான் மரியாதையின் எல்லையிலேயே நின்று கொண்டிருப்பதால் தான் மனம் விட்டுப் பேசவும் மறுக்கிறீர்களா ?''

'' நான் மனம் விட்டுப் பேசினால் உங்களுக்குத் துன்பத்தைத் தவிர வேறில்லை. மனத் துன்பத்தோடு மருகிக் கொண்டிருப்பவன் வேறு எப்படிப் பேச முடியும்?''

''மனத்தில் என்ன துன்பம் இருந்தாலும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டால் சற்றுக் குறையுமல்லவா?'' என்றாள் அகிலா.

''அதை நான் மறுக்கவில்லை. அந்த அளவுக்கு உங்களுக்குத் துன்பம்

விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு

வலியை அதி வேகமாக வெளியேற்ற

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'

இப்பொழுது முதன்முதலாக இந்தியாவில் வழங்கப்படுகிறது

வலிதான் எங்கள் பிரச்னை : [illegible]

மைக்ரோஃபைன்ட் என்றால் என்ன? [illegible]

வேகமாகச் செயல்புரிகிறது—நீடித்த பயனைத் தருகிறது [illegible]

உட்கொள்ளக் கலமானது: [illegible]


கீழ்க்கண்ட வகைகளுக்கு புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள் : [illegible]

சாப்பிடும் அளவு: [illegible]

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' செயல்புரியும் விதம்



[illegible]



[illegible]

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதிதீவிரமான வலிநிவாரணியாகும்.






புதிய


மைக்ரோஃபைன்ட்

'ஆஸ்ப்ரோ'

அதி வேகமாக
வலியை வெளியே
இழுத்துவிடுகிறது

நிகோலஸ் (N) தயாரிப்பு





கொடுப்பதாக முடியுமே என்றுதான் தயங்குகிறேன்'' என்றான் குமரன்.

''அப்படியே வைத்துக் கொண்டாலும் உங்கள் மன நிம்மதிக்காக நான் சிறிது துன்பத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாதா?'' என்று அகிலா சற்று வேதனையுடன் கேட்டதும் குமரனால் மறுக்கச் சொல்ல முடியவில்லை.

''சரி, அதைச் சொல்வதால் ஏற்படும் துன்பத்தை விடச் சொல்லாமலிருந்தால் உங்களுக்கு அதிகத் துன்பம் ஏற்படும் போலிருக்கிறது'' என்று ஆரம்பித்த அவன், வள்ளியைத் தன் வாழ்க்கைத் துணைவியாக அடைய விரும்பியதையும், அந்த விருப்பம் நிறைவேறாமற் போன விதத்தையும் பற்றிச் சுருக்கமாகக் கூறினான்.

அவன் கூறியதைக் கேட்கக் கேட்க அகிலாவின் முகத்தில் ஒருவித வாட்டம் தோன்றியது. சிறிது வேதனையுடன் கேட்டாள். ''அந்த ஏமாற்றத்தை மறப்பதற்காகத்தான் ராணுவ சேவையில் சேர்ந்தீர்களா ?''

''அதிலும் எனக்குத் தோல்விதான். மூன்று வருஷங்களாக எந்த மறதியைத் தேடியலைகிறேனோ, அது என்னை நெருங்காமல் எட்டியே போய்க் கொண்டிருக்கிறது'' என்று பெருமூச்செறிந்த குமரன் சட்டென்று மௌனமானான். அகிலாவும் ஒன்றும் பேசாமல் அவனது முகத்தையே பார்த்தவாறு உட்கார்ந்திருந்தாள்.

சட்டென்று குமரன் தனது எண்ணங்களின் போக்கில் கூறினான். ''வள்ளியிடம் எனக்கு ஏற்பட்ட பாசம் சாதாரணப் பாசமல்ல. அதை உயிர்ப் பாசம் என்று சொன்னாலும் தவறில்லை. என் உயிர்த் துணையாகவே அவளுக்கு என் இதயத்தில் இடமளித்தேன். ஆனால் அந்த விஷயத்தில் எனக்கு ஏமாற்றம் ஏற்படும் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அதனால் தானோ என்னவோ அந்த ஏமாற்றம் அழியாத் துயரமாக என் மனத்தில் பதிந்து விட்டது.''

''அவ்வளவுதூரம் உங்கள் மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டுவிட்ட அந்தப் பெண்ணை நினைத்து எனக்குப் பொறாமையாகக்கூட இருக்கிறது'' என்று அகிலா கூறியதும் குமரன் சிரித்து விட்டான்.

''உங்களுக்கு என்ன பொறாமை?''

''அர்த்தமில்லாத பொறாமைதான், வேறென்ன?'' என்று தானும் சிரித்து மழுப்பினாள் அகிலா. ''ஆனால் காப்டன், நீங்கள் இப்படியே இருப்பது கொஞ்சமும் சரியில்லை'' என்றாள் சட்டென்று.

''என்ன செய்ய வேண்டும்?''



''எதற்கு உன் கணவர் அப்படிக் குதிக்கிறார் ?''

''இரண்டு ஓட்டு அவருக்கு விழுந்திருக்காம், அந்த ஆனந்தம் தான் !''

''உங்கள் அந்தஸ்துக்குத் தகுந்த பெண்ணைப் பார்த்து உங்கள் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டு நீங்கள். சந்தோஷமாயிருக்க வேண்டுமென்பதுதான் என் ஆசை'' என்று அவள் கூறிய போது அவளையும் அறியாமல் அவள் கண்களில் கண்ணீர் துளித்து நின்றது.

குமரன் சிரித்துக் கொண்டே கூறினான். ''உங்கள் ஆசை நிராசையாகத்தான் முடிய வேண்டியிருக்கும். வள்ளியின் இடத்தில் வேறெந்தப் பெண்ணையும் கற்பனை செய்து பார்க்கக்கூட என் மனம் ஒரு போதும் சம்மதிக்காது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.''


''சரியான மற்று நீங்கள்! உங்கள் லைா ஒரே நாளில் உங்களைத் தூக்கியெறிந்துவிடவில்லையா ?''

''அவள் என்ன செய்வாள் பாவம். அண்ணனின் முரட்டுத்தனத்துக்கு அவள் பணிந்து போக வேண்டியிருந்தது. எனக்கு அப்படிப்பட்ட நிர்ப்பந்தம் எதுவும் இல்லையே !'' என்று சிரித்தான் குமரன்.

''விசித்திரமான மனிதர் நீங்கள்'' என்று பெருமூச்செறிந்தாள் அகிலா.

''அகிலா.... அகிலா....!'' என்று அழைத்துக் கொண்டே அங்கு வந்தார் மேஜர் ரகுநாத். அவர் கூடவே ராணுவ உடையிலிருந்த இன்னொரு மனிதரும் வருவதைக் கண்டதும் அகிலா, குமரன், இருவருமே எழுந்து நின்றனர்.

(தொடரும்)



காப்பிக்கு 144

முகுந்தன்

என் : புவிபி 18506—66-67

கூட்டுறவு இலாகா,
புள்ளி விவரப் பிரிவு
21 — 12 — 66

அக்கௌண்ட்ஸ் பிரிவு,
கூட்டுறவு இலாகா

அக்கௌண்ட்ஸ் ஆபீசர் கேட்டுக்கொண்டபடி இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் அக்கௌண்ட்ஸ் பிரிவில் வேலை பார்க்கும் ஊழியர்களின் அரைத்தையிலுலும் மொத்தனத்திரு நாம் எத்தனை 'மனித—மணி' (Man-Hours) நஷ்டமாகிறது என்ற விவரங்களைச் சேகரிக்கிறார்கள். மேற்படி விவரங்கள் பு. வி. பி. நமூனு 361ல் பதிவு செய்யப்பட்டுக் காலக் கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும். நமூனுவின் அபிட்டம் 19க்கு உங்கள் கவனம் ஈர்க்கப் படுகிறது. உங்கள் பிரிவைச் சேர்ந்த ஊழியர்கள் ஐந்து பேர் (கிளாஸ் 3-ல் ஒருவர் : கிளாஸ் 4-ல் நால்வர்) தினமும் காலை வேளைகளில் காப்பி அல்லது டீ தயாரித்து வழங்குவதற்கென மொத்தம் 128 நிமிடங்கள் செலவிடுவதாகத் தெரிய வருகிறது. உடனே இந்த விஷயத்தை ஆராய்ந்து எப்படி இத்தனை நிமிடங்கள் சேதமடைகின்றன என்பதைக் குறித்து ஒரு தாக்கீது சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

....

— 2 —

என் : அ. பி. 23247—66-67

கூட்டுறவு இலாகா,
அக்கௌண்ட்ஸ் பிரிவு
23 — 12 — 66

புள்ளி விவரப் பிரிவு
கூட்டுறவு இலாகா

தங்கள் 21—ம் தேதியிட்ட குறிப்பு.

மேற்படிக்குப் பதிலாக நாங்கள் கூற விரும்புவது என்னவென்றால் :

காப்பி அல்லது டீ தயாரிக்கப்படுவதற்கு 128 நிமிடங்கள் செலவிடப்படுகிறது என்பது உண்மைதான் என்று ஒப்புக் கொள்கிறோம். அதற்கான முழு விவரங்களுமாவது :

ஒரு குமாஸ்தா (கிளாஸ் 3) பானங்களுக்காகப் பணத்தைப் பெற்றுக் கொண்டு, பாக்கிச் சில்லறையும் 'டோக்கன்'களும் தருகிறார். இதற்கென அவர் செலவிடுவது : 24 நிமிடங்கள்.

ஒரு பியூன் (கிளாஸ்—4) குமாஸ்தாவிடமிருந்து எத்தனை கப் காப்பி அல்லது டீ தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு போய், காஸ் அடுப்பைப் பற்ற வைத்துப் பாத்திரத்தை அடுப்பில் வைத்துத் தண்ணீர் ஊற்றுகிறார். பிறகு காப்பித் தூள் அல்லது தேயிலைத் தூளைப் போட்டுவிட்டுக் கோப்பைகளைக் கழுவி எடுத்துக் கொண்டு வருகிறார். இதற்காக அவர் செலவிடுவது : 31 நிமிடங்கள்.

இரண்டு பியூன்கள் (கிளாஸ்—4) காப்பி அல்லது டீ தயாரானதும் கோப்பைகளில் எடுத்து ஊற்றி (சில சமயங்களில் ஆற்றவும் வேண்டியிருக்கிறது.) ஒவ்வொரு நபரிடமும் கொடுத்து, அவர் குடித்து முடித்தானபிறகு கோப்பைகளைத் திரும்பவும் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். இதற்காக அவர்கள் செலவிடும் நேரம் : 47 நிமிடங்கள்.

மேற்படி காரியங்கள் எல்லாவற்றையுமே பொறுப்புடனும் நிதானத்துடனும் செய்ய வேண்டியிருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். எந்தக் கட்டத்திலும் அநாவசியமாக நேரச் சேதம் ஏதுமில்லை என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

....

— 3 —

*என் : பு. வி. பி. 19246—66-67

கூட்டுறவு இலாகா,
புள்ளி விவரப் பிரிவு
28 — 12 — 66

அக்கௌண்ட்ஸ் பிரிவு,
கூட்டுறவு இலாகா

அ.பி. 23247—66-67 கிடைக்கப் பெற்றதைத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தங்கள் விளக்கத்தில் மொத்தம் நான்கு ஊழியர்களைப் பற்றிய விவரமே காணப்படு



றதென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அத்துடன் தாங்கள் கொடுத்துள்ள கணக்குப்படி மொத்தம் 102 நிமிடங்கள் தான் சேதமாவதாகத் தெரிகிறது.

ஐந்தாவது நபரும் 26 நிமிடங்களும் எந்தக் கணக்கில் சேரும் என்பதை உடனடியாக இந்தப் பிரிவுக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது

....

— 4 —

எண் : அ. பி. 23792–66-67

கூட்டுறவு இலாகா,
அக்கௌண்ட்ஸ் பிரிவு
30 – 12 – 66

புள்ளி விவரப் பிரிவு,
கூட்டுறவு இலாகா

தங்கள் பு. வி. பி. — 19246.

எங்கள் முந்தைய விளக்கத்தில் ஒரு சிறு தவறு நேர்ந்து விட்டது. பின்கண்டதையும் விளக்கத்தில் சேர்த்துக் கொள்ளவும்:

''ஒரு பியூன் காஸ் அடுப்பிலுள்ள பாத்திரத்தில் தண்ணீர் கொதி நிலைக்கு எப்போது வருகிறது என்பதைக் கண்காணித்துக் கொண்டு பக்கத்திலேயே நிற்கிறார். தண்ணீர் கொதிக்கத் தொடங்கியதும் கோப்பைகளைக் கழுவிக் கொண்டிருக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் பியூனைக் கூவியோ, கைதட்டியோ அழைக்கிறார். இதற்காக அவர் செலவிடுவது: 26 நிமிடங்கள்.''

தவறு வருந்துகிறது.

....

— 5 —

எண் : பு. வி. பி. 19648–66-67

கூட்டுறவு இலாகா,
புள்ளி விவரப் பிரிவு
5 – 1 – 67

தங்கள் விளக்கத்துக்கு விளக்கம் கிடைக்கப் பெற்றோம். எல்லாவற்றையும் சேர்த்துப் படித்த பிறகு நாங்கள் சொல்ல விரும்புவதாவது :

நம்முடைய சக்தியை யெல்லாம் திரட்டி, முழுமூச்சுடன் பாடுபட வேண்டிய இந்தச் சந்தர்ப்பத்தில், உங்கள் பிரிவைச் சேர்ந்த எட்டுப் பேர்களுக்கென காப்பி அல்லது டீ தயார் செய்வதில் 128 நிமிடங்களைச் செலவிடுவதென்பது அநியாயம். உடனே இதை நிறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும். இனி காப்பி அல்லது டீ தயார் செய்யப்படக் கூடாது என்பதை அறியவும்.

பின் குறிப்பு : 'தவறுக்காக வருந்துகிறோம்' அல்லது 'தவறு வருந்தப்படுகிறது' என்று இருக்க வேண்டுமே தவிர, 'தவறு வருந்துகிறது' என்று அதன்மேல் பழியைப் போடக் கூடாது என்பதையும் அறியவும்.

....

— 6 —

எண்: அ. பி. 24123–66-67

கூட்டுறவு இலாகா,
அக்கௌண்ட்ஸ் பிரிவு
9 – 1 – 67

புள்ளி விவரப் பிரிவு,
கூட்டுறவு இலாகா

தங்கள் சமீபத்திய குறிப்பு கிடைக்கப் பெற்றோம்.

இத்தனை நாட்கள் வரை தாங்கள் தவறாக எண்ணிக் கொண்டிருந்திருக்கிறீர்கள் என்பது மேற்படி குறிப்பிலிருந்து தெளிவாகியது.

காப்பி அல்லது டீ தயாரிக்கப்படுவது எங்கள் பிரிவைச் சேர்ந்த எட்டு பேர்களுக்காக மட்டுமல்ல; உங்கள் பிரிவைச் சேர்ந்த பன்னிரண்டு பேர்களுக்கும் சேர்த்துத்தான் என்பதை அறியவும்.

எப்படியும், தங்கள் உத்தரவுப்படி, நாளை முதல் மேற்படி பானங்களைத் தயார் செய்ய வேண்டாமெனக் குறிப்பிட்ட நபர்களுக்குத் தகவல் தெரிவிக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

அத்துடன் இந்த விஷயம் பற்றிய கடிதப் போக்குவரத்துக்காக இது வரை மொத்தம் 39 நிமிடங்கள் செலவாகியிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

....

— 7 —

எண் : 19721–66-67

கூட்டுறவு இலாகா,
புள்ளி விவரப் பிரிவு
9 – 1 – 67

அ வ ச ர ம்


எங்கள் பிரிவுக்கும் சேர்த்துத்தான் காப்பி டீ தயாரிக்கப்படுகிறது என்பது தெரியப் பெற்றோம். மிக்க நன்றி.

தயவுசெய்து இந்த நடைமுறையை நீடிக்க வேண்டுகிறோம். தடை போட்டுவிட வேண்டாம்.

....



சளியை அறவே அகற்ற புதிய சக்தி



அனோலியம்

மற்றெந்த மருந்தையும் விட அதிகப் பயன் தருவது

துரித நிவாரணம்
சருமத்தினுள் சீக்கிரத்தில் செல்கிறது

கறை ஏற்படுத்தாதது
பிசுக்குத் தன்மையும் குறைவே

மென்மை மிக்கது
பச்சைக் குழந்தைகளின் பூவுடலுக்கும் கூட உகந்தது

அனோலியத்தை உபயோகிக்கும் முறை

1. மார்பில் தடவித் தேய்க்கவும்
2. கழுத்தில் பூசிக்கொள்ளவும்
3. மூக்கின் இருபுறமும் தடவவும்
4. அனோலியத்தை வெந்நீரில் கரைத்து, அதன் ஆவியை உள்ளிழுக்கவும்

சளி பிடிக்கும்வரை காத்திராதீர் - இன்றே அனோலியம் வாங்குங்கள்

படித்துப் பாருங்கள்

ஸ்ரீமத் அப்பய தீக்ஷிதேந்திரர் ஜயந்தி மலர்

பொதுவாக சநாதன சமயம் முழுவதற்கும் குறிப்பாக அத்வைதத்துக்கும் அருந்தொண்டாற்றியுள்ள மகான் அப்பய தீக்ஷிதரவர்களைக் குறித்த அரிய மலர் இது. ஸ்ரீ தீக்ஷிதரவர்களைப் பற்றி ஸ்ரீ காமகோடி பெரியவாள் நிகழ்த்திய நீண்ட உரையும், தீக்ஷிதர் அருளிய பல துதிகளும், பேரறிஞர்களின் கட்டுரைகளும் இதில் அடங்கியுள்ளன. தீக்ஷிதரவர்கள் வாழ்ந்து, சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் ஆலயம் எடுத்த அடையபலத்தில் அவரது ஜயந்தியைப் பிரதி வருடமும் கொண்டாட மூலதனம் சேகரிக்கப்பட்டு வருகிறது. இதற்குப் பொருள் உதவும் அன்பர்களுக்கு மலர் அனுப்பி வைக்கப்படும். பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ ஏ. துரைசாமி தீக்ஷிதர், அடையபலம், மாமூர் போஸ்ட், ஆரணி வழி, வடார்க்காடு மாவட்டம்.

திருவிளையாடல்

மதுரையம்பதி பலவிதத்திலும் புகழ் பெற்று விளங்குவது. அவற்றுள் ஆலமுண்ட நீலகண்டப் பெருமான் அதில் உலகோரும் உய்யும் பொருட்டுத் தெய்விகத் திருவிளையாடல்களை மதுரையில் நிகழ்த்திய பெருமை தனிச் சிறப்பு வாய்ந்ததாகும்.

பிறை சூடிய பெருமானின் திருவிளையாடல்களின் பெருமையைப் பாட்டாக்கித் தந்தவர் பரஞ்சோதி முனிவர். அவர் இயற்றிய திருவிளையாடற் புராணம் அழகிய கவிதைகளைக் கொண்டது. இயற்கை வர்ணனைகளை எழிலுற எடுத்தியம்பியிருப்பதோடு இறைவனின் திருவருள் திறனையும் சிறப்பாகக் கூறியிருக்கிறார் பரஞ்சோதி முனிவர். அந்த நூலை எல்லாரும் படித்து இன்புற வேண்டும் என்னும் பக்தி யுணர்வோடு இனிய எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது இந்நூல்.

பழமையான கதைகளை யாவரும் படித்து மகிழ உரை நடையில் வெளியிட்டிருப்பது பாராட்டப்பட வேண்டிய தொண்டு. செய்யுள் வடிவத்தில் உள்ள நூலை எல்லோராலும் படித்துத் தெரிந்து கொள்ள இயலாது. ஆகவே, இத்தகைய உரைநடை நூல் இன்றியமையாததாகும்.

திருவிளையாடற் புராணத்தை முன்னமே வசன நூலாகச் சில புலவர்கள் எழுதியிருக்கிறார்கள். இந்நூலாசிரியர் ''பெருரான்'' இக்காலத்தவர்களை மனத்திற் கொண்டு மிக எளிமையான சொற்களைக் கொண்டு படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் சுவையாக எழுதியிருக்கிறார்.

இந்த நல்ல நூலை நல்ல முறையில் வெளியிட்டிருக்கிறார்கள். தமிழுணர்வையும், கடவுள் பக்தியையும் ஒருங்கே வளர்க்கும் இத்தகைய நூல்கள் எல்லோராலும் வரவேற்கத் தக்கவை.

எழுதியவர்: ''பெருரான்''; பிரசுரம்: வானதி பதிப்பகம்; தியாகராய நகர், சென்னை—17; விலை: ரூ. 3.00.

மகா கவியின் உருவப் படம்

'பாட்டுக்கொரு புலவன்' என்று பாராட்டிக் கூறப்படும் மகா கவி பாரதியாரை வீட்டுக்கு ஒரு படம் வைத்துக் கௌரவிக்க வேண்டியது தமிழர்களின் தலையாய கடமை. ஓவியர் ''ஆர்யா'' (கே. பாஷ்யம்) அவர்களால் வரையப்பட்டுள்ள பாரதியாரின் உருவப் படம் (23''×18'') பெரிய அளவில் நல்ல அழுத்தமான ஆர்ட் தாளில் அற்புதமாக அச்சிடப்பட்டுள்ளது. புகழுடம்பு பெற்றுவிட்ட மகா கவியின் பூத உடலையே நம் கண் முன் நிறுத்தினாற் போலிருக்கிறது.

படத்தின் விலை: ரூ. 2.50. அட்டையில் ஒட்டியது: விலை: ரூ. 3.00. கிடைக்கும் இடம்: யுனைடெட் ஆர்ட்ஸ், நெ. 8, லிங்க செட்டித் தெரு, சென்னை—28.

ஸ்ரீ காஞ்சி காமாக்ஷியின் சிறப்பு

ஸ்ரீ ஞானந்த மண்டலியைச் சேர்ந்த ஸ்ரீவித்யோபாஸகரும் மந்த்ர சாஸ்திர பிரேஷ்டருமான ஸ்ரீ வி. வி. ஸ்வாமி சாஸ்திரிகளால் எழுதப்பட்ட இச் சிறிய நூல் மூன்று பகுதிகளாக அமைந்திருக்கிறது. அன்னை காமாக்ஷியின் நாமாவிலுள்ள ஒவ்வோர் அக்ஷரத்துக்கும் ஆழ்ந்த கருத்துக்கள் கொண்ட பல அர்த்தங்களை விளக்கும் 'காமாக்ஷி பத நிர்வசனம்' என்ற பகுதி தேவி உபாசகர்களுக்கு உற்சாகத்தை அளிக்க வல்லது. இரண்டாவது பகுதியில் அகராதிக் கிரமத்தில் ஸ்ரீ காமாக்ஷி அக்ஷர மாலை என்ற துதி சுலோகங்கள், காவிய நயங்கள் நிரம்பிப் படிப்பதற்கும், பாராயணத்துக்கும் ஏற்ற முறையில் அமைந்திருக்கின்றன. ''ஷண்மதங்களும்-ஸ்ரீ சக்கரமும்'' என்ற பகுதியில் நுட்பமான மந்திர அர்த்தங்களும், பஞ்சாயதன தேவதைகளின் மூல மந்திரங்களை கடபயாதி முறையில் கணக்கிட்டு அந்தத் தேவதைகளின் மூல மந்திர அக்ஷர சங்கியையில் கிடைக்கும் அபூர்வ விஷயங்களும் 51 ஸ்ரீ வித்யா மாத்ருகா பீடங்களின் க்ஷேத்திரங்களும் விவரிக்கப்பட்டுள்ளன. இந்நூலின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருவாயை ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி தேவிக்குச் சந்திர கலை அணிவிக்கும் புனிதப் பணிக்குச் செலவிட ஆசிரியர் சங்கல்பம் செய்து கொண்டிருக்கிறார். ஆஸ்திகர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் நூல்.

கிடைக்குமிடம் : சிந்தாமணி ராமக்ருஷ்ணம், 8, கிருஷ்ணபுரம், கோடம்பாக்கம், சென்னை-24 விலை : ரூபாய் ஒன்று.

வட்ட மேஜை

★ தேசியக் கொடிக்கு மதிப்பு தருக]

★ இழி செயல்

★ விசித்திர தண்டனை

நாட்டின் கௌரவத்தைப் பாதுகாக்கும் தேசியக் கொடிக்கும் காங்கிரஸ் கட்சிக் கொடிக்கும் வித்தியாசம் தெரியாது போய் விட்டது. மதுரை மேல மாசி வீதியில் கடந்த ஒரு வார காலமாகத் தேசியக் கொடியில் காளை மாட்டுச் சின்னத்தில் முத்திரை இடுவது போன்று படம் ஒட்டப்பட்டு இன்னும் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கிறது. காங்கிரஸ் தன் கட்சிக் கொடியை மாற்றி யமைத்துக் கொள்ள வேண்டும்.

மதுரை
30-1-67 — வெ. பரசுராமன்


எனது ஊரில் காங்கிரஸ் கட்சியினர் குடியரசு தினத்தைத் தங்கள் கட்சியின் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்திக் கொண்ட வெட்கக்கேட்டை என்னவென்று சொல்வது! பள்ளிச் சிறுவர்களின் கையில் காங்கிரஸ் கட்சியின் கொடிகளைக் கொடுத்து ஊர்வலமாக அனுப்பினர். இரண்டு கூலிக்காரர்களைப் பிடித்து மூவர்ணக் கொடிகளைச் சட்டையாகவும் பைசாமாவாகவும் தைத்து அவர்களுக்குப் போட்டு, தலையில் கதர்க் குல்லாய் அணியச் செய்து, ''உங்கள் ஓட்டு காங்கிரசுக்கே'' என்று கோஷமிட வைத்து ஊர்வலம் நடத்திய காட்சி கன்னராவியாக இருந்தது. அந்தக் கோமாளிகள் போட்டுக் கொண்டிருந்த மூவர்ணச் சட்டை பைசாமாவை அவர்களின் கட்சிக் கொடி என்று நினைப்பதா? அல்லது நமது தேசியக் கொடி என்று எண்ணுவதா? இந்த இழி செயலை இவ்வூரில் உள்ள உயர் அதிகாரிகளோ, போலீஸ் அதிகாரிகளோ தடுத்து நிறுத்தவில்லை.

திருத்துறைப்பூண்டி
31-1-67 — எஸ். மாரியையன்

கோத்தாரி கல்விக் கமிஷனின் சிபாரிசுப்படி கல்லூரி ஆசிரியர்களுக்குக் கணிசமான அளவுக்குச் சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்கது.

ஆனால் ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆகிய கல்வி நிலையங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு இதுவரையும் அவ்வறிக்கையின்படி ஊதியம் உயர்த்தப்படவில்லை என்பது வருந்தத் தக்கது. இன்னொரு வேதனை அளிக்கும் செய்தி யாதெனில், பி. ஏ. பாஸ் செய்த கல்லூரி டியூட்டர் தற்பொழுது கல்லூரி ஆசிரியர்களுக்கு உயர்த்தப்பட்டுள்ள சம்பள விகிதப்படி ரூ. 200 அடிப்படைச் சம்பளம் பெறுகிறார். ஆனால் பி.ஏ.,பி.டி. பாஸ் செய்த பள்ளி ஆசிரியர் தற்பொழுது சம்பளப்படி ரூ. 140 அடிப்படைச் சம்பளம் பெற்று வருகிறார். ஆக பி. ஏ. பாஸ் செய்த பிறகு ஆசிரியத் தொழிலுக்காக வேண்டி ஒரு வருடம் அதிகம் பயிற்சி பெற்றதால் அவருக்கு ரூ. 60 சம்பளத்தில் குறைவு! இது ஒரு விசித்திரமான தண்டனை அல்லவா?

கோயமுத்தூர்-9
4-2-67 — வெ. இராமலிங்கம்



இத்துடன் அனுப்பியுள்ள படத்தை நன்றுகப் பாருங்கள்! இதைப் பார்ப்பவர்களுக்குக் காங்கிரஸ் கட்சிக்காக அரசாங்கம்தான் தேர்தல் அலுவலகம் திறந்திருக்கிறது எனச் சந்தேகப்படும்படியாக—இல்லை, தேசியக்கொடி இருப்பதால் நிச்சயமாக நம்பும்படியாக — இருக்கிறதல்லவா? சர்க்கார் செய்யாமல் காங்கிரஸ் கட்சியினர் செய்தால், அவர்கள் தேசியக் கொடியைத் தேர்தலுக்கு உபயோகப்படுத்தலாமா?

திருநெல்வேலி,
5-2-67 — 'உண்மை விளம்பி''

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.

புல்லரிக்கும் மக்ளீன்ஸ்

சுவை மூலம்

உங்கள் வாய்க்குப் புதுமலர்ச்சி புகட்டுவீர்!





மக்ளீன்ஸ்

3 வகைகளில் செயலாற்றுகிறது

1 சுத்தமாக்க – சொத்தை விழக் காரணமான உண வுத் துணுக்குகளை அகற்று கிறது.

2 வெண்மையாக்க – மங்கல் படலத்தைப் போக்கிப் பற்களுக்கு மெருகிடுகிறது.

3 காக்க – திட வலுவுள்ள ஆரோக்கியமுடன் உங்கள் பற்களைப் பராமரிக்கிறது.

அதிவெண்மையான பற்களுக்கு—

மக்ளீன்ஸ்

HTP-I-P-I-45/64 TM


உயரிய பண்போடு உபயோகிக்கவும் உதவவும் உகந்தது பனாமா
பனாமா
இழுக்க இழுக்க இன்பம் இறுதிவரை
Panama
20
CIGARETTES
கோல்டன் டொபாக்கோ கம்பெனி பிரைவேட் லிமிடெட், பம்பாய்-56.
பாரதத்தில் இத்தகைய தேசீய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது